மாத்வ மித்ரன்

புஸ்தகம் 8 மலர் 12
புஸ்தகம் 9 மலர் 1
ஜூலை, ஆகஸ்ட் 1936.

JL
21193.1c,
N35.8.12;9.1
208166

694 ரூ. 3. Regd. No. M. 24

மாத்வ மித்திரன்.

THE MADWA MITRAN.

EDITOR:
...am Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

6-AUG 1936 MADRAS

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol. 8.	தாத்ருநாம ஸம்வத்ஸரம்.	No. 12.
புஸ்தகம் 8.	ஆஷாட மாஸம். (18—7—36 பானுவாரம்).	நே. 12.

நெ.	பொருளடக்கம்.	பக்கம்.
1.	ஸ்ரீமத்வ விஜயம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்)	345
2.	ஆசாரமாலை	349
3.	அணுபாஷ்யம் (ஸ்ரீமத்வாசாரியார்)	352
4.	விதவா விவாக கண்டனம்	354
5.	அப்பைய்ய தீக்ஷிதரின் கண்டனம்	358
6.	ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்)	359
7.	வாசகர்களுக்கு வணக்கமான விக்ஞாபனம்	367
8.	விளம்பரம் (இதும் புஸ்தகங்கள் ஜாபிதா)	371
9.	மதிப்புரை	374
10.	மகரிஷிகளின் சரீர சாஸ்திரம்	375
11.	விசேஷ தினங்கள்; அறிக்கை	376

ஆசிரியர்:— ஆத்யம் பாகவத ரங்காநாதாசாரியார், கும்பகோணம்.

மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாமாகாத்மியங்கள் புராணசரித்ரைகள் மாத்வகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அமூல்ய கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்வதில் இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று பிரதி சிராவணமாதமும் இவை பத்திரிகைக்கு வருட ஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பத்திரிகைகள் அனுப்பப்படும். பழைய வால்யங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும் ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீவியாஸ விலாஸ், கும்பகோணம்.

மாத்வமித்திரன் பழைய வால்யங்கள் வெகு சொற்பம் தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

மாத்வ மித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्य जगत् , तत्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

ஸ்ரீ மத்வ விஜயம்.

(எட்டாவது ஸர்க்கம்)

ஸ்ரீ மத்வாசாரியாரின் பதரிவாஸம்.

(முன் 309ம் பக்கம் தொடர்ச்சி)

24 ஸகோதரனை லக்ஷ்மணனுடனும் விச்வாமித்திரருடனும் ர்ந்து மஹேந்திரயான ஜனக ராஜனுடைய நகரமான மிதிலா ரத்திற்கு சென்றவராய், அந்த மிதிலைக்குள் பிரவேசித்து லகில் பிரதான அழகரான ஸ்ரீராமச்சந்திரன் அந்நகரத்திய ஆண் பண்களின் மேலான கண்களுக்கு ஆனந்தத்தை அளிப்பவராய் னர். (ii) ஸகோதரனை பலராமருடன் சேர்ந்து நந்தகோபன் தலான எல்லா நண்பர்களுடனும் கூடி தன் தந்தையான வஸு தவனுக்கு பிரியமான மதுராபுரிக்கு வந்து அந்த மதுரா நகரத் ற்குள் பிரவேசித்து உலகில் முக்ய ஸுந்தரனை ஸ்ரீ கிருஷ்ணரும் துரா நகரத்திய ஆண் பெண்களின் மேலான கண்களுக்கு ஆனந் த்தை அளிப்பவராய் ஆனார். 25 மிதிலா நகரத்திற்குள் பிர வேசித்தபின் சீதா கல்யாணத்திற்கு பந்தயமாக வைத்திருந்த சிவ வில்லை விளையாட்டாக ஒடித்து, அதனால் க்ரூரமான ஸேனை டன் கூடிய ராஜகுமாரர்களின் அகங்காரத்தை நாசம் செய்த ப் சதுர்முகனுக்கு குருவாய் இருந்தபோதிலும் தன் பிராம்மண வான விச்வாமித்திரரை நன்கு ஸேவை செய்து, அவருடைய

ஆக்ஞையை பரிபாலித்து ஸ்ரீ ராமச்சந்திரன் தன்னைச்சேர்ந்த லக்ஷ்
மணாதிகளை தன் அபரிமிதமான சரீர பலத்தால் சந்தோஷப்படுத்தி
னார். (ii) ஸ்ரீ கிருஷ்ணர் மதுரைக்குள் பிரவேசம் செய்தபின்
விளையாட்டாகவே கம்ஸனைச் சேர்ந்த பரமசிவனுடைய தனுஸ்ஸை
ஒடித்து உக்ரஸேன ராஜனின் குமாரனான கம்ஸனுடைய பராக்கிர
மத்தை நாசம் செய்து அவனைக் கொன்றபின் பிரம்மாவுக்கு குரு
வாயிருந்தாலும் பிராம்மண குருவான ஸாந்தீபனி ஆசாரியாரை
நன்கு சுசுரூஷை செய்து அவரிடம் வேதாதிகளைப் படித்து தன்
அபரிமிதமான பராக்கிரமத்தால் தன் வஸுதேவர் முதலான
ஜனங்களைசந்தோஷப்படுத்தினார். 26 (i) இந்த ராமர் தாமரை இதழ்
போன்ற கண்கள் உள்ளவரும் ஜனக ராஜனின் குமாரியும் பூமியில்
அவதாரமெடுத்த மஹாலக்ஷ்மியுமான சீதா தேவியை விவாஹ
செய்து கொண்டவராய் பிறகு தன் ஊருக்குத்திரும்பும் பொழுது
வழியில் தன்னுடைய இயற்கையான பலத்தால் 18 தட இட
சத்ருக்களான ராஜர்களை ஜெயித்தவரான பரசுராமரை ஜெயித்து
சமுத்திரம் போல் சுலபமாய்க் கடக்கமுடியாததான அயோத்யா
பட்டிணத்தை அடைந்து சந்தோஷமடைந்தார். (ii) ஸ்ரீ கிருஷ்ணர்
தாமரை இதழ்போன்ற கண்கள் உள்ளவரும் பீஷ்மக
ராஜனின் மகளும் பூலோகத்தில் அவதாரம் எடுத்த மஹா லக்ஷ்மி
மான ருக்மணி தேவியை பலாத்காரமாக அபகாரம் செய்தவராய்
தன் விளையாட்டாலே ஜராசந்தன் முதலான சத்ருக்களான ராஜர்
களை ஜெயித்து சமுத்திரம் போல் கடக்கமுடியாததாயுள்ள துவா
கா பட்டணத்தை அடைந்து சந்தோஷமடைந்தார். 27 (i) இந்த
ராமர் தன் மாற்றாந் தாயான கைகேயியின் சந்தோஷத்திற்காக
என்று தண்டகாரண்ய வாசிகளான மஹரிஷிகளின் அபேக்ஷை
பூர்த்தி செய்து ராவணாதி ராக்ஷஸர்களை சம்ஹாரம் செய்
பதிவிரதையான தன் பார்யை சீதா தேவியோடும் சத்ருவை
ஜெயிக்கும் ஜெயக்கொடியே அடையாளமாக உள்ள உத்தம ப
வான லக்ஷ்மணனோடும் தனக்கு பட்டாபிஷேகமில்லாமல் போ
விட்டதே என்று துக்கமில்லாமல் வேகமாய் ஆரண்யம் சென்
(ii) ஸ்ரீ [illegible] தேவமாதாவான அதிதிதேவி
ப்ரீ[illegible] ஹிம்சிக்கப்பட்ட பதிரிகாசிரம வ

208166

ளான மஹரிஷிகளை சம்ரக்ஷிப்பதற்காக பதிவிரதையான தன்
பாரியாள் சத்யபாமா தேவியுடனும் உத்தம சிநேகிதரும்மஹா
ஜெயமுள்ள த்வஜத்தின் அடையாளமுள்ளவரான, அதாவது ஸ்ரீ
கிருஷ்ணருடைய ரதத்தின் த்வஜமாய் இருப்பவருமான கருட
னோடு கூட நரகாசுர பட்டிணம் போய்ச் சேர்ந்தார். 28 (i)
இந்த ராமர் சித்திரகூட பர்வதம் முதலிய சாமானியர்களால்
போக முடியாததான இடங்களை தாண்டி கரஸூரன் தூஷண
ஸூரன் முதலான சாது ஜன த்வேஷிகள் அநேகரை கொன்று
அவர்களை கிரமமாய் பிராரப்த கர்ம அனுபவத்தின் பின் எல்லோ
ருக்கும் காதால் கேட்பதாலேயே மகா பயத்தைத் தருவதும்
கொஞ்சமேனும் பொருக்கமாளாததுமான மஹா தமஸ்ஸாகிற
நரகத்தைப் போய்ச் சேரும்படி செய்தார். (ii) கிருஷ்ணர் நர
காசுரனுடைய பட்டிணத்திற்கு சுற்றிலும் இருந்த பர்வதங்கள்
பாசங்கள் முதலான துர்க்கங்களைக் கடந்து க்ரூரர்களாயும்
விஷ்ணு வைஷ்ணவ த்வேஷாதி தோஷங்கள் உள்ளவர்களாயும்
உள்ள சாது த்வேஷிகளான முரஸூரன் முதலான தைத்யர்
களையும் நரகாசுரனையும் கிரமமாய் கொன்று அவர்களை எல்லோ
ருக்கும் பயத்தை அளிப்பதாயும் கொஞ்சமேனும் பொருக்கமாளா
ததுமான அந்தம் தமஸ்ஸை போய்ச் சேரும்படி செய்தார். 29
(i) மிகவும் விருத்தியடைந்த ஐசுவரியாதிகளின் கர்வமும் செய்ய
வேண்டிய விஷயத்தில் மறதியும் ஆகிய மதப்பிரமாதமுள்ள தேவ
சத்ருக்களான கரதூஷணாதி ராக்ஷஸர்களை ஸம்ஹாரம் செய்ததால்
பக்தர்களின் ப்ரியரான ஸ்ரீராமர் பஞ்சவடியில் நிர்மாணம் செய்த
அழகான ஆசிரமத்தின் சம்பந்தமான விசேஷ காந்தி உள்ளவளும்
உலகில் பூஜிக்கப்படுபவளுமான சீதாதேவியுடன் சேர்ந்து நல்ல
சோபை அடைந்தார். (ii) ஸ்ரீ கிருஷ்ணரோவென்றால் ஐஸ்வரிய
மதம், நாராயணனை மறப்பது முதலான தோஷங்கள் கொண்ட
தேவர்களின் பாரிஜாத விருக்ஷத்தை அபகாரம் செய்து அவர்க
ளுடைய ஸ்வரூப க்ஞானத்தை அறிவித்து அவர்களுடைய அன்
பிற்கு பாத்திராகி மனோகரமான ஆயாஸமில்லாத யுத்தத்தில்
காட்டிய உத்தமமான பராக்கிரமமுள்ளவளும் ஜகத்தால் பூஜிக்கப்
படுபவளுமான சத்யபாமா தேவியுடன் சேர்ந்து தன் துவாரகா

புரம் வந்து சேர்ந்தார். 30 (i) ஸ்ரீராமச்சந்திரர், திக் பாலர்கள் என்ன ராஜர்கள் என்ன இவர்களுடைய சமூகத்தை அடிக்கடி ஜெயித்து இதரர்களுக்கு பயத்தை அளித்திருந்தவனும் பஞ்சவடியில் வசிக்கும்பொழுது மிகவும் சோபித்து கொண்டிருந்தவளும் தனக்கு மிக்க அன்புடையவளும் தன் பாரியமாளுன சீதா தேவியை அபகாரம் செய்த பத்து தலை கொண்ட ராவணனை உபேக்ஷை செய்தார். (ii) ஸ்ரீ கிருஷ்ணர் பத்து திக்கையும் தன் ஸ்வாதீனம் செய்துகொண்டு சத்ருக்களுக்கு பயங்கரமுள்ளதாயும் அதிகமான ஐசுவரியம் படைத்த ராஜர்களின் கூட்டத்தை ஜெயித்துக் கொண்டு வரப்பட்டதாயும் இந்திரபிரஸ்தத்தில் மிகவும் பிரகாசித்து இருந்ததாயும் தனக்கும் தன் பக்தர்களுக்கும் பிரியமுள்ளதாயும் உள்ள பாண்டவர்களுடைய ஐசுவரியத்தை சொக்கட்டான் ஆட்டம் என்னும் ஒரு சாக்கைக்கொண்டு அபகாரம் செய்த தனக்கு அப்ரியனான துரியோதனனை உபேக்ஷை செய்தார். 31 (i) வாயு குமாரராகிய அனுமார் முதலான வானரர்களால் ரிஷ்யமூக பர்வதத்தில் நமஸ்காரம் செய்யப்பட்டவரான ஸ்ரீ ராமச்சந்திரன் ஒரு சமயம் பாணத்தால் இந்திர குமாரனான வாலியை சம்ஹாரம் செய்தவராய் தன்னுடைய சிநேகிதனான சூரிய குமாரன் சுக்ரீவனுக்கு சத்ருக்கள் கொல்லப்பட்டதும் உத்தமமானதுமான வானர ராஜ்யத்தை கொடுத்தார். (ii) வாயு குமாரரான பீமசேனர் முதலான பாண்டவர்களால் உபப்லாவ்ய பட்டிணத்தில் நமஸ்கரிக்கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணர் யுத்த காலத்திலே பகவத்கீதையாகிய வாக்யத்தால் இந்திர குமாரனான அர்ஜுனனுக்கு க்ஞானத்தை அளித்து துரியோதனாதிகளை சம்ஹாரம் செய்து தனக்கு ப்ரியனான தர்மபுத்ரருக்கு சத்ரு சம்ஹாரம் ஆனதும் உத்தமமானதுமான அவர்களுடைய ராஜ்யத்தை அளித்தார். 32 (i) அந்த ராமர் ரிஷ்யமூக பர்வதத்திலேயே இருந்துகொண்டு அனுமாருடைய வாயால் சொல்லப்பட்டதான சீதையின் மேலான விருத்தாந்தத்தால் சந்தோஷமடைந்து வானரர்களுடைய க்ரூரமான சைன்யத்தினாலே விளங்குகின்றவராய் சமுத்திர மத்தியத்தில் உள்ள ராக்ஷஸர்கள் இருக்கும்படியான லங்கா பட்டிணத்திற்கு சென்றார். (ii) ஸ்ரீ கிருஷ்ணர் உபப்லாவ்ய பட்டிணத்தில்

இருந்துகொண்டு பீமசேனர் முதலான பாண்டவர்களாலே அக்ஞாத வாசத்தில் செய்யப்பட்ட கீசக சம்ஹாராதி அற்புதமான விருத்தாந்தங்களைக்கேட்டு சூரியனைப்போல க்ரூரமான சுதர்சனம் என்ற சக்ராயுதத்தாலே பிரகாசிப்பவராய் கடல் மத்தியத்திலுள்ள பரிசுத்தமான மஹரிஷிகள் முதலான புண்ய ஜனங்களால் சேவிக்கப்பட்டதாயுள்ள துவாரகா பட்டிணத்திற்கு சென்றார்.

(தொடரும்)

ஆசாரமாலை.

(முன் 325ம் பக்கம் தொடர்ச்சி)

அஷ்ட மஹா மந்திரங்களாவன— 1 ப்ரணவ மந்திரம் 2 நாராயணாஷ்டாக்ஷர மந்திரம் 3 வ்யாஹ்ருதி மந்திரம் 4 வாஸுதேவ த்வாதசாக்ஷர மந்திரம் 5 ப்ரம்ம காயத்ரி மந்திரம் 6 மாத்ருகா மந்திரம் 7 புருஷ ஸூக்த மந்திரம் 8 விஷ்ணு மந்திரம். இம்மந்திரங்களின் விவரத்தை மந்திர புஸ்தகங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். புஸ்தகத்தைப் பார்த்து மந்திரங்களை தெரிந்துகொண்டு ஜெபிக்கலாகாது. குருமுகமாய் உபதேசம் பெற்றுதான் அவைகளை ஜெபிக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் ஜபித்தால் ரௌரவ நரகம் ஏற்படுமென்று ஸ்பஷ்டமாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேலே சொன்ன எட்டு மந்திரங்கள் மகா மந்திரங்களென்றும் மூல மந்திரங்களென்றும் சொல்லப்படுகின்றன. தந்திர ஸாரத்தில் சொல்லப்பட்டுள்ள இதர மந்திரங்களையும் ஜபிக்கலாம். எல்லா மந்திரங்களையும் குருமுகமாய்த்தான் தெரிந்து வைஷ்ணவ தீக்ஷையுடன் நியாஸம் தியானம் இவைகளுடன் ஜபிக்கவேண்டும். மந்திர உபதேசம் செய்த குருவை மனதாலும் கூட துவேஷம் செய்யலாகாது. அப்படி அவன் துவேஷம் செய்யும் பக்ஷத்தில் பகவானை துவேஷிப்பவனாகவே ஆவான். இதில் சந்தேகமில்லை. வித்தையை அளித்த குருவை மாச்சரியத்தின் பேரில் ஒருவன் துவேஷித்தானென்றால் அவன் ஜலமில்லாத கடுங்கானகத்தில் பிரம்ம ராக்ஷஸனாய்ப் பிறப்பான்.

எந்த இடத்தில் உட்கார்ந்து ஜபம் செய்யப்படுகிறதோ அந்த இடத்தை ஜபம் முடிந்த பிறகு மூன்று வ்யாஹ்ருதிகளைச் சொல்லி

ஜலத்தால் ப்ரோக்ஷணம் செய்து அங்குள்ள தூசியை எடுத்து திலகமாய்
வைத்துக்கொள்ளவேண்டும். அப்படி ஜபஸ்தானத்தை ப்ரோக்ஷிக்காமல்
இருந்தால் ஜபத்தின் பலனை சுக்ராசாரியார் கொண்டுபோய் விடுகிருர்.
ஆகையால் ஜலத்தால் ப்ரோக்ஷித்து விட்டு ஓம் சாந்தி: சாந்தி: என்று
சொல்லி நமஸ்காரம் செய்யவேண்டும். [காயத்ரியை உபஸம்ஹாரம்
செய்து] ஜபம் முடிந்த பிறகு ஸந்தியாவந்தனத்திற்கு அங்கமான உப
ஸ்தானத்தை அடியிற்கண்ட மந்திரத்தைச் சொல்லி செய்யவேண்டும்.

ஜாதவேதஸ இத்யஸ்ய மந்த்ரஸ்ய கச்யப ரிஷி: ஜாதவேதா அக்னிர்
தேவதா, த்ரிஷ்டுப் சந்த: ஸந்தயோபஸ்தானே விநியோக: || ஓம் ஜாத
வேதஸே ஸுநவாமஸோமம் அராதீயத: நிதஹாதி வேத: | ஸந: பர்ஷ
ததி துர்காணி விச்வா நாவேவ ஸிந்தும் துரிதாத்யக்னி: | தச்சம்யோ
ராவிருணீமஹே காதும்யக்ஞாய காதும் யக்ஞபதயே தைவீஸ்வஸ்தி
ரஸ்து ந: ஸ்வஸ்திர் மானுஷேப்ய: | ஊர்த்வம் ஜிகாது பேஷஜம் |
சம் நோ அஸ்து த்விபதே சம் சதுஷ்பதே ||

இதன் அர்த்தமாவது:— ய: எந்த வேத: வேதத்தால் சொல்லப்
படுகிற அக்னி: ஜகத்ப்ரவிருத்தகனுய் அக்னியில் அந்தர்க்கதனுய் அக்னி
நியாமகனுய் அக்னி சப்தவாச்யனுயுள்ள பகவான் நாராயணன் அராதி
யத: தனக்கு சத்ருக்களைத்தேடிக் கொடுக்க விருப்பமுள்ள தன்
சத்ருக்களை நிதஹாதி நன்கு பஸ்மமாய்ச் செய்கிருரோ ய: எந்த பக
வான் ஸிந்தும் நாவேவ ஸமுத்திரத்தைக் கப்பலால் கப்பலோட்டி
போல் விச்வானி துர்க்காணி ஸமஸ்த துக்கதரமான ஆபத்துக்களி
னின்றும் அதி அத்யந்தம் தாண்டி வைக்கிருரோ விச்வானி துரிதானி
ஸமஸ்த பாபங்களையும் அதிபர்ஷத் அத்யந்தமாய் நாசம் செய்தாரோ
தஸ்மைஜாதவேதஸே அந்த ஸர்வக்ஞனை பகவான் நாராயணனுக்கு
ஸோமம் ஸுநவாம ஸோமலதையை பிழிந்து தருகிறோம் அல்லது
எமது மனதை பகவத் விஷயமாய் அர்ப்பணம் செய்கிறோம் யக்ஞாய
ச்ரௌத ஸ்மார்த்த ஸமஸ்த யக்ஞங்களின் ஸாதனத்திற்காகவும் யக்ஞ
பதயே யக்ஞபதியான நாராயணனை காதும் சொல்லவும் தைவீ:
அவருடைய சம்பந்தமான லீலைகளை காதும் நிரூபணம் செய்யவும்
சம்யோ: ஸுகத்துடன் கூடிய மோக்ஷார்த்தமாகவும் தத் அந்த காயத்ரி
மந்திரத்தால் சொல்லப்படும் பகவத் ரூபத்தை ஆவிருணீமஹே சம்பூர்
ணமாய் சரணமடைகிறேன். மேலும் ந: எங்கள் எல்லோருக்கும் ஸ்வ
ஸ்தி அஸ்து மங்களமுண்டாகட்டும் எங்களுக்கு மட்டில் அன்று மானு
ஷேப்ய: பகவத் ஞானிகளுக்கு ஸ்வஸ்தி அஸ்து மங்களமுண்டாகட்டும்

மேலும் த்விபதே சதுஷ்பதே சம் அஸ்து இரு கால்கள் நான்கு கால்கள்
உள்ள பிராணிகளுக்கும் மங்களமுண்டாகட்டும் பேஷஜம் ஸம்ஸாரத்
தைத்தாண்ட மேலான ஔஷத ரூபியான ஊர்த்வம் ஸர்வோத்க்ருஷ்
டனை காயத்ரியால் ப்ரதிபாதிக்கப்படும் பரப்பிரம்மமான நாராயணனை
ஜிகாது ஜெயிக்கட்டும்.

நமோப்ரம்மண இத்யஸ்ய ப்ரஜாபதி ரிஷி: விச்வே தேவதா
ஜகதீச்சந்த: உபஸ்தானே விநியோக: | ஓம் நமோ ப்ரம்மணே நமோ
ஸ்தவக்னயே நம: ப்ருதிவ்யை நம ஔஷதீப்ய: | நமோ வாசே நமோ
வாசஸ்பதயே நமோ விஷ்ணவே மஹதே கரோமி| ஓம் நம: ப்ராச்யை
திசே யாஸ்ச தேவதா: ஏதஸ்யாம் ப்ரதிவஸந்தி ஏதாப்யஸ்ச ஓம் நம: |
ஓம் உதீச்யை திசேயாஸ்ச தேவதா: ஏதஸ்யாம் ப்ரதிவஸந்தி ஏதாப்ய
ஸ்ச ஓம் நம:| ஓம் அதராயை திசேயாஸ்சதேவதா: ஏதஸ்யாம் ப்ரதிவ
ஸந்தி ஏதாப்யஸ்ச ஓம் நம: | ஓம் அந்தரிக்ஷாயை திசேயாஸ்ச தேவதா
ஏதஸ்யாம் ப்ரதிவஸந்தி ஏதாப்யஸ்ச ஓம் நம: இதன் தாத்பரியமாவது:—
பகவன்! இப்பேர்பட்டவரான மகானுபாவரான தமக்கு நான் என்ன
செய்யக்கூடும். பூயிஷ்டாந்தே நம உக்திம் விதேம என்னும் சாஸ்திர
ரீதிப்படி நமஸ்காரம் செய்கிறேன். ப்ரம்மா, அக்னி முதலான பெயர்
களால் அழைக்கப்படும் பகவானுக்கு நமஸ்காரம், பிரம்மாவின் அந்தர்
யாமியான ஹயக்ரீவமூர்த்திக்கு நமஸ்காரம். அக்னியின் அந்தர்யாமி
யான பரசுராமருக்கு நமஸ்காரம். பிருதிவியின் அந்தர்யாமியான
வராஹமூர்த்திக்கு நமஸ்காரம். ஔஷதிகளுக்கு நியாமகனான தன்வந்த
ரிக்கு நமஸ்காரம். வாக்காகிற பாரதி தேவியின் அந்தர்யாமியான நாரா
யணருக்கு நமஸ்காரம். பாரதிபதியான வாயுபகவானின் அந்தர்யாமி
யான ஸங்கர்ஷணருக்கு நமஸ்காரம். இவ்வளவு ரூபங்களுடன் சேர்ந்
திருக்கும் மகாத்மாவான ஸ்ரீவிஷ்ணுவுக்கு நமஸ்காரம். பூர்வதிக்குக்கு
அதிபதியான இந்திரன் அவருடைய பாரியாளான சசீதேவி இவர்
களால் உபாஸிக்கப்படும் வாமனர், ஹயக்ரீவன் நாராயண அநிருத்தன்,
ப்ரதீகாரக அநிருத்தன், பவமானரென்ற பெயருள்ள நாராயணர் ப்ரத்
யும்னர், ப்ரகாசனெனப்படும் வாஸுதேவன், வாஸுதேவனுடைய
வ்யூஹம் ப்ராணரெனப் பெயர்கொண்ட சேஷன், அபானரெனப் பெயர்
கொண்ட பாரதீ, வ்யானரெனப் பெயர்கொண்ட வாயு, உதான
ரென்ற பெயருள்ள ரமா, ஸமானரென்னும் நாராயணர். பூர்வத்தில்
இருப்பவர்களான இந்த தேவர்களுக்கு நமஸ்காரம் அப்படியே ஆக்
னேய மூலையில் அக்னி, அவருடைய பாரியாளான ஸ்வாஹா தேவி,

இவர்களால் உபாஸிக்கப்படும் பரசுராமர் அப்படியே, ஹயக்ரீவர், நாராயணர் அநிருத்தர் இவர்களுக்கு நமஸ்காரம். தக்ஷிண திக்கில் யமன், அவருடைய பாரியாளான ச்யாமளா இவர்களால் உபாஸிக்கப்படும் ராமச்சந்திரன் அப்படியே, ஹயக்ரீவன், நாராயணன் அநிருத்தன், ப்ரதீஹாரனெனப்படும் அநிருத்தன், பவமானரெனப்படும் நாராயணன் ப்ரத்யும்னன், ப்ரகாசனெனப் பெயருள்ள வாஸுதேவன். வாஸுதேவ வ்யூஹன் ப்ராண நாமகரான சேஷன், அபானனெனப்படும் பாரதீ, வ்யானன் எனப் பெயருள்ள வாயு, உதானனெனப் பெயருள்ள ரமா, ஸமாந நாமகரான நாராயணன், இந்த தேவர்களுக்கு நமஸ்காரம்.

[தொடரும்]

ஸ்ரீ ஆனந்த தீர்த்த பகவத் பாதாள் இயற்றிய

அணுபாஷியம்.

2-வது அத்தியாயம்

(முன் 330ம் பக்கம் தொடர்ச்சி)

1. ச்ரௌதஸ்மிருதி விருத்தத்வாத் ஸ்மிருதயோ நகுணைன்ஹரே:I
நிஷேத்தும் சக்னுயுர்வேதா நித்யத்வான் மானத்யுமுத்தமம்

1. சுருதிக்கு அனுஸாரணையாய் பரமாப்தரான விஷ்ணு முதலானவர்களால் இயற்றப்பட்டதான பஞ்சராத்திரம் முதலான ஸ்மிருதிகளுக்கு விருத்தமாய் இருப்பதால் பாசுபதம் முதலான ஸ்மிருதிகள் பரமாத்மாவின் க்ஞானனந்தாதி குணங்களை இல்லை என்று சொல்ல முடியாதவைகளாய் இருக்கின்றன. ரிக் வேதம் முதலான வேதங்கள் அபௌருஷேயமாய் இருப்பதன் நிமித்தம் உற்பத்தியும் நாசமுமில்லாதிருப்பதைக் கொண்டும் க்ஞானத்தைத் தரும் ப்ரமாணங்களில் உத்தமம். இது உபலக்ஷணம். வேதங்களை அனுஸரித்திருக்கும் பஞ்சராத்திரம் முதலான ஸ்மிருதிகளும் உத்தமமான பிரமாணங்கள்தான்.

2. தேவதாவசனாதாபோ வதந்தீத்யாதிகம் வச: I
நா யுக்தவாத்ய ஸந்நைவ காரணம் த்ருச்யதே க்வசித் II

2, அபிமானி தேவதைகள் பேசினார்கள் என்று நிரூபிப்பதால் மிருத் அப்ரவீத் ஆபோ அப்ரவீத் இவை முதலான வேத வாக்கியம் ஜலம் பேசியது மண் பேசியது என்று அஸம்பாவிதமான அர்த்தத்தைச் சொல்வதாய் ஆகாது. முயற் கொம்பு முதலிய அசத்து பதார்த்தங்கள் எந்த காரியத்திலேயும் காரணமாக காணப்படுவதில்லை.

3. அஸஜ்ஜீவப்ரதானாதி சப்தா: ப்ரம்மைவ நாபரம் I
வதந்தி காரணத்வேன க்வாபி பூர்ண குணோஹரி:
ஸ்வாதந்த்ர்யாத் ஸர்வகர்த்ருவாத் நா யுக்தம்
[தத்வதேத்ச்ருதி: II

3. வேத வாக்கியங்களிலுள்ள அசத்து, ஜீவன், பிரதானம் முதலான பதங்கள் நாராயணனையே கர்த்தாவாய்ச் சொல்லுகின்றன. நாராயணனைத் தவிர வேறு வஸ்துவை எந்தக் காரியத்திலேயும் கர்த்தாவாகச் சொல்லுவதில்லை. நாராயணன் தன் இஷ்டப்படி இருப்பவர். ஆகலாலும் சமஸ்தமான ஜகத்திற்கு குணங்களால் பூர்ணமாய் இருக்கிறார். ஆகைபால் வேதமானது யுக்தி விருத்தமான அர்த்தத்தைச் சொல்லமாட்டாது.

4. ப்ராந்தி மூலதயா ஸர்வ ஸமயாநாம யுக்தத: I
ந தத் விரோதாத் வசனம் வைதிகம் சக்யதாம் வ்ரஜேத் II

4. நிரீசுவர சாங்க்ய மதம் முதலான மதங்களுக்கு பிரவர்த்தகர்களாயுள்ள துஷ்ட வாதிகளின் மித்யா க்ஞானத்தை காரணமாய்க் கொண்டதால் எல்லா துஷ்ட மதங்களிலேயும் யுக்திக்கு விரோதமிருப்பதால் அந்த துஷ்ட மதங்களின் விரோதத்தால் நிர்தோஷமான வேத வாக்யமானது பிரமாணமோ அப்பிரமாணமோ என்னும் சந்தேகத்திற்கே விஷயமாயிருத்தலை அடையமாட்டாது.

5. ஆகாசாதி ஸமஸ்தம் ச தஜ்ஜம் தேனைவ லீயதே II

5. ஆகாசம் முதலிய எல்லா பதார்த்தங்களும் அந்த நாராயணனாலேயே உண்டாகின்றன. அந்த பகவானிடம் நாசம் அடைகின்றன.

(தொடரும்)

விதவா விவாஹ கண்டனம்.

(முன் 344ம் பக்கம் தொடர்ச்சி)

மேலும் நஷ்டேம்ருதே ப்ரவ்ரஜிதே க்லீபே ச பதிதே பதௌ| பஞ்சாஸ்வாபத்ஸு நாரீணாம் பதிரன்யோவிதீயதே|| என்னும் சுலோகத்தில் பதி சப்தத்திற்கு பாலகன் ஸம்ரக்ஷகன் என்றே நாரதர் அபிப்பிராயப்பட்டிருப்பதாய் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனெனில் புருஷன் தேசாந்திரம் சென்றபின் பல நாள் காத்திருந்து மறு விவாகத்தை ஸ்திரீ ஜனங்கள் நடத்தி வந்தது யுகாந்தரத்திலேயே வழக்கமிருந்ததாய் கண்டு பிடிக்க முடியவில்லை. தமயந்தி காட்டில் திரிந்திருந்த நள ராஜனைக் கண்டு பிடிக்க இந்த உபாயத்தை பகிரங்கப்படுத்தியதாய் மட்டில் தெரிய வருகிறதே ஒழிய செய்ததாய்த் தெரியவில்லை. அநாதையான ஸ்திரீ எப்பொழுதும் ஸ்வதந்திரமாய் இருக்கலாகாதென்றும், ஒருவனுடைய பாதுகாப்பில் இருக்கவேண்டுமென்றும், நியமம் இருப்பதாய் மட்டில் தெரிய வருகிறது. ஸ்ரீ ராமச்சந்திரன் ராவண ஸம்ஹாரம் செய்த பிறகு ஜானகியை விபீஷணனைக் கொண்டு தன் இருப்பிடத்திற்கு வரவழைத்து எல்லா வானரர்களின் நடுவில் அவளை நிறுத்தி அவளுடைய கற்பில் சந்தேகப்பட்டவர் போல் நடித்து "ஏதா தச திசோ பத்ரே கார்யமஸ்தி நமேத்வயா| லக்ஷ்மணே பரதே வாத்வம் குரு புத்திம் யதா ஸுகம்|| ஸுக்ரீவே வானரேந்த்ரேவா ராக்ஷஸேந்த்ரே விபீஷணே| நிவேசய மனஸ்ஸீதே யதாஸுகமாத்மன:" || என்றார். ஸ்ரீ வால்மீகி யுத்த காண்ட ராமாயணத்தில் "ஹே ஸீதே இதுகாறும் பெண் மோகங்கொண்ட மகாஸ்த்ரைணனுன ராவணனுடைய வீட்டில் இருக்கிறாய். மனோகரமான உன் ரூபத்தைக்கண்டு அவன் சும்மா இருந்திருக்கமாட்டான். ஆதலால் உன் நடவடிக்கையில் எனக்கு சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. உன்னை நான் இனி என் ஸம்ஸாரமாக ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. உன்னால் எனக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை. நீ எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். இதோ பத்து திக்குகள் உனக்கு இடம் தர காத்திருக்கின்றன. லக்ஷ்மணனிடத்தில் இருக்கலாம், அல்லது பரதனிடத்தில் இருக்கலாம், வானர ராஜனுன ஸுக்ரீவனிடத்திலோ அல்லது ராக்ஷஸ ராஜனுன விபீஷணனிடத்திலோ உன் சௌகரியப்படி இருக்கலாம். யாரிடத்திலிருப்பது என்பதை யோசனை செய்து கொள்" என்றார் ஸ்ரீ ராமர்.

இதனால் பர்த்தாவை விட்ட ஸ்திரீயானவள் தனித்திருக்காமல் எந்த புருஷனையாவது ஆசிரயித்து அவனுடைய ஸம்ரக்ஷணையில் இருக்க வேண்டுமென்றும், அவ்வாறு இருப்பதுதான் வழக்கமாய் இருந்திருக்கலாம் என்றும் தெரியவருகிறது. அப்படியில்லாமல் மேற்கண்ட ஸ்ரீமத் ராமாயணம் சுலோகங்களிலுள்ள மன: நிவேசய புத்திம் குரு என்னும் பதங்களுக்கு விவாகம் செய்துகொள் என்று அர்த்தம் செய்வதா? மனுஷ்யனுடைய தர்மம் இன்னதென்பதைக்காட்ட அவதாரமெடுத்த ஸ்ரீமந்நாராயணனான ராமச்சந்திரன் ஜகன்மாதவான சீதாபிராட்டியைப் பார்த்து, லக்ஷ்மணனையோ, பரதனையோ, விபீஷணனையோ அல்லது ஸுக்ரீவனையோ புனர் விவாகம் செய்து கொள்ளும்படி ப்ரேரேபித்திருக்க மாட்டார் என்று நிச்சயம் செய்யவேண்டும். இதுபோலவே தேசாந்திரம் சென்ற பர்த்தாவால் விடப்பட்ட ஸ்திரீ தனித்திருக்கலாகாததலால் அன்னிய புருஷனிடம் அவனுடைய சம்ரக்ஷணையிலிருக்க அனுமதியளித்திருப்பதாயும் அதற்கு ஏற்பட்ட காலம் இன்னதென்பதையும் இந்த நாரத ஸம்ஹிதா பிரமாணங்கள் காட்டுவதாகத்தான் நாம் அர்த்தம் செய்யவேண்டும். ஆகையால் இந்த கடைசி பதினன்காவது ஸ்மிருதி பிரமாணமும் விதவா விவாகாதிகளுக்கு சற்றேனும் ஆதரவு அளிப்பதில்லை என்று வாசகர்கள் நிச்சயிக்கவேண்டும்.

ஆகவே விதவா விவாகத்திற்கு ஸாதகமான பிரமாணங்களென்று இச்சபையார் காட்டிய 7 சுருதிகளும் 14 ஸ்மிருதிகளும விதவா விவாகத்திற்கு சற்றேனும் ஆதரவு அளிப்பதில்லை என்று தெளிவாகக் காட்டியாய் விட்டது. விதவா விவாகம் செய்யக்கூடாதென்றே ஸ்பஷ்டமாய் சொல்லும் சுருதி ஸ்மிருதிகளையும் இனி விவரிக்கிறோம். இப்படியிருக்க மனுவும் மற்ற மகரிஷிகளும் விதவா விவாகத்தை ஒப்புக்கொண்டிருப்பதாய் அவர்கள் சொல்லியிருப்பது முழுதும் பொய் என்றே நிச்சயிக்கவேண்டும். கலியுகத்தை உத்தேசித்தே பராசரர் தன் ஸ்மிருதியில் புனர் விவாகத்தை செய்து கொண்டவர்களுக்கு முதல் விவாகம் செய்து கொண்டவர்களுடன் ஸமான அந்தஸ்தைக் கொடுத்திருப்பதாய் சொல்வதும் நம்பத்தகுந்ததல்ல. கலியுக தர்மத்தை மட்டில் பராசரர் சொல்லவில்லை என்றும் நாம் பராசர ஸ்மிருதியை மட்டில் அனுசரிப்பதில்லை என்றும் முன்பே காட்டியிருக்கிறோம்.

தற்காலத்து தலைவர்களின் அபிப்பிராயம் என்ற தலைப்பின் கீழ் விதவா விவாதிகளென்று 20 நபர்களையும் விதவா விவாகத்திற்கு சாதகமான அபிப்பிராயங்களை தந்தவர்களென்று 32 நபர்களையும் காட்டி

யிருக்கின்றனர். அவர்களில் சேர்ந்தவரான இங்கர் திவான் பகதூர் ரகுநாத ராயர் அவர்களின் அபிப்பிராயத்தை ஸ்ரீ உத்தராதி மடாதிபதி ஸ்ரீ ஸத்யவீரஸ்வாமிகள் முன்பு பண்டிதர்களின் சபையில் ஸம்பூர்ணமாய் கண்டித்திருக்கின்றனர். இதர மதங்களின் கொள்கைகளும் சம்பிரதாயங்களும் இதற்கு ஒத்திருப்பதாய் அவர்கள் காட்டியிருக்கின்றனர். ஏகாதசி விரதம் அஷ்டகா சிரார்த்தம் முதலியவைகளை வேறு எந்த மதத்தாரும் ஆதரிப்பதில்லை. அதனால் நாம் அவைகளை விட்டுவிடுவது என்ன? பசுவைக்கொல்வது நாம் மகா பாபமாய்க் கருதுகிறோம். இதர மதத்தார்கள் சாமானியமாய் கருதுகிறார்கள். ஏன்? அவரவர்கள் நம்பியிருக்கும் சாஸ்திரங்களாலல்லவா? நாம் நம்பியிருக்கும் சாஸ்திரங்களே மகா பாபங்களைச் செய்ததால்தான் ஸ்திரீகள் பால விதவைகளாய்ப்போய் பல துக்கங்களை அனுபவிப்பதாய்ச் சொல்லுகின்றன.

அடியிற்கண்ட ஸ்மிருதிகள் இதற்கு அத்தாக்ஷியாகும்.

ருதுஸ்நாதாது யாநாரீ பர்த்தாரம் நோபஸர்பதி |
ஸாம்ருதா நரகம் யாதி வைதவ்யம் ச புந: புந: ||

ருதுஸ்நானம் செய்த ஸ்திரீ பர்த்தாவின் சமீபத்தை இரவில் அணுகாமலிருந்தால் அவளிறந்தபின் நரகமடைவாள். மறு பிறப்பில் அடுத்தடுத்து வைதவ்யத்தையே அடைவாள் என்று பராசரரும்

அதுஷ்டாம் வினதாம் பார்யாம் யௌவனேய: பரித்யஜேத் |
ஸப்த ஜன்ம பவேத் ஸ்திரீத்வம் வைதவ்யம் ச புந: புந: ||

தோஷமற்றவளாய் அடக்கம் பெற்ற பார்யையை யௌவன தசையில் எவன் விட்டு விடுகிறானோ அவன் எழு பிறப்பு ஸ்திரீயாய்ப் பிறந்து சீக்கிரத்திலேயே வைதவ்யத்தை அடைகிறான் என்று தக்ஷரும்

யா பர்த்தாரம் ந ஜானாதி யோஞ்ஞாதாகத்யதே புதை: |
அத்யந்த பால்ய ஸம்ப்ராப்த வைதவ்யாத்யந்த பாபபூ: ||

எந்த ஸ்திரீ விவாகம் செய்துகொண்ட பர்த்தாவிடம் படுக்காமலேயே வாழ்நாள் கழிக்கிறாளோ அவள் அக்ஞாதை எனப்படுவாள். மகாபாபம் செய்தவளாய் ஆவாள். மறு பிறப்பில் வெகு சீக்கிரத்தில் விதவையாய்ப் போவாள் என்று கபிலரும்

ஸாமர்த்யேஸதி யாநாரீ பித்ரு ச்ராத்தே ஹ்யுபஸ்திதே |
பாகக்ரியாம் ந குருதே ஜாமிதாம் மோகமாஸ்திதா ||
ஸா ஜன்ம ஜன்மனிதராம் துர்பகா பித்ரு காதினி |
வந்த்யா தரித்ரா விதவா பவேத்தேவ ந ஸம்சய: ||

எந்த ஸ்திரீ சாமர்த்தியமிருந்த போதிலும் பர்த்தாவின் பித்ரு ச்ராத்தம் ஏற்பட்ட சமயம் புத்திகெட்டு சமையல் செய்வதில்லையோ அவள் ஒவ்வொரு ஜன்மமும் பித்ருக்களை இழந்தவளாயும் மலடியாகவும் தரித்திராளாயும் விதவையாயுமாவாள். இதில் சந்தேகமில்லை என்று கபிலரும் சொல்லியிருக்கின்றனர். மேலும்

அஷ்டாவர்ஷாது விதவா விவாகாத் பரதோ யதி |
சித்யக்னி ஸதிருசீ ப்ரோக்தா ப்ரதமேயம் ஸ்மிருதா கில |
ரோஹிணீ விதவா சேத்து சிதிதூம ஸமானிசம் |
அவீரேத்யுச்யதே நாம்னா மகா பாபைக ஸம்பவா ||

கௌரீ தசாயாம் வைதவ்யமாபன்னா தாபிதா ஸ்மிருதா |
சித்யுல் முகவே ஸாக்னேயா ரஜஸோர்வாகிதீவச |
புரோதிதாபி. ரண்டாபிஸ்ஸாகம் பூய: பராஹதா: |
ஸந்திதாஸ்ச ப்ரவக்ஷ்யாமி ஸ்பஷ்டார்த்தம் வை ப்ரஸங்கத. ||

துர்பகா குடிலா காஷ்டாசரமாசடுலா அவசா |
வீரரண்டா குண்டரண்டா பாதாரண்டா ததாபரா |
தசனமபி சைதாஸாம் தசமாப்தாத்பரம் ததா |
ஏகதசாப்தாது ப்ரப்ருதி வைதவ்யம் க்ரமதோ யதி |
ரஜஸ: பரதோ பூயோ பவேயுஸ்தானி சூன்யத: |
நாமானி ஏதானி துச்சானி சைதாஸாம் கர்மமாத்ரக: ||

பிறந்த எட்டாவது வருடத்தில் விதவையாய்ப் போனவள் சுடுகாட்டிலுள்ள சிதையின் அக்னிக்கு ஸமானம் எதற்கும் உதவாதவள். ஒன்பதாவது வருஷத்தில் விதவையாய்ப் போனவள் சிதையின் புகைக்கு ஸமானம், மகா பாபிஷ்டை, அவீரை எனப்படுவாள். பத்தாவது வயதில் விதவையாய்ப் போனவளும் ப்ரௌடையாகாததற்கு முந்தி விதவையாய்ப் போனவளும் சிதையின் கொள்ளிக்கு சமானமாய் தாபிதை எனப்படுகிறாள். மேலே சொன்ன வகையான விதவைகளுடன் சேரலாகாது. சேர்ந்தால் விதவையாய்ப் போவது நிச்சயம். பத்தாவது வயதுக்கு மேற்பட்ட விதவைகள் துர்பகை, குடிலை, காஷ்டா, சரமா, சடுலா, அவசா, வீரரண்டா, குண்டரண்டா, பாதாரண்டா, ரண்டா, எனப் பத்து வகை. பதினொருவது வயதுக்கு மேலும் ப்ரௌடையான பின்பும் விதவையாய்ப் போனவர்களின் பெயர் அவர்களின் காரியத்தை ஒட்டி துச்சமாய் இருக்கும் என்று லோகிதரும் சொல்லியிருக்கிறார்.

(தொடரும்)

அப்பைய்ய தீக்ஷிதரின் அதிக்ஷேபணைகளுக்கு கண்டனம்.

(முன் 294-ம் பக்கம் தொடர்ச்சி)

என்று இவ்வாறு கிரந்தகாரர்கள் தூஷித்தார்கள் என்றால் ஸ்ரீமான் அப்பைய்ய தீக்ஷிதர்வாள் சாமான்ய பண்டிதரன்று! இவர் இணையற்ற மகா பண்டிதர். பாரதி பதியான வாயு பகவானின் அவதாரமான ஸ்ரீ மத்வாசாரியாரை தூஷிக்க வந்ததால் அவருடைய புத்தி தடுமாற்றம் அடைந்தது.

மேலும் ஓர் வக்கீல் மகா புத்திமானாய் இருந்தபோதிலும் அவர் எடுத்துக்கொண்ட கேஸ் பலஹீனமாயிருந்தால் அதை எவ்வளவு சாங்கி பேசிய போதிலும், முடிவில் அது ஜயம் பெறாமல் போகும். அது போல் அப்பைய்ய தீக்ஷதர் மதுஸூதன சரஸ்வதி போன்ற புத்திமான்களால் வெகு சிலாக்கியமாய் வாதம் செய்யப்படினும் அவர்களுடைய கேஸான அத்வைத மதம் பலஹீனமாதலால் அவருடைய வாதம் நிலை நில்லாமல் இதரர்களால் கண்டிக்கப்பட்டது. "பூர்வாசார்ய: குகணை புரத: யன் முகே சந்ததம் ந: ஸ்வார்த்த பிரப்ச: ப்ரதிபதயதோ யத்ர நிர்சௌ ச கப்யௌ|| வேதை: சாஸ்த்ரை: முனிபிரபி யா கண்டிதா நைவ கப்யா, மந்தாக்ராந்தா சரண ஹ்ருதயை; மாயினாம் பத்ததி: ஸா || இந்த மாயாவதிகளாகிய அத்வைதிகளின் வழியில் பூர்வாசார்யாகிய சங்கராசாரியார் குச்சித அசுர சமூகத்தின் முன்னடியிருப்பவர். அவருடைய முகத்தில் எப்பொழுதும் எல்லாம் மித்யை (பொய்) என்று சொல்வதற்காக ந என்ற எழுத்தே இருக்கிறது. இந்த மதத்தில் எல்லா பதங்களும் பிரம்மத்தில் லக்ஷணை கல்பிப்பதால் அவைகளின் அர்த்தத்திற்கு லோபமானது இருக்கிறது. இந்த மதத்தை ஒப்புக்கொண்டால் மறுபடியும் திரும்புதல் இல்லாத தாமிஸ்ரம், அந்த தாமிஸ்ரம் என்னும் நரகங்கள் அடையவேண்டும். இந்த மதம், மந்தா கிரந்தா, முன்பின் விமரிசை செய்யாதவர்களால் ஒப்புக்கொள்ள தகுந்ததகுந்தது. சுத்தமான அந்தக்கரணமுள்ள ஜனங்களால் எக்காலமும் ஒப்புக்கொள்ளத் தகுந்ததல்ல என்றார் ஒரு கிரந்த கர்த்தா. ஆகவே புத்திமான்கள் செய்ய

வேண்டியதாவது, யத்ர நாஸ்தி குஹகாத் இதோ பயம் மங்களம் ச பரமம் பதே பதே | ஸேவ்யதாம் ஸுக்ருதிபி: திவாநிசம் மத்வ பத்ததிரியம் ஸதோத்ததா || எந்த மதத்தில் பொய் வஞ்சனை முதலியவைகளிருந்து பயம் இல்லையோ, அடுத்தடுத்து மங்களமே உண்டோ அப்பேர்ப்பட்ட ரதம் போல் தடுக்க முடியாததான மத்வ மத மார்க்கத்தயே புண்யவான்கள் பகல் இரவு எக்காலமும் ஸேவிக்கட்டும் என்றார். ஆகையால் புத்திமான்கள் அப்பைய்ய தீக்ஷிதர் போன்றவர்களால் தங்களுடைய கல்வித் திறமையைக் கொண்டு எமது பகவத் பாதாளின்மீது சுமத்தியிருக்கும் பொய்யான தூஷணைகளை நம்பாமல் அவைகள் பொய்யாய் கேவலம் மாச்சரியத்தால் செய்யப்பட்டதென்று நிச்சயிக்கவேண்டுமென்பதுயாவரும் ஒப்புக்கொள்ளவேண்டியதே ஆகும்.

ஸ்ரீ பகவத் பாதாள் செய்த பிரம்ம சூத்திர பாஷியத்தின்மீது அவர் செய்துள்ள தூஷணைகளையும் அதை பலவாறாய் கண்டித்து அப்பைய்ய தீக்ஷதர் செய்த தூஷணை கேவலம் மாச்சரியத்தால் என்று நிரூபித்திருப்பதையும் ஸ்ரீ ஸத்யநாதர் செய்த அபிநவ கதை, ஸ்ரீ நாராயணாசாரியார் செய்த அத்வைத கலாநலம், ஸ்ரீ விஜயீந்திர ஸ்வாமிகள் செய்த கண்டகோத்தாரம் இந்நூல்களில் காணலாமென்று சொல்லி இந்த வியாஸம் முடிக்கப்படுகிறது.

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

மகாபாரத தாத்பரிய நிர்ணயம்.

இருபத்தி ஆறாவது அத்தியாயம்.

[ஸ்ரீ ம. வே. ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார் மொழி பெயர்த்தது]

(முன் 320ம் பக்கம் தொடர்ச்சி)

துரோண பர்வ கதை.

பீஷ்மாசாரியார் விழுந்தபின் எல்லா அரசர்களுக்கும் அஸ்திர வித்தை உபதேசம் செய்ததால் ஆசாரியாராயும், ரதிகர்களில் சிரேஷ்டராயும் ஜகத் பதியான பரசுராமருக்கு நல்ல சிஷ்யராயும் உள்ள துரோணாசாரியாரை துரியோதனன் ஸேனாதிபதியாய்ச்

செய்தான். பீஷ்மாசாரியாரால் அர்த்த ரதிகனென்று முன்பு சொல்லப்பட்டதால் அவமானமடைந்த கர்ணன் பீஷ்மாசாரியார் உயிருடன் இருக்கும்பொழுது யுத்தத்தில் தனுஸ்ஸை எடுக்காதிருந்தான். அவன் பீஷ்மாசாரியார் விழுந்தபின் அவருடைய அனுமதி பெற்று யுத்தம் செய்ய ப்ரயத்னப்பட்டவனாய் தனுஸ்ஸை தரித்தான். அவன் துரோணாசாரியாருக்கு ஸேனாதிபத்யம் வரவும் ரதத்தில் உட்கார்ந்துகொண்டு குருவான துரோணாசாரியாரின் பின்னாடி புறப்பட்டான். துரியோதனன் துரோணாசாரியாரை தர்மபுத்திரரை பிடித்துக்கொடுக்கும்படி வரன் கேட்டான். துரோணாசாரியார் தர்மபுத்திரரை பிடித்துக் கொடுக்கிறேனென்று வாக்குத்தத்தம் செய்யவும், இதை அறிந்து பாண்டவர்கள் தர்மபுத்திரரின் ஸம்ரக்ஷணையில் ப்ரயத்னமுள்ளவர்களாய் யுத்தத்திற்கு புறப்பட்டனர். அச்சமயம் க்ரூரமான யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் துரோணாசாரியார் மண்டலாகாரமாய்சுற்றும் தன் தனுஸ்ஸால் புறப்பட்ட பாணங்களால் சத்ருக்களை நடுங்கும்படி செய்தார்.

பீமசேனரால்சல்ய ராஜனின் தோல்வி.

அப்பொழுது பீமசேனர் கர்ஜனை செய்து கொண்டு சீக்கிரம் துரோணாசாரியாரிடம் வந்தார். அசுவத்தாமா, கிருபாசாரியார் சல்ய ராஜன் இவர்கள் பீமசேனரிடம் வந்தார்கள். பீமசேனர் அந்த மூவர்களையும் விரட்டி துரோணாசாரியாரிடம் வந்தார். அர்ஜுனனின் மகனான அபிமன்யு பீமசேனரின் பின்னாடி சத்ருக்களிடம் வந்து சேர்ந்தான். அப்பொழுது சல்ய ராஜன் அபிமன்யுவை தடுத்தான். சல்ய ராஜனுக்கும் அபிமன்யுவுக்கும் மகா யுத்தம் நடந்தது. அந்த சமயம் சல்ய ராஜன் கதாயுதத்தை எடுத்துக்கொண்டான். வீரனான பீமசேனர் கதாயுதத்தை எடுத்துக்கொண்டு சல்ய ராஜனுக்கு எதிரில் வந்தார். இந்த யுத்தரங்கத்தில் பீமசேனருக்கும் சல்ய ராஜனுக்கும் கதா யுத்தம் நடந்தது. பலிஷ்டர்களில் பலிஷ்டர்களாயும் இணையற்ற வீரியவான்களாயும் அவர்களைவிட உத்தமர்களில்லாததாயும் ஜயிப்பதற்கு முடியாதவர்களாயுமுள்ள சல்ய ராஜன் பீமசேனர் இவர்கள் கர்ஜனை செய்துகொண்டு பார்ப்பவர்களுக்கு மனோகரமாயும் விசித்திரமாயும் சஞ்சாரம் செய்தார்கள். இந்த சல்ய ராஜன் பீமசேனர் இவ்விருவர்களும் ஒருவருக்கொருவர் கதாயுதத்தால் அடித்துக்கொண்டு அந்த அடியின் அடையாளமுள்ள வஜ்ஜிராயுதம் போல் சரீரமுள்ளவர்களாய் இருப்பதை எல்லா ஜனங்களும் யுத்தத்தில் கண்டனர். பீமசேனரின் கதாயுதத்தின் அடியால் சல்ய ராஜன் பிரக்ஞையற்று விழுந்தான். சல்ய ராஜனின் அடியால் பீமசேனர் கோபத்தால் கால் நடுங்கி மட்டி போட்டுக்கொண்டு விழுந்தார். அக்ஷணமே எழுந்தார். சல்ய ராஜன் ப்ரக்ஞையற்று விழுந்ததைப் பார்த்து அவனை யுத்தத்திற்கு அழைக்கும் பீமசேனரைக் கண்டு கிருபாசாரியார் ஜனங்கள் பார்க்கும் பொழுதே பீமசேனரின் எதிரில் சல்ய ராஜனை தன் ரதத்தில் போட்டுக்கொண்டு ஓடினார். சத்ரு ஸம்ஹாரகரான பீமசேனர் தன் சாமர்த்தியத்தால் சல்ய ராஜனை ஜயித்து கர்ஜித்துக்கொண்டு, தன் ரதத்தில் உட்கார்ந்துகொண்டு பாண ஸமூகங்களால் துரோணாசாரியாரின் எதிரில் சத்ருவின் ஸைன்னியத்தை விரட்டினார்.

பீமசேனர் கௌரவர்களை சீக்கிரமே விரட்டும் பொழுது துரோணாசாரியார் ஸாத்யகியுடன் கூடிய அபிமன்யு முதலானவர்களை விரட்டி தர்மபுத்திரரை பிடிக்க வந்தார். ரதிகனான அர்ஜுனன் சீக்கிரம் துரோணாசாரியாரிடம் வந்தான். ஸ்ரீ கிருஷ்ணரால் ஏவப்பட்ட ரதத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கும் அர்ஜுனன் தேகத்தை நாசம் செய்யும் பாணங்களால் நாலா பக்கத்திலும் யானை, குதிரை, ரதிகர்களை ஸம்ஹாரம் செய்து ரக்தநதிகளை உண்டு பண்ணுகிறவனாய்க் காணப்பட்டான். அர்ஜுனனால் ஸைனியங்கள் கொல்லப்பட்டபோதிலும், தர்மபுத்திரர் ஆபத்தினின்றும் காப்பற்றப்பட்டவராய் ஆனவுடன் துரோணாசாரியார் தன் ஸைனியம் பீமார்ஜுனர்களின் பாணத்தால் தோற்றுப் போனதைப் பார்த்து அந்த ஸைனியத்தை அழைத்துக்கொண்டு ராத்திரி காலத்தில் தன் டேராவுக்கு ஓடிப்போனார்.

அன்றிரவு துரியோதனன் தர்மபுத்திரரை பிடிக்கவில்லையே என்று துரோணாசாரியாரை கடுமையான வார்த்தையைப் பேசவும் அவர் இவ்வாறு சொன்னார். "அர்ஜுனனை யுத்த பூமியைவிட்டு

யாராவது தூரத்தில் அழைத்துப் போகட்டும் பிறகு தர்மபுத்திரனை நான் பிடிக்கிறேன்.'' பிறகு மகா ரதிகனும் ஸம்ஸப்தகருடன் கூடியவனுமான ஸுசர்மா அர்ஜுனனை இந்த யுத்தாங்கத்தை விட்டு வெகு தூரம் யுத்தத்திற்கு அழைத்துப்போவதற்கு துரியோதனனால் ஆக்ஞாபிக்கப்பட்டான். ஸுசர்மா அப்படியே ஆகட்டும் என்று பேசினான். பிறகு ஸுசர்மா முதலான ஸம்ஸப்தகர்கள் மறுநாள் பொழுது விடிந்தவுடன் ஆக்னேய திக்குக்கு யுத்தத்திற்கு வரும்படி அர்ஜுனனை அழைத்தான். அதன்படியே அர்ஜுனன் ஸம்ஸப்தகருடன் யுத்தம் செய்தான். பிறகு பீமசேனர் இந்த யுத்தத்தில் யானை ஸைனியத்தைக் கொன்றார். பீமசேனர் கூட்டம் கூட்டமாக யானைகளைக் கொல்லும்பொழுதும், எல்லா ராஜர்களை விரட்டும் பொழுதும் துரியோதனனால் பிரார்த்திக்கப்பட்ட பகதத்தன் ஸுப்ரதீகம் என்ற யானையின்மீது உட்கார்ந்துகொண்டு தனுர்தாரியாய் பீமசேனரிடம் வந்துசேர்ந்தான்.

வைஷ்ணவாஸ்திரம் ஸ்ரீகிருஷ்ணருக்கு மாலையானது.

பீமசேனரின் ரதத்திற்கு கட்டின குதிரைகள் ஸுப்ரதீகம் என்ற யானையால் பயமுறுத்தப்பட்டவைகளாய் அங்கு நிற்கவில்லை. பிறகு ஸாத்யகி அபிமன்யு முதலானவர்கள் ஸுப்ரதீகத்தினிடம் வந்தார்கள். அந்த ஸுப்ரதீகம் இவர்களின் ரதத்தை ஆகாயத்தில் விட்டெறிந்தது. ஸாத்யகி முதலானவர்கள் ரதமில்லாதவர்களாய் ரதத்தினின்றும் பூமிக்கு பாந்துவந்து சிரமத்துடன் நின்று கொள்ளவும், பீமசேனர் பயப்படுத்தப்பட்ட தன் ரதத்தின் குதிரைகளை அடக்கி யுத்தம் செய்து கொண்டிருக்க ஸ்ரீ கிருஷ்ணர் யோசித்தார். "இந்த பகதத்தன் பீமசேனரால் ஹிம்சிக்கப்பட்டால் அவன் தன்னிடமுள்ள வைஷ்ணவாஸ்திரத்தை பிரயோகம் செய்வான். என்னுடைய வரத்தால் இதரர்களால் தாங்க முடியாததான வைஷ்ணவாஸ்திரத்தை கிரகிப்பதற்காக நானே அர்ஜுனனுடன் சேர்ந்து போகிறேன்.'' என்றிவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணர் யோசித்து ஸ்யமந்த பஞ்சகத்திற்கு புறப்பட்டார். பிறகு ஸம்ஸப்தகர்கள் அர்ஜுனனை தடுத்தனர். வீரனான அர்ஜுனன் அவர்களை மோகிப்பதற்காக அவர்களிடம் சீக்கிரம்

த்வாஷ்ட்ராஸ்திரத்தை பிரயோகம் செய்தான். த்வஷ்டாவை தேவதையாகக் கொண்ட அந்த அஸ்திர சாமர்த்தியத்தால் ஒருவருக்கொருவர் கிருஷ்ணார்ஜுனர்கள் என்று மோகமடைந்தவர்களாய் அந்த த்ரிகர்த்தர்கள் ஸம்ஹாரம் செய்துகொண்டனர். அர்ஜுனன் அந்த த்ரிகர்த்தர்களை விட்டு பகதத்தனைக் கொல்பவன் போல் சீக்கிரமே அவனுக்கு எதிரில்வந்தான். யானையின் பேரில் உட்கார்ந்திருந்த பகதத்தன் பீமசேனரை விட்டு அர்ஜுனனிடம் வந்தான். அவன் அர்ஜுனனின் ரதத்தை பிடிப்பதற்காக ஸுப்ரதீகத்தை ப்ரேரிபித்தான். ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனின் ரதத்தை அப்ரதக்ஷிணமாய் திருப்பினார். உத்தமரான ஸ்ரீ கிருஷ்ணர் மனோ வேகத்துடன் ரதத்தைத் திருப்பும்பொழுது அந்த ஸுப்ரதீகம் அந்த அர்ஜுனனின் ரதத்தைப்பிடிக்க முடியவில்லை. அர்ஜுனன் மகா க்ரூரமான பாணங்களால் பகதத்தனை அடித்தான். பலிஷ்டர்களில் சிரேஷ்டமாயும் மனுஷ்யோத்தமர்களாயுமுள்ள பகதத்தன் அர்ஜுனன் இவர்கள் அஸ்திர சஸ்திரங்களால் நீண்டகாலம் யுத்தம் செய்தனர். பிறகு அர்ஜுனன் பகதத்தனின் தனுஸ்ஸை சேதித்தான். பகதத்தன் அங்குசத்தில் வைஷ்ணவாஸ்திரத்தை மந்திரித்தான். அந்த வைஷ்ணவாஸ்திரத்தை பகதத்தன் பிரயோகம் செய்யவும் அமித பராக்கிரமமுள்ள ஸ்ரீ கிருஷ்ணர் அந்த அஸ்திரத்தை தன் ஹிருதயத்தில் தரித்துக்கொண்டார். அந்த வைஷ்ணவாஸ்திரம் ஸர்வ லோக நாதனை ஸ்ரீ கிருஷ்ணரின் தோளின்மீது வைஜயந்தி மாலையாக விழுந்தது. ஸ்ரீ கிருஷ்ணரால் வைஷ்ணவாஸ்திரம் தரிக்கப்பட்டதை அர்ஜுனன் பார்த்து "கிருஷ்ணா நீ இந்த அஸ்திரத்தை ஏன் தரித்தாய'' என்று கேட்டான். உலகத்திற்கு இருப்பிடமாயுள்ள ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனைப் பார்த்து இவ்வாறு சொன்னார். "என்னாலேயே எல்லாமே எக்காலத்திலும் தரிக்கப்படுகிறது. எனக்கு ஸமானமானவர் வேறு யாருமில்லை. எனக்கு உத்தமர் யாருண்டு. அப்பேர்ப்பட்ட நான் ஜகத்தின் ஹிதத்திற்காக வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் இந்த ரூபங்களுடன் இருக்கிறேன். இந்த நான்கு ரூபங்களால் கிரமமாய் மோக்ஷம் ஸம்ஹாரம் ரக்ஷணை சிருஷ்டி இவைகளைச் செய்கிறேன்.

வாஸுதேவாதி நான்கு ரூபமுள்ள நான் அநிருத்தன் என்ற பெயருள்ளவனாய் எல்லோரின் ஹிருதய கமலத்தில் இருக்கிறேன். அப்பேர்ப்பட்ட நான் பூர்வகாலத்தில் வராஹ ரூபத்தால் பூமி தேவியின் ஸந்தோஷத்திற்காக அவளுடைய மகனான நரகாஸுரனுக்கு இந்த வைஷ்ணவாஸ்திரத்தைக் கொடுத்தேன். இந்த வைஷ்ணவாஸ்திரம் இருக்குமளவும் பகதத்தனுடன் கூடிய நரகாஸுரனுக்கு சாகாதிருக்கும் தன்மையையும் கொடுத்தேன். இந்த அஸ்திரத்தால் கொல்லப்படாதவன் எந்த காரணத்தாலும் யாரும் இல்லை. ஆகையால் நான் அஸ்திரத்தை தரித்தேன். வைஷ்ணவாஸ்திரம் போய்விட்ட பகதத்தனை நீ இனி கொல்." என்றிவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணர் சொன்ன வார்த்தையை அர்ஜுனன் கேட்டு பாணத்தை மந்திரித்து பகதத்தனின் ஹிருதயத்தில் விட்டான். உத்தமமான மற்றொரு பாணத்தை ஸுப்ரதீகத்தின் கும்பஸ்தலத்தில் பிரவேசிக்கும்படி செய்தான். பர்வதத்திற்கு ஸமானமாயுள்ள பகதத்தனும் ஸுப்ரதீகம் என்ற யானையும் இந்திர பகவானின் வஜ்ஜிராயுதத்தால் அடி விழுந்தவர்கள் போல் கீழே விழுந்தனர். அர்ஜுனன் க்ரூரமான பராக்கிரமமுள்ள பகதத்தனையும் அவனுடைய யானையையும் ஸம்ஹாரம் செய்து தன் ஜனங்களால் பூஜிக்கப்பட்டவனாய் சந்தோஷமடைந்தான்.

பிறகு அர்ஜுனன் அசலன் விருஷபன் என்ற பெயருள்ள சகுனியின் தம்பிமார்களை ஸம்ஹாரம் செய்து பாணங்களால் சகுனியை அடித்தான். சகுனி மாயையை சிருஷ்டித்தான். அர்ஜுனன் விக்ஞானாஸ்திரத்தை ப்ரயோகம் செய்து அந்த மாயையை நாசம் செய்யும்படி சீக்கிரம் செய்தான். பாபியான சகுனி தன் மாயை நஷ்டமடையவும் ஓடினான். பிறகு அர்ஜுனன் பாண ஸமூகங்களால் சத்ரு ஸைன்னியத்தை விரட்டினான். அப்பொழுது அசுவத்தாமாசாரியார் யுத்தத்தில் மாஹிஷ்மதி நகரத்தின் அரசனான நீல ராஜாவைக் கொன்றார். அச்சமயம் பீமசேனர் அசுவத்தாமாவின் நான்கு குதிரைகளைக் கொன்று துரியோதனனின் ஸைன்னியத்தை விரட்டினார். பீமார்ஜுனர்கள் கொல்லும் ஸேனையைப் பார்த்து துரோணாசாரியார் சீக்கிரமே தன் ஸைனியத்தை திருப்பி தன் டேராவுக்கு அழைத்தார்.

அபிமன்யு வதம்.

பகதத்தனும் பிராணனை விட்டான். தர்மபுத்திரரை துரோணாசாரியார் பிடிக்கவில்லை. இதனால் துரியோதனன் மிகவும் சங்கடப்பட்டவனாய் துரோணாசாரியாரை துஷ்ட வாக்கியங்களை சிரவணம் செய்வித்தான். அதற்கு துரோணாசாரியார் துரியோதனனைப் பார்த்து இவ்வாறு சொன்னார். "அர்ஜுனன் தூர போன பின்பு தர்மபுத்திரனை பிடிக்கிறேன். இல்லாவிடில் தர்மபுத்திரனுக்கு ஸமானமானவனும் தர்மபுத்திரனுக்குச் சேர்ந்தவனுமாயிருப்பவனை கொல்கிறேன்." என்றிவ்வாறு பிரதிக்ஞை செய்து மறுநாள் காலையில் யுத்தம் செய்ய விரும்பி மறுபடியும் ஸ்யமந்த பஞ்சகத்திற்கு வந்து அங்கு வைஷ்ணவாஸ்திரத்தை ஜபித்து விஷ்ணுவின் வரத்தால் சத்ருக்களால் பேதிக்க முடியாததான பத்மம் போன்ற வ்யூஹத்தை துரோணாசாரியார் கட்டினார். அதாவது தாமரை புஷ்பம் போல் காணப்படும்படி சைனியங்களை நெருக்கமாய் நிறுத்தினார். அர்ஜுனனைத் தவிர பாண்டவர்கள் அந்த வ்யூஹத்தின் வாசலுக்கு வந்தனர். வீரனான அர்ஜுனன் வெகு தூரத்தில் ஸம்ஸப்தகர்களுடன் யுத்தம் செய்தான். பாண்டவர்கள் அந்த பத்ம வ்யூஹத்தின் வாசலுக்கு வந்து பிரயத்தனம் செய்தும் அந்த வ்யூஹத்தை பேதிக்க முடியவில்லை. பீமசேனர் தன் ஞான விசேஷ சம்பந்தத்தால் அந்த வ்யூஹத்தை பேதிக்கும் மந்திரத்தை அறிந்திருந்த போதிலும் சுய நலத்தை உத்தேசித்து மந்திரத்தை ஜபிக்கவில்லை. அப்பொழுது தர்மபுத்திரர் அந்த வ்யூஹத்தை பேதிக்கும் மந்திரத்தை அறிந்த அபிமன்யுவைப் பார்த்து இவ்வாறு சொன்னார் "ஹே சிறுவனே! இந்த வ்யூஹத்தை பேதனம் செய், நாங்கள் உன் பின்னடி வருகிறோம்." என்றிவ்வாறு தர்மபுத்திரர் சொல்ல ரதிக சிரேஷ்டனான அபிமன்யு வ்யூஹத்தை பேதித்து சத்ருவின் சைனியத்தில் பிரவேசித்தான் அபிமன்யுவை பின்தொடர்ந்து வ்யூஹத்தை ப்ரவேசிக்க புறப்பட்ட பீமசேனாதிகள் ஜயத்ரதனால் தடுக்கப்பட்டார்கள். பரமசிவனின் வர பலத்தால் ஜயத்ரதனால் தடுக்கப்பட்ட பீமசேனர் அந்த பரமசிவனின் வரத்தை மீறும் சக்தி இருந்த போதிலும் இந்த யுத்தத்தில் அபிமன்யு இறப்பது

ஸ்ரீ கிருஷ்ணருக்கு ஸம்மதமென்று தெரிந்துகொண்டு ஜயத்ரதனை மீறிப் போகவில்லை. ஜயத்ரதனிடம் பிரவேசித்திருந்த பரமசிவனுடன் பீமசேனாதிகள் யுத்தம் செய்யும்பொழுது ஆரம்பித்த காரியத்தை பூர்த்தி செய்யும் அபிமன்யு வ்யூஹத்தை பிரவேசம் செய்து சத்ருக்களின் மேலான ஸைனியத்தை கலைத்தான். கிருதவர்மாவுடன் கூடிய த்ரோணாசாரியார், துரியோதனன், கர்ணன் சல்யராஜன், அஸ்வத்தாமா இவர்களை தலைவர்களாய்க் கொண்ட ஜனங்களால் தடுக்கப்பட்டவனாய் அபிமன்யு பயமில்லாதவனாய் இவர்களைச் சேர்ந்த ஜனங்களின் வில்லை சேதனம் செய்து கொண்டு சத்ரு ஜனங்களில் சஞ்சாரம் செய்தான். அபிமன்யு துரியோதனின் மகனான லக்ஷணனை துரியோதனின் சமீபத்தில் பலாத்காரமாய் யமனுடைய சமீபம் அனுப்பினான். உத்தமனும் பராக்கிரம காரியமுள்ளவனுமுள்ள அபிமன்யு பிருஹத்பல ராஜனையும் சிரேஷ்டர்களான பத்தாயிரம் ரதிகர்களையும் இறகு கட்டின பாணங்களால் யமனிடம் அனுப்பினான். த்ரோணாசாரியார் முதலானவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரின் கோபத்திற்கு பயந்து அபிமன்யுவை தானே சாக்ஷாத்தாய் கொல்ல இயலாதவர்களாய் யோசனை செய்து, கர்ணனை முன்னிட்டுக்கொண்டு ஒரு க்ஷணத்தில் அபிமன்யுவை தனுஸ்ஸு குதிரை ரதம் இவைகள் இல்லாதவனாய்ச் செய்தார்கள். அபிமன்யுவின் தனுஸ்ஸை கர்ணனும் ஸாரதியை கிருபாசாரியாரும் குதிரைகளை த்ரோணாசாரியாரும் பாணங்களால் சீக்கிரம் நாசம் செய்து அவனுடைய கேடயம் கூடிய கத்தியையும் சக்ராயுதத்தையும் சேதனம் செய்து வெறும் கையுடன் நிற்கும்படி செய்தார்கள். கர்ணாதிகள் அபிமன்யுவை கொல்வதால் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து பயமடையவும் கதாயுத தாரியான அபிமன்யுவிடம் துச்சாசனனின் மகன் சீக்கிரம் யுத்தத்திற்கு வந்தான். மகா பராக்கிரம சாலிகளான துச்சாசனனின் குமாரனும் அபிமன்யுவும் ஒருவருக்கொருவர் கதாயுதத்தின் அடியால் ஒரே காலத்தில் பிராணனை விட்டார்கள். அபிமன்யு இறந்துபோகவும் சந்தோஷத்தால் உண்டான சத்ருக்களின் கர்ஜனையை க்ரூர பராக்கிரமசாலியான பீமசேனர் கேட்டு ஜயத்ரதன் முதலான எல்லோரையும் ஜயித்து தர்மபுத்திரரின் அனுமதியின் பேரில் உட்கார்ந்துவிட்டார்.

அந்தச்சமயம் அபிமன்யுவின் மரணத்தால் துக்கமுள்ளவர்களான தர்மபுத்திரர் முதலானவர்களை அபரிமிதமான ஸ்வரூப க்ஞான ஸம்பத்துடன் கூடிய வேதவ்யாஸர் பதரிகாசிரமத்தினின்றும் வந்து மிருத்யூ உபாக்யானம் ஷோடச ராஜ உபாக்யானம் இவைகளைச் சொல்லி போதித்தார். அன்றிரவே க்ரூரனான அர்ஜுனன் ஸம்ஸப்தக ஸமூகத்தை ஜெயித்து ஸ்ரீ கிருஷ்ணருடன் சேர்ந்து டேராவுக்கு வந்து சேர்ந்தான். வீரனான அர்ஜுனன் மகனான அபிமன்யுவின் வதத்தைக்கேட்டு மகா சங்கடமுள்ளவனாய் "நாளைசூரியாஸ்தமனத்திற்குள் ஜயத்ரதனைக்கொல்கிறேன்" என்றுப்ரதிக்ஞை செய்தான்.

அன்றிரவே ஸ்வப்பனத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனை பரமசிவனின் சமீபம் அழைத்துப் போனார். ஸ்ரீ கிருஷ்ணர் சுயம் எல்லா ஜகத்தின் ரக்ஷண விஷயத்தில் அநந்தமான சக்தி படைத்தவராயினும் "குருவின் மூலமாய்த்தான் நான் ப்ரஸாதத்தைச் செய்கிறேன்" என்று காண்பிப்பதற்காக அர்ஜுனனை அஸ்திர விஷயத்தில் குருவான ருத்ரனிடம் அதிக வணக்கமாய் அணுகச்செய்து பரமசிவனின் ப்ரஸாதத்தாலேயே அவனுடைய ஸம்ரக்ஷணைக்காக அவனுக்கு தெரிந்திருந்த பாசுபதாஸ்திரத்தை வீரியமுள்ளதாய்ச் செய்தார். அர்ஜுனனுக்கு ருத்திர ஸ்வரூபமுள்ளதுமான ரக்ஷையைச் செய்தார். ஸ்ரீ கிருஷ்ணர் அன்றிரவே உபப்லாவ்ய பட்டணத்திற்குப் போய் ஸுபத்திரை உத்தரா தேவி முதலானவர்களை சமாதானம் செய்து மறு நாள் காலையில் அர்ஜுனனின் ரதத்திற்கு நான்கு குதிரைகளை கட்டி அர்ஜுனனோடு சேர்ந்து யுத்தரங்கத்திற்கு புறப்பட்டார். (தொடரும்)

வாசகர்களுக்கு

வணக்கமான விக்ஞாபனம்.

இம்மாத்வ மித்திரன் ஆரம்பமாகி இந்த எட்டு வருடகாலத்திற்குள்ளாக சென்ற ஜேஷ்ட மாஸம்தான் பத்திரிகையை வெளியாக்க முடியாமல் நின்று போனது மிகவும் வருத்தத்தைத் தந்திருக்கிறது. அதன் காரணத்தை அறிவிக்கவும் கை நடுங்குகிறது.

கோரமான ஜுரமும் காலில் பெரிய ஆபரேஷனும் என்னை 1½
மாத காலம் பிரக்ஞையற்று அன்ன ஆகாரமின்றி மகா அசக்தி
யுடன் படுக்க வைத்திருந்தது மல்லாமல், இச்சமயம் 18 வயது
டைய எனது ஏக புத்திரன் திடீரென்று ஓர் நாள் இரவில் சாதா
ரணமான குளிர் ஜுரத்தால் இறந்து போகநேர்ந்தது. அவன்
திடகாத்திரனாய் யாதொரு உபாதியன்னியில் ஜேஷ்ட பஹுள
த்வாதசி (16-6-36) இரவு மணி 9 வரையில் ஊரிலெங்கும் சுற்றி
வந்து வீட்டின் பலவித யோக க்ஷேமங்களைப் பார்த்து வந்து
படுக்கையில் படுத்து அன்றிரவே 3 மணிக்கு பிராணனைவிட்டான்.
எப்பொழுதும் சிறித்த முகமுடையவனும், எவ்வகை சந்தர்ப்பத்
திலும் கோபமே இல்லாதவனும், எல்லோரிடமும் மிக்க அன்
புடன் நடந்து கொண்டவனும், நல்ல சிகப்பு வர்ணமுள்ளவனும்
உயர்ந்து வளர்ந்தவனும், மிக்க அழகு வாய்ந்தவனும், பொறுப்
புடன் இப்பத்திரிகை காரியத்தையும், வீட்டின் காரியத்தையும்
நிர்வாகம் செய்திருந்தவனும், தாய் தந்தையர்களின் வார்த்தைக்கு
எப்பொழுதும் கீழ்ப்படிந்து நடந்திருந்தவனும், அடுத்த வருடம்
ஸ்கூல் பைனல் பரிக்ஷைக்கு போக இருந்தவனும், ஸ்ரீ ராகவேந்திர
ஸ்வாமியிடம் திடமான பக்தி கொண்டிருந்தவனும், ஸ்ரீராமச்சந்திர
னின் திவ்ய நாமம் பெற்றதன் மகிமையால் அநேக நற்குண நற்
செய்கைகள் கொண்டவனும், யாவருக்கும் ப்ரியனுமான எனது
அருமை மகனின் ஆச்சரியமான மரணம் ஊரிலெங்கும் மிகுந்த
பரபரப்பை உண்டுபண்ணியதுடன், பெற்றோர்களின் மனதில்
தீராத் துயரத்தை விளைவித்து எனது புத்திர ஸந்தானம் விச்சித்தி
யடைந்துவிட்டது. எனது வம்சம் மகா பிரஸித்தமான ஸ்ரீ பாக
வதாசாரியாரின் வம்சமானதன் நிமித்தம், ஏராளமான விக்ரஹங்
கள் புஸ்தகங்கள், சொத்து ஸ்வதந்திரங்கள் கொண்டிருப்பதாலும்
எனதுசந்ததி பரம்பரையாய் வெகுகாலம் நீடித்திருக்கப் போகிற
தென்று நம்பி அநேக மனோரதங்களுடன் அஸாதாரணமான
இப்பத்திரிகையின் பிரசுரம் புஸ்தக வியாபாரம் முதலிய பெரிய
காரியங்களை நான் நடத்திக்கொண்டு வந்ததாலும், திடீரென்று
இந்த கோர ஸம்பவம் நடந்ததால் என் மனோ தைரியம் குலைந்து
என் எல்லா திட்டங்களும்இனி பிரயோஜனமற்றதாக நிச்சயம்

ஏற்பட்டிருக்கிறது. இதனால் கையிலுள்ள வியாபார புஸ்தகங்களை
யும், லைப்ரெரி புஸ்தகங்களையும் வெளியில் கொடுத்துவிட யோசனை
செய்திருக்கிறேன். முக்யமான விளம்பரமும் மற்றொரு பக்கத்தில்
செய்திருக்கிறேன். சென்ற நான்கு வருஷ காலமாய் பொருள்
நஷ்டத்தின்பேரில் நடத்திவரும் இப்பத்திரிகையை, எனக்கு
ஏராளமான பொருள் நஷ்டமும் மனக்கிலேசமும் வந்துவிட்டபடி
யால் இப்பத்திரிகையையும் நிறுத்தி விடவேண்டுமென்று எனது
பந்துக்கள் வற்புறுத்துகின்றனர். ஆயினும் இதுவரையில் நான்
உயிருக்கு உயிராய் எண்ணியிருப்பதும் ஸ்ரீபகவத் பாதாளால்
வெகு சிரமப்பட்டு இயற்றியிருப்பதும் பலித்தா ஸூக்தம் வேத
மந்திரத்தில் நவ்யஸீஷு அவராஸு தாவதே என்று பௌரு
ஷேயமான மகா பாரத தாத்பரிய நிர்ணய கிரந்தத்தை இயற்றுவ
தில் வாயு பகவானுடைய மூன்றாவது அவதாரத்தின் புத்தி ஓடு
கிறதென்று வேதத்தில் சிலாகிக்கப்பட்டதும், அநேகமாய் எல்லா
மத்வ மதப்ரமேயங்கள் கொண்டிருப்பதுமான ஸ்ரீ மகாபாரத
தாத்பரிய நிர்ணயத்தில், அல்லும் பகலும் இந்தஎட்டு வருட
காலமாய் பல வியாக்யானங்களையும் மூல கிரந்தங்களையும் பார்த்து
வெகு சிரமப்பட்டு, ஆண் பெண் இருபாலர்களும் அறிந்துகொள்
ளும்படி எளிய தமிழ் நடையில் மொழி பெயர்ப்பை இருபத்தைந்து
அத்யாயம் வரை எழுதி பிரசுரம் செய்து விட்டு முடிவு பாகத்தில்,
யுத்த கட்டத்தில் பீஷ்மாசாரியாரை பாணப்படுக்கையில் மகா
துக்கத்தை அனுபவித்துக்கொண்டு படுக்க விட்டும், அர்ஜுன
னின் அரும் புதல்வனை அபிமன்யுவை பத்ம வ்யூஹ மத்தியில்
ஏகாகியாய் விட்டுவிட்டு அநேக மகா ரதிகர்கள் சேர்ந்து
கொல்லச் செய்து பாண்டவர்களைப் பரிதவிக்கவிட்டும், இந்தப்
பத்திரிகையை நிறுத்தி விடுவது ஆசிரியனான எனக்கும் வாசகர்
களுக்கும் மகா அநர்த்தங்களுக்கு காரணமாகுமென்ற பயம்
விசேஷமாய் வாட்டுகிறது. அதனால் மனதை ஒருவாறு திடம்
செய்துகொண்டு தாத்பரிய நிர்ணயம் முடியும் வரையிலாவது இப்
பத்திரிகையை நடத்திவிடவேண்டும் என்று நான்நிச்சயம் கொண்
டிருக்கிறேன். இதற்கு அடிப்படையாக மனச் சமாதானத்தை
ஸ்ரீ ராகவேந்திர குருவும், பொருளுதவியை இன்னமும் அதிகமாக

சந்தாதாரர்களைச்சேர்த்து இப்போதுள்ள சந்தாதார நேயர்களும் செய்தால்தான் நான் ஸாஹஸமாய் நடத்த உத்தேசிக்கும் இம் மாத்வ மித்திரனை பிரசுரம் செய்யும் மகா காரியம் நடைபெறும். இல்லாவிடில் நான் இப்பத்திரிகையை ஆரம்பித்தபின் வெளியான மத்வமுனி தாஸா, ஹரிதாஸா, காமதேனு, வைத்யம் முதலான பல பத்திரிகைகள் அடைந்த அவஸ்தையை இம்மாத்வ மித்திரன் அடைந்து மாத்வ உலகத்திற்காகவென்று எப்பத்திரிகையும் இல்லாமல் போகும். இதை நன்கு யோசித்து இந்த எட்டு வருட காலமாய் ஸ்ரீ பகவத்பாதாளின் மதத்திற்கு விசேஷ ஸேவை செய்து மகாப் பிரஸித்தியடைந்திருக்கும் இம்மாத்வமித்திரனை இன்னமும் சொற்ப காலமாவது நடத்த சந்தாதார நேயர்கள் இப்பத்திரிகையின் சிற்சில குறைகளையும், தங்கள் குடும்ப பொருள் கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் நீடித்து சந்தாதாரர்களாக இருந்து, தங்கள் நண்பர்களையும் சேரவைத்து ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் எனது பிதாமஹராயும் குருவாயும் பாரதாசாரியார் என்ற பிரஸித்தியுடன் சுமார் 60 தடவை மகா பாரதத்தைச் சொன்ன ஸ்ரீமான் பாகவத சாமண்ணாசாரியார் மகா பாரதத்தில் பீஷ்ம பர்வாதி யுத்த பஞ்சகத்தைச் சொல்லும்பொழுது மகானுபாவர்களான இன்னின்ன ராஜர்கள் இறந்தார்களென்று அவர்களின் யுத்தத்தை ஆனுபூர்வியாய் எல்லோரும் துக்கப்படும்படி அனுவாதம் செய்வதால் வீட்டில் துக்க சம்பவாதிகள் நடந்து வந்தது போல் ஸ்ரீமத்வாசாரியாரின் பாரதமாகிய ஸ்ரீ தாத்பரிய நிர்ணயத்தில் துரோண பர்வம் சொல்லும்பொழுது, எனக்கும் பெரும் துக்கம் ஏற்பட்டு இம்மாத்வ மித்திரனின் சிரவண படனாதிகளுக்கு யோக்யமான பலன் இருப்பதாய் ப்ரத்யக்ஷமாய் தெரிந்துவந்ததின் நிமித்தம் இப்பத்திரிகையை இதுவரை வீட்டில் கொண்டிருப்பவர்களுக்கும் வாசகர்களுக்கும் ஸர்வ மங்களமுண்டாவதற்கு, அவர்கள் இத்துடன் நிறுத்தாமல் தொடர்ந்து யுதிஷ்டிர பட்டாபிஷேகம் முடிய கதையுள்ள பாகத்தையாவது வைத்துக்கொள்ளவேண்டியது அவசியமென்று என்னுடைய அநுபவத்தைக்கொண்டு இச்சமயம் வற்புறுத்துவதை சந்தாதாரர்கள் கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாகவத ரங்கனாதாசாரியார்.

விளம்பரம்.

என்னுடைய அருமை மகன் ராமசந்திரனுடைய அகால மரணத்தை முன்னிட்டு எனது லைப்ரெரியிலிருந்து அநேக புஸ்தகங்களை வெளியில் கொடுத்துவிட உத்தேசித்திருப்பதால் இம்மாத்வ மித்திரன் சந்தாதார நேயர்களும் வாசகர்களும் தங்களுக்கு தெரிந்திருக்கும் பண்டிதர்கள், வித்யார்த்திகள், பொது லைப்ரெரிகள், வாசக சாலைகள் முதலானவர்களிடம் இந்த விளம்பரத்தை தெரிவித்து அவர்களை எனக்கு எழுதச்செய்து இப்புஸ்தகங்கள் பந்தோபஸ்தாய் சரியானபடி உபயோகப்படும்படி சகாயம் செய்யக் கோருகிறேன். அபேக்ஷையுள்ளவர்கள் இன்னின்ன புஸ்தகங்கள் வேண்டுமென்று தங்கள் முழு விலாஸத்துடனும் பதிலறிய தபால் ஸ்டாம்புடனும் அறிவிக்கவேண்டும். இந்த விருத்தாந்தம் நன்கு பரவவும் வேண்டுவோர் எழுத ஸாவகாசம் தரவும் இப்பத்திரிகை வெளியான தேதி முதல் இரண்டு மாதம் இதற்கு கெடு கொடுக்கப்பட்டிருக்கிறது. பொது லைப்ரெரிகளின் வேண்டுகோளை முதன்மையாக கவனிக்கப்படும். 2வது மாதம் கழிந்த முதல் குருவாரத்தன்று மேலே கண்டபடி தன் விருப்பத்தை தெரிவித்தவர்களுக்கு முன்னாடி அறிவித்து அவரவர்கள் சிலவில் தபால் மூலமாகவோ ரயில் மூலமாகவோ புஸ்தகங்கள் அனுப்பப்படும்.

பாகவத ரங்கனாதாசாரியார்.

நல்ல தேவநாகர எழுத்தில் படிப்பதற்கு அனுகூலமாய் எழுதப்பட்டிருக்கும் அடியிற்கண்ட புஸ்தகங்கள் இனாமாய்க் கொடுக்கப்படும்.

1வது ஜாப்தா (இனாம்)

வேதாந்த கிரந்தங்கள்

		பிரதிகள்
1	மாண்டூக உபநிஷத் பாஷியம்	2
2	,, டிப்பணி வியாஸ தீர்த்தர்	1
3	ஷட் பிரசின பாஷியம் மூலம்	2
4	,, டிப்பணி மங்காலீ	1

5	தைத்ரீய உபநிஷத் மூலம்	1
6	,, பாஷியம்	2
7	,, கண்டார்த்தம்	4
8	,, டிப்பணி வியாஸ தீர்த்தர்	2
9	காடக உபநிஷத் மூலம்	1
10	,, பாஷியம்	1
11	,, டிப்பணி வியாஸ தீர்த்தர்	1
12	,, ,, வேதேச தீர்த்தர்	1
13	ஆதர்வண உபநிஷத் மூலம்	1
14	,, பாஷியம்	2
15	,, ,, டீகை	1
	,, டிப்பணி வியாஸ தீர்த்தர்	1
16	ஈசாவாஸ்ய பாஷியம்	1
17	,, டீகை	1
18	,, டிப்பணி ரகுநாதீர்த்தர்	1
19	,, கண்டார்த்தம்	2
20	ஐதரேய உபநிஷத் மூலம்	1
21	,, பாஷியம்	1
22	சாந்தோக்ய உபநிஷத் மூலம்	1
23	,, டிப்பணி வேதேசியம்	1
24	பிருஹதாரண்ய உபநிஷத்	1
25	,, பாஷியம்	1
26	,, கண்டார்த்தம்	1
27	தசோபநிஷத் மூலம் பாராயணப் புத்தகம்	1
28	ரிக் பாஷியம்	2
29	ரிக் பாஷிய டீகை	1
30	ரிக் பத புஸ்தகம்	1
31	கீதாபாஷியம்	3
32	,, டீகை	2
33	கீதா தாத்பரியம்	1
34	,, டீகை	1
35	கீதாவிவிருதி	1
36	விஷ்ணு தத்வ நிர்ணய மூலம்	3
37	,, டீகை	2
38	,, டிப்பணி ஸ்ரீனிவாஸ தீர்த்தர்	1

39	பிரம்ம ஸூத்திர பாஷியம் தத்வப்ரகாசிகா	1
40	அனுவ்யாக்யானம் மூலம்	1
41	பிரம்ம ஸூத்திர நாமாவளி	1
42	பிரம்ம ஸூத்திர நியாய ஸங்கிரஹம்	1
43	கர்ம நிர்ணய மூலம்	1
44	,, டீகை	1
45	தத்வோத்யோத டீகை	3
46	தத்வ விவேகம்	1
47	,, டீகை	2
48	தத்வ ஸங்க்யான டீகை	1
49	உபாதி கண்டன டீகை	2
50	உபாதி கண்டனம் ஸ்ரீனிவாஸ தீர்த்தீயம்	1
51	உபாதி கண்டனம் மந்தார மஞ்ஜரி	1
52	மாயாவாத கண்டனம் மூலம்	1
53	,, மந்தார மஞ்ஜரி	1
54	,, ஸ்ரீனிவாஸ தீர்த்தீயம்	1
55	மித்யாத்வானுமான கண்டனம் ,,	1
56	,, டீகை	2
57	பிரமாணலக்ஷண டீகை	1
58	கதாலக்ஷணம் டீகை	1
59	ஸ்ரீ மகா பாரத தாத்பரிய நிர்ணயம்	1
60	யமக பாரத மூலம்	1
61	தந்திரஸாரம்	2
62	பிரமாணபத்தி மூலம்	1
93	தத்வப்ரகாசிகா டிப்பணி ராகவேந்திர தீர்த்தர்	1
64	தத்வப்ரகாசிகா 2, 3 அத்யாயம்	1
65	பேதோஜ்ஜீவனம் மூலம்	1
	ஆக	87

மதிப்புரை.

ஸ்ரீ ராகவேந்திர ஸ்தோஸ்திரம்.

ஸ்ரீமத்வ மத நிஷ்டையும் தியாக புத்தியும் குடிகொண்டு மகா பிரஸித்தராயுள்ள ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் தேசபூஷணம் பிரஸன்ன வெங்கடேச ராயர் அவர்கள் மாத்வர்களின் இஹபர ஸௌகத்திற்கு பரம ஸாதனமாயுள்ள ஸ்ரீ ராகவேந்திர ஸ்தோத்திரத்தை மாத்வர்களுக்கு இனாமாய் வழங்கப்பட நல்ல காகிதத்தில், பெரிய எழுத்தில், தேவநாகரத்தில் அச்சிட்டு அழகியதொரு புத்தகமாய் வெளியிட்டிருப்பதைக்காண மிகவும் மகிழ்கிறோம். ஹைதராபாத்திலிருக்கும் ஸ்ரீமான் கோபாலகிருஷ்ண ராவ் அவர்களால் வெகு ஸிலக்ஷியமாய் கன்னட பாஷையில் எளிய நடையில் எழுதப்பட்ட மேற்படி சுலோகங்களின் தாத்பரியமும், ஸ்ரீ மத்வ ஸித்தாந்த ஸாரஸங்கிரஹமென்ற ஒரு சிறியதொரு வியாஸமும் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. கால பலத்தால் ஏழை மக்களாய்ப் போன ஆஸ்திக மாத்வர்களுக்கு அதி ஆவசியகமாயுள்ள இம்மாதிரியாயுள்ள பல புத்தகங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் பொருளுதவி செய்து ஸ்ரீ மத்வாந்தர்கத ஸ்ரீ பாதராயணரின் பரமானுக்கிரஹத்திற்கு ஸ்ரீமான் ராயர் அவர்கள் பாத்திரர் ஆவார் என்று திடமாய் நம்பியிருக்கிறோம். இப்புத்தகம் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாஸத்திற்கெழுதவும்:—

R. Gopalakrishna Rao,
Drafter Settlement Office,
Hydrabad Deccan.

ஸ்ரீ வியாஸராஜ மடத்தின் சரித்திர ஸங்கிரஹம்.

இப்புஸ்தகமும் மேற்படி ஸ்ரீமான் தேசபூஷணம் ப்ரஸன்ன வெங்கடேச ராயர் அவர்களின் பொருளுதவியின்பேரில் மாத்வர்களுக்கு இனாமாய் வழங்கப்பட அச்சிடப்பட்டிருக்கிறது. மேற்கண்ட ஹைதராபாத் ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணராவ் அவர்கள் இதன் ஆசிரியராயும் ஸ்ரீமான் K. வெங்கட்டராவ் அவர்கள் பிரசுரகர்த்தாவும் ஆவார்கள். இப்பால் சிலகாலமாய் சென்னப்பட்டணம் வியாஸராஜ மடம் என்று மைசூர் ராஜாங்க ரிகார்டுகளில் காணப்பட்டுவரும் குந்தாபுரம் வியாஸராஜ மடத்தார் தாம்தான் ஸ்ரீ வியாஸ ராஜரின் சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவர்களென்றும், பிரசித்தமாயுள்ள ஸோஸலே ஸ்ரீ வியாஸராஜ

மடம் கிளை மடம் என்றும் சொல்லி ஸ்ரீவியாஸராஜமடத்தின் பாத்தியங்களையும் மரியாதைகளையும் அபகரிக்க அநேக பிரயத்னங்களையும் ஏற்பாடுகளையும் செய்து வருவதை உத்தேசித்து சாமானியர்களனைவருக்கும் உண்மை வெளியாகும்படி வெகு சிரமப்பட்டு பல அத்தாக்ஷிகளுடன் ஸோஸலே ஸ்ரீ வியாஸராஜ மடத்தின் சரித்திரம் சுருக்கமாய் ஸ்ரீமான் V. கோபாலகிருஷ்ண ராவ் அவர்களால் அழகாய் எழுதப்பட்டிருப்பது இச்சந்தர்ப்பத்திற்கு மிகவும் பொருத்தமாயிருக்கிறது. குந்தாபுரம் மடத்தின் ஆதிக்கம் எங்கு ஏற்பட்டாலும் தென்னாட்டிலுள்ள ஸ்ரீ வியாஸராஜ மடத்து சிஷ்யர்கள் இம்மடத்தை தங்கள் ஆசாரிய மடமாக ஒருக்காலும் ஒப்புக்கொள்ள மாட்டார்களென்று திடமாய் சொல்வோம். இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ள பல அபிப்பிராயங்கள் இனிதாக இருக்கின்றன. அடியிற்கண்ட விலாஸத்தில் இப்புத்தகத்தை இனாமாய்ப் பெறலாம். K. வெங்கட்டராவ், ஜர்னலிஸ்ட் போம்மிடி சேலம் Dt.

மஹரிஷிகளின் சரீர சாஸ்திரம்.

இடை, பிங்கலை, ஸுஷும்னை, காந்தாரி, கஜஜிஹ்வை, பூஷா, யசஸ்வினி, அலம்புஷா, குஹூ, சங்கினி என்று பத்து நாடிகள் சரீரத்தின் மத்தியிலுள்ளவை.

ப்ராணன், அபானன், ஸமானன், உதானன், வ்யானன், நாகன், கூர்மன், கிருகலன், தேவதத்தன், தனஞ்ஜயன் என்று ப்ராணன்கள் பத்து. ப்ராணன் ஹிருதயத்திலும், மல வாயிலில் அபானனும், நாபி மண்டலத்தில் ஸமானனும், கழுத்து பிரதேசத்தில் உதானனும், சரீரம் முழுதும் வ்யானனும், வாந்தியில் நாகனும், கண்ணைத் திறப்பதில் கூர்மனும், தும்பலில் கிருகலனும், கொட்டாவி விடுவதில் தேவதத்தனும், ஸமஸ்த உலகமும் வியாபித்து தனஞ்ஜயனும் இருக்கிறான்.

மூன்று கோடி ஐம்பத்தி ஏழு லக்ஷம் மயிர்க்கண்களும் இருபது நகங்களும் முப்பத்திரண்டு பற்களும் இருக்கின்றன. சாதாரணமாய் எல்லா சரீரத்திலும் ஆயிரம் பலம் மாமிசமும், நூறு பலம் ரக்தமும், மேதஸ் பத்து பலமும், எழுபது பலம் தோலும், பன்னிரண்டு பலம் ஸ்நாயும், பிராணத்திற்கு ஆதாரமாயுள்ள ரக்தம் மூன்று பலமும், இருபது உளுந்து இடை வீரியமும் ஆறுயிரத்து முன்னூறு எலும்புகளும் ஸ்தூலமும் ஸூக்ஷ்மமான நரம்புகள் கோடிக்கணக்காயுமிருக்கின்றன.

விசேஷ தினங்கள்.

தாத்ருநாம ஸம்வத்ஸரம்.

சிராவண மாஸம்

22—7—36	புதவாரம்	நாக சதுர்த்தி
23—7—36	குருவாரம்	கருட பஞ்சமி
30—7—36	குருவாரம்	ஏகாதசி உபவாஸம்
31—7—36	சுக்ரவாரம்	வரலக்ஷ்மி விரதம். தயிர் விரதம் ஆரம்ப
3—8—36	பானுவாரம்	பௌர்ணமி சிரவண உப. விஷ்ணுப உப. ரிக்வேத யஜுர்வேத உபாகர்மம் காயத்ரி
5—8—36	புதவாரம்	ஸ்ரீராகவேந்திரர் புண்ய தினம் [ஜபம்
9—8—36	பானுவாரம்	கோகுலாஷ்டமி
10—8—36	சோமவாரம்	பாரணை பகல் நாழிகை 25-37 மாலை மணி
13—8—36	குருவாரம்	ஏகாதசி உப. [4-5க்கு மேல் போஜனம்
16—8—36	பானுவாரம்	அமாவாசை திலதர்ப்பணம்
17—8—36	சோமவாரம்	அசுவத்தப்ரதக்ஷிணம் விஷ்ணுப உப.

அறிக்கை.

இத்துடன் 8-வது வாலியம் முடிவடைகிறது. அடுத்த சிராவண மாதத்திய பௌர்ணமி வாக்கில் 9-வது வாலியத்தின் I-வது சஞ்சிகை வெளியாகி சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படும். வழக்கபடி அந்த முதல் சஞ்சிகையை V. P. P. யில் அனுப்புவதால் அதிக கஷ்டம் எமக்கும் சந்தாதாரர்களுக்கும் உண்டாவதாலும், வேறு இடத்தில் கண்டபடி தற்போதுள்ள சிரமதசையில் V. P. P. தபால் செலவுக்காக பெருந்தொகையை கட்டுவது அஸாத்யமாய்த் தோன்றுவதாலும், எமக்கு பத்திரிகையை நடத்த தைரியம் ஏற்பட காலதாமதமின்றி சந்தாதாரர்கள் தங்கள் சந்தா தொகை ரூ. மூன்றை மணியார்டர் செய்து ஆதரிக்கக்கோருகிறோம்.

208166

மானேஜர், மாத்வ மித்திரன்,
ஸ்ரீ வியாஸ விலாஸம்,
கும்பகோணம்.

மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர் வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் இந்த ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 8—8—0 தபாற்கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

துவைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் எமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும் ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம்தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

மாத்வ மித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्य जगत् , तत्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

இருபத்தி ஆறுவது அத்தியாயம்.

ஸ்ரீ ம. வே. பாகவத ரங்கனுதாசாரியாரின் மொழி பெயர்ப்பு

(முன் 8வது வாலியும் 367-ம் பக்கம் தொடர்ச்சி)

அர்ஜுனனின் சகட வ்யூகத்தின் யுத்தம்.

அன்றிரவே அர்ஜுனன் செய்த பிரதிக்ஞையைக் கேட்டு, துரியோதனனால் பிரார்த்திக்கப்பட்ட துரோணாசாரியார் எவ்விதத்திலும் ஸிந்து தேசாதிபதியான ஜயத்ரதனை ஸம்ரக்ஷிக்கிறேனென்று ப்ரதிக்ஞை செய்து பேதிக்க முடியாததான வ்யூஹத்தை கட்டினார். அந்த துரோணாசாரியார் மேலான தேவதைகளை அபிமானியாகக் கொண்ட சகட வ்யூஹம் (வண்டியைப்போல் ஸேனையை வகுத்து நிறுத்தல்) பத்ம வ்யூஹம், சக்ர வ்யூஹம் இவைகளை சேர்த்து ஒன்றின்பின் ஒன்றாக கட்டி சுயம் வ்யூஹத்தின் வாசலில் காவலாய் நின்றார். சல்யராஜனுடன் கூடிய கர்ணன் அசுவத்தாமா இவர்கள் கிருபாசாரியாராலும் பூரிச்சிரவஸ்ஸு முதலானவர்களாலும் ஸம்ரக்ஷிக்கப்பட்ட ஜயத்ரதனை வ்யூஹத்தின் கோடியில் நிறுத்தினார். பிறகு அர்ஜுனன் திவ்யமான ரதத்தில் உட்கார்ந்து

நாசமில்லாத ஸ்ரீ கிருஷ்ணரால் சம்ரக்ஷிக்கப்பட்டவனாய் நான்காவது நாள் காலையில் துரோணாசாரியாருக்கு எதிரில் நின்ற துர்மர்ஷணனை ஜயித்து க்ரூரமான பராக்கிரமமுள்ள திவ்யமான தனுஸ்ஸையுள்ளவனாய் குருவான துரோணாசாரியாரிடம் வந்தான். பிறகு நாழிகை ஆகிறதே என்று ஆலோசித்து அர்ஜுனன் துரோணாசாரியாரை ப்ரதக்ஷிணம் செய்து சீக்கிரம் அவரை விட்டு வ்யூஹத்திற்கு வந்தான். பிறகு ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனன் போட்ட பாணங்கள் பின்னடி விழும்படி ரதத்தை மனோ வேகமாய்க் கொண்டு போனார். பிறகு அர்ஜுனன் அநாயாஸமாய் கிருதவர்மாவை ஜயித்து அவனுடைய ஸைன்யத்தில் பிரவேசித்தான். பலத்தால் கர்விஷ்டமான உத்தம யானை குளத்தை எப்படி கலக்குமோ அப்படி பாண ச்ரேஷ்டங்களால் அந்த வ்யூஹத்தை கலக்கினான். அதிரதனான அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணருடன் சேர்ந்து ரதச்ரேஷ்டத்தில் இந்திரன் உபேந்திரன் இவர்களைப் போல் பிரகாசித்தான். க்ரூரனான அர்ஜுனன் தேகத்தை நாசம் செய்யும் பாணங்களால் சத்ருக்களின் சிரஸ்ஸுகளை சேதனம் செய்தான். அர்ஜுனன் யுத்தத்தில் த்ருடாயு ராஜனையும் அச்யுதாயு ராஜனையும் கொன்று இரண்டு பாணங்களால் அவந்திதேசத்து ராஜர்களான விந்தானுவிந்தர்களையும் யம பகவானிடம் அனுப்பித்தான். காம்போஜ ராஜனின் மகனான ஸுதக்ஷிண ராஜனையும் அம்பஷ்ட ராஜனையும் அர்ஜுனன் ஸம்ஹாரம் செய்து வருண பகவானால் பர்ணாசநதியில் பிறந்த ச்ருதாயுத ராஜனிடம் வந்தான். அந்த ச்ருதாயுத ராஜனுக்கு வருண பகவான் திவ்யமாயும் அமோகமாயும் மகத்தானதாயுமுள்ள கதாயுதத்தைக் கொடுத்தார். அந்த சுருதாயுத ராஜனால் அர்ஜுனன் க்ரூரமான பாணங்களால் அடிபட்டான். அர்ஜுனன் சுருதாயுத ராஜனை ஓர் க்ஷணத்தில் ரதமில்லாமல் செய்தான். அந்த சுருதாயுத ராஜன் நூறு பாகமாய் பிளந்துபோன சிரஸ்ஸுள்ளவனாய் பூமியில் விழுந்தான். அதற்கு காரணம் "ஹே சுருதாயுத ராஜனே! யுத்தம் செய்யாதிருப்பவனை உன் கதாயுதத்தால் நீ சுயம் அடித்தாயானால் அந்த கதாயுதத்தால் உன் தலை வெடித்துவிடும். இதில் சந்தேகமில்லை. யுத்தம் செய்பவனிடம் போட்டால் உன் கதாயுதம் ஸார்த்தமாகும்" என்று

இவ்வாறு முன் காலத்தில் வருண பகவான் சுருதாயுத ராஜனுக்கு சொல்லி இருந்தார். அந்த காரணத்தால் யுத்தம் செய்யாதிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணரிடம் அந்த சுருதாயுத ராஜன் கதாப்ரஹாரம் செய்ததால் அவன் கதாயுதத்தால் பிளந்துபோன தலையுள்ளவனாய் ஆனான்.

தன்னுடைய ஸைன்யத்தின் வீரர்கள் கொல்லப்படவும் கும்பல் கும்பலாய் சூரர்கள் ஓட்டப்படவும் தன் சைன்யம் நன்கு கலக்கப்படவும் துரியோதனன் துரோணாசாரியாரின் சமீபம் வந்து "நீங்கள் அர்ஜுனனை உபேக்ஷை செய்தீர். அய்யோ கஷ்டம்" என்று துக்கத்துடன் பேசினான். அந்த துரோணாசாரியார் இவ்வாறு சொல்லப்பட்டு மகா மந்திர சக்தியால் பேதிக்க முடியாததான கவசத்தை துரியோதனனுக்கு கட்டி "ஹே துரியோதனா! எந்த பலத்தைக்கொண்டு பாண்டவர்களின் விரோதத்தை சம்பாதித்துக்கொண்டாயோ அந்த பலத்தால் அர்ஜுனனிடம் யுத்தத்திற்கு போ." என்றிவ்வாறு துரோணாசாரியாரால் சொல்லப்பட்ட துரியோதனன் தங்க ரதத்தில் உட்கார்ந்து கொண்டு தனுஸ்ஸை எடுத்து அர்ஜுனனிடம் வந்தான். அக்னியைப்போல் பிரகாசிக்கும் அநேக பாணங்களால் அர்ஜுனனைத் தடுத்தான். அர்ஜுனன் பொறுக்கமாளாததான வேகமுள்ள பாணங்களால் துரியோதனனை அடித்தான். அந்த பாணங்கள் துரியோதனனின் கவசத்தை பேதிக்கவில்லை. பிறகு அர்ஜுனன் கோபத்தால் அவனுடைய கவசத்தை பேதிக்க திவ்யமான அஸ்திரத்தை எடுத்துக்கொண்டான். அந்த அஸ்திரத்தை பாணத்தில் ஏற்றுவதைப் பார்த்து அசுவத்தாமாசாரியார் அந்த பாணத்தை சேதனம் செய்தார். அர்ஜுனன் துரியோதனனுடைய நான்கு குதிரைகளையும் கொன்று அவனுடைய சட்டையில் பிரஹாரம் செய்தான். துரியோதனன் ஓட்டம் பிடித்தான்.

பிறகு அசுவத்தாமாசாரியார் க்ரூரமான பாணங்களால் யுத்தத்தில் அர்ஜுனனை தடுத்தார். அர்ஜுனன் அசுவத்தாமாசாரியார் கர்ணன் முதலானவர்களுடன் யுத்தம் செய்தான்.

அவர்கள் பாணங்களால் அர்ஜுனனை தடுத்தனர். ஜயத்ரதனின் நிமித்தமாக அற்புதமான வீரியமுள்ள அசுவத்தாமாதிகளுக்கும் அர்ஜுனனுக்கும் இணையற்ற அற்புதமான யுத்தம் நடந்தது.

அர்ஜுனன் கௌரவ ஸைனியத்தை பிரவேசிக்கவும் துரோணர் பாண்டவ ஸைனியத்தை பிரவேசம் செய்தார். மேலான வேகமுள்ள பாணங்களால் அந்த ரத ஸைனியத்தை ஓட்டி துரோணாசாரியார் வீரர்களை சம்ஹரித்தார். வீரச்ரேஷ்டரான துரோணாசாரியார் விருத்தராயிருப்பினும் யௌவனமுள்ள தனுர்தாரிகளின் மத்தியில் யௌவனமுள்ளவர் போல் சஞ்சாரம் செய்தார். உக்ரமான பராக்கிரமமுள்ள துரோணாசாரியார் வீரர்களின் சிரஸ்ஸை பாணத்தால் கீழே தள்ளிக்கொண்டு தர்மபுத்திரரிடம் வந்தார். தர்மபுத்திரரை அவர் பிடிப்பதற்காக வந்ததாய் நினைத்து துருபத ராஜனின் மகனான வீரியமுள்ள ஸத்யஜித் ராஜன் தடுத்தான். அவனால் தடுக்கப்பட்ட துரோணாசாரியார் அந்த ஸத்யஜித் ராஜனின் சிரஸ்ஸை பாணத்தால் சேதித்தார். அதிவீரரான துரோணாசாரியார் யுத்தத்தில் சூரனான ஸத்யஜித் ராஜனை பாண சமூகங்களால் பிடித்தார். தர்மபுத்திரர் தன் சக்தியைக் கொண்டு யுத்தம் செய்து துரோணாசாரியாரால் ஆயுதம் குதிரை ரதம் இல்லாததாய் ஓர் க்ஷணத்தில் செய்துகொள்ளப்பட்டார். தர்மபுத்திரர் இரண்டு கையை தூக்கிக்கொண்டு பூமியில் நின்றார். துரோணாசாரியாரால் பிடிக்கப்பட அணுகப்பட்டவராய் ஸகதேவனின் ரதத்தில் ஏறிக்கொண்டு வேகத்துடன் துரோணாசாரியாரை விட்டு ஓடிப்போனார்.

பிறகு பிள்ளையுடன் கூடிய திருஷ்டகேது ராஜன் ஜராஸந்தனுடைய பிள்ளையான ஸகதேவன் சைப்ய ராஜனுடன் கூடிய காசி ராஜன் ஐந்து கேய ராஜர்கள் இவர்கள் துரோணாசாரியாரிடம் வந்தார்கள். இவர்கள் எல்லோரும் அவரை பாண ஸமூகங்களால் அடித்தார்கள். பிராம்மணரான துரோணாசாரியார் திருஷ்டகேது ராஜன் முதலானவர்களை கிரமமாய் கழுத்தை சேதித்து ஊர்த்வரேகஸ்கர்களான யதிகள் சூரிய மண்டலத்தை பேதித்து எந்த

லோகத்திற்கு போவார்களோ அப்பேர்ப்பட்ட உத்தம லோகத்தை இவர்களை அடையச் செய்தார்.

கடோத்கசன் அலம்புஸ ராக்ஷஸனைக் கொன்றது.

பாண்டவர்களின் மேலான ஸைனியம் துரோணாசாரியாரால் ஓட்டப்படவும் பீமசேனரின் மகனான கடோத்கசனால் சத்ரு சைனியங்கள் கொல்லப்பட்ட வீரர்கள் கொண்டதாய் அதிகமான பராஜயமடைந்து ஓட்டம் பிடித்தன. அப்பொழுது அலம்புஸ ராக்ஷஸன் க்ரூரமான பராக்கிரமமுள்ள பீமசேனரிடம் வந்தான். திவ்யமான தேஜஸ்ஸுள்ள பாணங்களால் பீமசேனரால் பீடிக்கப்பட்டவனாய் ஓர் க்ஷணத்தில் மாயையால் மறைந்தான். அவன் மறைந்திருந்து பீமசேனரின் பின்னாடிவந்தவர்களை ஹிம்ஸித்தான். அதைக்கண்ட பீமசேனர் கோபமடைந்தார். இவ்வாறு தர்ம சங்கடம் வந்ததைப் பார்த்து பீமசேனர் காம்யமான கர்மமில்லாதவராயினும் ஸ்ரீ கிருஷ்ணரின் ஆக்ஞையால் தனக்கு இருந்து வரும் அஸ்திரத்தின் ஞானத்தை ஜனங்களுக்குக் காட்டிக்கொண்டு த்வாஷ்டாஸ்திரத்தை ஸ்வீகரித்தார். அந்த அஸ்திரத்தால் பாணங்கள் கிளம்பின. மறைந்திருக்கும் வஸ்துவை அடிக்கும் அந்த பாணச்ரேஷ்டங்கள் அந்த அலம்புஸ ராக்ஷஸனை பேதித்துக் கொண்டு பூமியை ப்ரவேசித்தன. அந்த ராக்ஷஸன் அடி விழுந்தவனாய் மகா பயங்கொண்டு பீமசேனரை விட்டு ஓடினான்.

பிறகு பீமசேனர் நன்கு விடப்பட்ட பாணங்களால் த்வேஷிகளின் ஸைனியத்தை ஓட்டினார். அப்பொழுதுதான் யுத்தத்தில் த்ரௌபதையின் பிள்ளைகள் ஒன்றாகச் சேர்ந்து ஸோமதத்தராஜனின் மகனான சல ராஜனைக் கொன்றார்கள். அப்பொழுது கடோத்கசன் அலம்புஸ ராக்ஷஸனிடம் வந்தான். ரதத்தில் உட்கார்ந்துகொண்டு இவ்விருவர்கள் ஒருக்கொருவர் யுத்தம் செய்தார்கள். கடோத்கசன் அலம்புஸ ராக்ஷஸனை ரதமில்லாமல் செய்து ஆகாசத்தில் நின்ற அந்த ராக்ஷஸனுடன் தான் ஆகாயத்தில் நின்று யுத்தம் செய்தான். பீமசேனரின் மகனான கடோத்கசன்

அலம்புஸனைப் பிடித்து பூமியில் தள்ளி காலால் அவனுடைய தலையில் அடித்தான். அலம்புஸன் தலை பொடியாகி ராஜர்களின் நடுவில் பிராணனை விட்டான். அலம்புஸன் பிராணனை விடவும் கடோத்கசன் கௌரவர்களின் ரத ஸமூகத்தை எல்லா பக்கத்திலும் ஓட்டினார்.

கிருதவர்மாவின் கதா யுத்தம்.

அப்பொழுது கிருதவர்மா பாண விருஷ்டி செய்துகொண்டு ரதத்துடன் பாண்டவர்களின் ஸைனியத்திற்கு வந்தான். ஸ்ரீ கிருஷ்ணர் பூர்வ காலத்தில் கிருதவர்மா செய்த ஸ்தோத்திரத்தால் மகிழ்ந்தவராய் ஓர் முகூர்த்தம் எல்லா சத்ருக்களையும் ஜெயிப்பாய் என்று வரனைக் கொடுத்தார். ஆகையால் கிருதவர்மா பாஞ்சால ராஜர்களையும் நகுல சகா தேவர்களையும் பீமசேனரின் எதிரில் ஜயித்து பிறகு பீமசேனரையும் பாணங்களால் அடித்தான். அப்பொழுது பீமசேனர் ஸ்ரீகிருஷ்ணரின் வரமிருக்கிறதென்று கிருதவர்மாவிடம் வரவில்லை. யாதவர்களைத்தவிர இதரர்களை ஜயிக்கும் வரன் கிருதவர்மாவுக்கு இருந்தபடியால் அந்தக் காரணத்தைக் கொண்டு யாதவனான ஸாத்யகி கிருதவர்மாவின் குதிரைகளையும் அவனையும் பாணங்களால் அடித்தான். கிருத வர்மா அப்பொழுது மற்றொரு ரதத்தில் உட்கார்ந்து ஸாத்யகியால் ஓடிப்போனான்.

அர்ஜுனன் ஸூசீமுக வ்யூஹத்தில் (ஊசியைப்போல் நிறுத்தியிருக்கும் ஸேனையில்) அசுவத்தாமாசாரியார் பிரதானமாக உள்ள கர்ணாதிகளுடன் யுத்தம் செய்யும்பொழுது சத்ருக்களின் பலத்தை நாசம் செய்வதற்காக உத்தமர்களுக்கும் உத்தமனான ஸ்ரீ கிருஷ்ணர் மங்களமான சப்தமுள்ள பாஞ்ச ஜன்ய சங்கத்தை ஊதினார். ஸ்ரீ கிருஷ்ணரின் வாய் காற்றால் மிகவும் பூர்ணமான தன் மத்ய பாகத்தால் புறப்பட்ட சப்தமுள்ள அந்த பாஞ்ச ஜன்ய சங்கம் பிரம்மா ருத்திரன் இந்திரன் முதலான ஜகத்தை ப்ரளய காலத்தில் போல் நடுங்கவைத்தது. இந்த சங்கத்தின் சப்தத்தால் காண்டீவ சப்தம் மறைந்து போகவும் அப்பொழுது தர்மபுத்திரர்

ஸாத்யகியிடம் வந்து இவ்வாறு பேசினார். "அர்ஜுனன் சத்ரு ஸைனியத்தால் இறந்து விடவும் ஸ்ரீ கிருஷ்ணர் தானே யுத்தம் செய்கிறார். ஆகையால் இப்பொழுது காண்டீவ தனுஸ்ஸின் டங்கார சப்தம் கேட்கிறதில்லை. பாஞ்சஜன்ய சப்தம் கேட்கிறது. ஆகையால் நீ ஸ்ரீகிருஷ்ணரிடம் செல். அர்ஜுனன் பிழைத்திருக்கிறானா பார். சகாயமில்லாமல் பிழைத்திருக்கும் பக்ஷத்தில் நீ அவனுக்கு ஸகாயமாய் இரு." என்றிவ்வாறு தர்மபுத்திரரால் சொல்லப்பட்ட ஸாத்யகி பிராம்மணர்களை த்ரவ்யங்களால் விசேஷமாய்ப் பூஜை செய்து அவர்களால் உத்தமமான ஆசீர்வாதத்தைப் பெற்று பீமசேனரால் அனுஸரிக்கப்பட்டவனாய் வ்யூஹத்தின் வாசலுக்கு வந்தான். பீமசேனர் வ்யூஹத்தின் வாசலை பேதித்து ஸாத்யகியை அந்த ஸைனியத்தில் பிரவேசம் செய்வித்தார். துரோணாசாரியாரால் தன்னுடைய சிஷ்யனென்று உபேக்ஷை செய்யப்பட்ட ஸாத்யகி யுத்தம் செய்து துரோணாசாரியாரின் சாரதியை ஸம்ஹாரம் செய்து நான்கு குதிரைகளை ஓட்டினான். அன்றே ஸாத்யகிக்கு பிராம்மணர்களின் ஆசீர்வாதத்தாலும் ஸ்ரீ கிருஷ்ணரின் வார்த்தையாலும் பலத்தின் விருத்தி ஆயிற்று. பூர்வ காலத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் ஸந்துஷ்டனாய் அன்று பலத்தின் விருத்தியாகும் வரனைக் கொடுத்தார். ஆகையால் விருத்தியடைந்த பலத்தால் ஸாத்யகி பீமசேனரை வ்யூஹத்தின் வெளியே நிறுத்தி ரதத்துடன் வ்யூஹத்தை பிரவேசித்தான். பாண விருஷ்டிகளால் யுத்தத்தில் சுற்றிலும் ஸைனியத்தைக் கொல்லும் ஸாத்யகியிடம் கிருதவர்மா வந்தான். ஸாத்யகிக்கும் கிருதவர்மாவுக்கும் மகா க்ரூரமான யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் ஸாத்யகி கிருதவர்மாவை ரதமில்லாமல் செய்தான். க்ரூரமான தனுர்தாரியான ஸாத்யகி கிருதவர்மாவை ஜெயித்து பாணங்களால் யௌவனமுள்ளவர்களின் சிரஸ்ஸை சேதனம் செய்துகொண்டு வீரர்களை மீறி வ்யூஹத்தில் போனான். ஜலசந்தன் என்ற ராஜன் யானையின் மீது உட்கார்ந்துகொண்டு யுத்தத்திற்கு வந்தான். தடை செய்ய பொறுக்கமாளாத பராக்கிரமமுள்ள ஜலசந்தனை பாணங்களால் யுத்தத்தில் ஸாத்யகி ஸம்ஹாரம் செய்து யானை ரதம் குதிரை சிப்பாய்களை சம்ஹாரம் செய்துகொண்டு கௌரவ ஸைனியத்தை

கலக்கினான். அந்த ஸாத்யகி கற்களை விருஷ்டி செய்யும் பர்வத தேச ராஜனைக் கொன்று எல்லா ஸேனையுள்ளவர்களையும் ஓட்டி ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனர்களிடம் வந்தான்.

ஸாத்யகி பூரிச்சிரவஸ்ஸைக் கொன்றது.

ஸாத்யகிக்கும் பூரிச்சிரவஸ் ராஜனுக்கும் மகா க்ரூரமாயும் மகா பயங்கரமாயும் விசித்திரமாயும் யுத்தம் வெகு காலம் நடந்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் குதிரைகளை ஸம்ஹாரம் செய்து ஸாரதிகளைக் கொன்று தனுஸ்ஸுகளை சேதனம் செய்து கேடயத்தையும் உத்தம கத்தியையும் எடுத்துக் கொண்டு முப்பத்திரண்டு வகையாய் விசித்திரமான போக்குகளைக் காட்டிக்கொண்டு எதிர்கொண்டு வந்தனர். யுத்தத்தில் அந்த பூரிச்சிரவஸ் ராஜன் ஸாத்யகியை பூமியில் தள்ளி அவனுடைய தலை மயிரைப் பிடித்துக் கொண்டு ஸாத்யகியின் மார்பில் தன் காலை வைத்து ஏறிக்கொண்டு அவனை சிரச்சேதம் செய்வதற்காக கத்தியை தூக்கினான். எல்லா பக்கத்திலும் கண்களுள்ள ஸ்ரீ கிருஷ்ணர் இதைப் பார்த்துவிட்டு 'சீக்கிரம் ஸாத்யகியை ரக்ஷணம் செய்' என்று அர்ஜுனனிடம் துரிதமாய்ச் சொன்னார். அர்ஜுனன் பல்லம் என்ற பாணத்தால் பூரிச்சிரவஸ் ராஜன் புஜத்தை சேதித்தான். கத்தியை தூக்கிய அவனது வலது கையை அர்ஜுனன் சேதித்து விடவும் பூரிச்ரவஸ் ராஜன் அர்ஜுனனை நிந்தித்து அஸுரா வேசத்தால் ஸ்ரீ கிருஷ்ணரை நிந்தித்துக்கொண்டு யுத்த பூமியில் பாணத்தை கீழே பரப்பிக்கொண்டு விஷ்ணுவை தியானம் செய்து உபவாஸமாய் உட்கார்ந்தான். அஸுரா வேசம் போனபின் பூரிச்ரவஸ் ராஜன் மகா பக்தியால் கருடத்வஜனை ஸ்ரீ கிருஷ்ணரை தியானம் செய்யும் பொழுது ஸாத்யகி எழுந்து ஸ்ரீ கிருஷ்ணரும் அர்ஜுனரும் வேண்டாமென்று தடுக்கபோதிலும் பூரிச்ரவஸ் ராஜனின் சிரச்சேதம் செய்தான். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணர் ஸாத்யகிக்காகவே தயார் செய்து தன்னுடன் கூடவே கொண்டு வந்திருந்த தாருகனை ஸாரதியாகக் கொண்ட தன்னுடைய ரதத்தை ஸாத்யகிக்குக்கொடுத்தார்.

(தொடரும்)

பிரம்மஸூத்திரம்.

(முன் 8வது வால்யம் 303ம் பக்கம் தொடர்ச்சி)

ஸ்ரீமான் M. ராமராவ் எழுதுவதாவது—

6-வது அதிகரணம்

ஸமன்வயாத்தியாயம் என்ற இம்முதல் அத்தியாயத்தின் பெயருக்கேற்ப உலகத்திலுள்ள எல்லா பதங்களும் எழுவித தாத்பரிய லிங்கங்களைக் கொண்டு ஆராயுமிடத்து பகவானையே முக்கியவிருத்தியால் குறிக்கின்றன என்ற விஷயம் 11 சூத்திரங்களைக்கொண்ட முதல் 5 அதிகரணங்களில் கூறப்படாமல் இந்த அதிகரணம் முதற் கொண்டுதான் சொல்லப்படுகிறது, என அறிய வேண்டும். உலகத்திலுள்ள பதங்களோ நான்கு விதமானவை. அவற்றுள் பகவானை குறிக்கும் நாராயணன் முதலியன, தத்ரப்ரஸித்த சப்தங்கள் எனப்படுவன. இரண்டாவதாக ஆகாசம், பிராணன், ஜ்யோதிஸ்,காயத்ரீ முதலிய சப்தங்கள் பகவானைக் குறிக்காமல் முறையே பூதாகாசம், வாயு, அக்னி, காயத்ரீ சந்தஸ் முதலிய வேறு பொருள்களைக் குறிப்பன. இம்மாதிரி பகவானைக் குறிக்காமல் வேறு பொருள்களைக் குறிக்கும் சப்தங்கள் அன்யத்ர பிரஸித்த சப்தங்கள் என்று சொல்லப்படும். மூன்றாவதாக அக்ஷரம் என்ற சப்தம் பகவான் லக்ஷ்மி இருவரையும் குறிக்கும். ஈசானன் என்னும் பதம் பகவானையும் சிவனையும் குறிக்கும். வஜ்ரம் என்ற பதம் பகவானையும் இந்திரனின் வஜ்ராயுதத்தையும் குறிக்கும். இம்மாதிரி பகவானையும் வேறொரு பொருளையும் இரண்டையும் குறிக்கும் சப்தங்களுக்கு உபயத்ரபிரஸித்த சப்தங்கள் எனப்பெயர். நான்காவதாக ஜ்யோதிஷ்டோமம் என்ற சப்தம் ஓர்வித யாகத்தையே குறிக்குமே தவிர பகவானை ஒரு பொழுதும் குறிக்காது எனத் தோன்றுகிறது. ப்ரகிருதி என்ற சப்தம் ஜடப்ரகிருதியையோ அல்லது சேதனப்ரகிருதியான லக்ஷ்மியையோ குறிக்கிறதே தவிர ஒருபொழுதும் பகவானைக் குறிக்காது எனத் தோன்றுகிறது. இம்மாதிரி பகவானை ஒருபோதும் குறிக்காது எனத் தோன்றக்

கூடிய சப்தங்களுக்கு அன்யத்ரைவ பிரஸித்த சப்தங்கள் எனப் பெயர். இவ்வாறு நான்கு விதமான சப்தங்களினிடையே முதலாவதான தத்ர பிரஸித்த சப்தங்களுக்கு பகவானிடம் ஸமன்வயம் செய்யத் தேவையில்லை. மற்ற மூவகையான சப்தங்களிலும் பெயரைக் குறிப்பது நாமரூபமான சப்தம் என்றும், தர்மத்தைக் குறிப்பது லிங்கரூப சப்தம் என்றும் இரண்டு பிரிவுகளுண்டு. இந்த முதல் அத்தியாயம் முதல் பாகத்தில் அன்யத்ர பிரஸித்த நாமரூப சப்தங்களுக்கு ஸமன்வயம் என்றும், இரண்டாவது பாதத்தில் அதைச்சேர்ந்த அன்யத்ர பிரஸித்த லிங்கரூப சப்தங்களுக்கு ஸமன்வயம் என்றும் மூன்றாவது பாதத்தில் உபயத்ர பிரஸித்த நாமலிங்க சப்தங்களுக்கு ஸமன்வயம் என்றும் நான்காம் பாதத்தில் அன்யத்ரைவ பிரஸித்த நாமலிங்கரூப சப்தங்களுக்கு ஸமன்வயம் என்றும் செய்யப்பட்டிருப்பதாய் அறிந்துகொள்ள வேண்டியதவசியம்.

இந்த ஆறாவது அதிகரணத்தில் 'ஆனந்த மயன்' என்ற அன்யத்ர பிரஸித்த நாம சப்தம் பகவானையே முக்ய விருத்தியால் குறிக்கும் என்று ஸமன்வயம் சொல்லப்படுவதால் இதற்கு ஆனந்தமயாதி கரணம் என்று பெயர். இதில் 12 முதல் 19 ஆக எட்டு சூத்திரங்கள் அடங்கியுள்ளன.

12. ஓம் ஆனந்த மயோப்யாஸாத் ஓம்.

தைத்திரீய சுருதியில் கூறப்படுவதாவது:— ஜீவனுடைய சரீரத்திலே அன்னமயன், பிராணமயன், மனோமயன், விக்ஞானமயன், ஆனந்தமயன், என்ற ஐந்து பேர்கள் வசித்து வருகிறார்கள். ஒவ்வொருவரும் புருஷ ரூபமாய் இருக்கிறார்கள். ஒவ்வொருவரின் தலை இன்னது, கைகள் இன்னவை, உடல் இன்னது, கால்கள் இன்னவை என்று சொல்லிவிட்டு ஆனந்தமய ரூபத்தை வர்ணிக்குங்கால் அவருக்குப் பிரியம் என்பது தலை, சிற்றின்பம் வலது கை, பேரின்பம் இடது கை, ஆனந்தம் உடல், பிரம்மா இரு கால்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்த பிரம்ம சூத்திரத்தின் முதல் அதிகரணத்திலோ பிரம்மத்தின் ஜிக்ஞாஸை

செய்யவேண்டியதவசியம் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆனந்தமயன் பிரம்மத்தைத் தவிர வேறுபட்டவன் என்று ஏற்பட்டால் பிரம்மம் ஆனந்தமயனின்பாதமாக இருப்பதைக்கொண்டு முக்கிய புருஷனை ஆனந்தமயனின் ஜிக்ஞாஸையே செய்யத் தகுந்தது என்றும், பிரம்மத்தின் ஜிக்ஞாஸை செய்யத்தகுந்ததல்லவென்றும் சங்கை ஏற்படும். அச்சங்கையைப்போக்க அந்த ஆனந்தமயனும் இந்தப் பிரம்மந்தான் என்று இந்த அதிகரணத்தில் சொல்லப்படுகிறது.

இந்த அதிகரணத்திற்கு ஆனந்தமயன் விஷயம், அந்த ஆனந்தமயன் என்பவன் ஜீவனா, சேதனப்ரகிருதி என்று சொல்லப்படும் லக்ஷ்மியா, ஜடப்ரகிருதியா அல்லது விஷ்ணுவா என்பது சந்தேகம். அவன் விஷ்ணுவைத் தவிர்த்து மற்றவர்களே என்பது பூர்வ பக்ஷம். அவன் விஷ்ணுதான் என்பது ஸித்தாந்தம்.

இனி சொல்லப்போகும் சூத்திரங்களின் அர்த்தத்தைச் சொல்லுங்கால் தத்து ஸமன்வயாத் என்ற 4வது சூத்திரத்திலுள்ள தத்து என்றபதத்தை இதில் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஆகையால் சூத்திரார்த்தமாவது-ஆனந்தமய: தைத்திரீய சுருதியில் கூறப்பட்ட ஆனந்தமயன் மாத்திரமல்ல, அன்னமயன் முதலிய நால்வருடன் சேர்ந்த ஐந்து பேர்களும்ம தத்து அந்த விஷ்ணுதான். ஏனென்றால் அப்யாஸாத்—அந்த ப்ரகரணங்களில் ஒவ்வொன்றிலுமே அன்னம் பிரம்ம உபாஸதே—என்று பகவானையே குறிக்கும் பிரம்ம சப்தமும்—ஏதம் அன்னமயம் ஆத்மானம் உபஸங்கிராமதி—என்று விஷ்ணுவையே குறிக்கும் ஆத்மா என்ற சப்தமும், அடிக்கடி திருப்பித்திருப்பி சொல்லப்படுகிறது. அப்யாஸமாகிய திருப்பித் திருப்பிச் சொல்வது என்பது முற்கூறப்பட்ட ஏழுவித தாத்பர்ய லிங்கங்களில் ஒன்றாகும்.

தைத்திரீய சுருதியில் இந்த ஐந்து ரூபங்களில் அன்னமயன் தான் முதலிற் கூறப்பட்டவன். அதையொட்டி சூத்திரகாரர் அன்னமயோ அப்யாஸாத் என்று சொல்லவேண்டியிருக்க, கடைசியிற் கூறப்பட்ட ஆனந்தமயனைக் குறித்து ஆனந்தமயோ

அப்யாஸாத் என்று சொன்னதினால் எல்லோராலும் விரும்பப்படுவது ஆனந்தம் என்று ஊகிக்கவேண்டியதாயிருக்கிறது.

(தொடரும்)

புராண குறிப்புகள்.

1. 84 லக்ஷம் நரகங்கள் இருக்கின்றனே. அவைகளில் தாமிஸ்ரம், லோஹசங்கு, மஹாரௌரவம், சால்மலீ, ரௌரவம், குட்மலம் காலசூத்ரிகம், பூதமிருத்திகை, ஸங்காதம், லோஹிதோதம், ஸவிஷம், ஸம்பிரகம்பனம், மகாநிரயம், காலோலம், ஸஞ்ஜீவனம், மகாபதம், அவீசி, அந்ததாமிஸ்ரம், கும்பீபாகம், ஸம்பிரதாபனம், தபனம் என்ற 21 நரகங்கள் பிரதானமாயுமிருக்கின்றன. (காருடம்)

2. சுக்லபக்ஷம் தேவதைகளுக்கும், கிருஷ்ணபக்ஷம் பித்ருக்களுக்கும் சேர்ந்தது. அமாவாசை பூர்ணமாயிருந்தால் அதுவும் தேவதைகளுக்கு பிரியமானது. சுக்லபக்ஷம், கிருஷ்ணபக்ஷம் ஆகிய இரண்டிலுமுள்ள தசமி, ஏகாதசி, துவாதசி 3 நாட்கள் வித்தியாசமில்லாமல் லக்ஷ்மீபதியான விஷ்ணுவுக்குச் சேர்ந்தவைகள். அதனால் இவை சமஸ்தமான தேவதைகளுக்கும் பிரியமானவைகள். சுக்லபக்ஷப்ரதமை அக்னிக்கும், த்விதியை பிரம்மாவுக்கும், த்ருதியை பார்வதிக்கும், சதுர்த்தி விக்னேசுவரருக்கும், பஞ்சமி எல்லா ஸர்பங்கள் ஆதிசேஷன் இவர்களுக்கும், ஷஷ்டி யமன் இந்திரன் இவர்களுக்கும், ஸப்தமி சூரியனுக்கும், அஷ்டமி விச்தேவதைகள் சந்திரன் இவர்களுக்கும், நவமி மகாலட்சுமிக்கும், அப்படியே வாயு வருணன் துர்க்கா ஸரஸ்வதி இவர்களுக்கும், தசமி ஏகாதசி துவாதசி மகா விஷ்ணுவுக்கும், த்ரயோதசி குபேரன் கருடன் இவர்களுக்கும், சதுர்தசி எல்லா மருத்தேவதைகளுக்கும், கிருஷ்ணபக்ஷத்திய சதுர்தசி மகா ருத்திரனுக்கும் அமாவாசை பித்ருக்களுக்கும் தேவதைகளுக்கும் சேர்ந்தது.

3: காயத்ரி மந்திர ஜபமானது வேதங்களின் அக்ஷரங்களைச் சொல்லும் பலனைவிட நூறு மடங்கு அதிகமானது. பவமான ஸூக்தத்தைச் சொல்வது 400 காயத்ரி ஜபத்தின் பலனைக்கொண்டது.

வேதத்தின் பதத்தைச் சொல்வது ஸம்ஹிதையைச் சொல்லும் பலனைக் காட்டிலும் 2 மடங்கு பலனும், கிரமத்தைச் சொல்வதால் 3 மடங்கு பலனும், ஜடையைச்சொல்வதால் 4 மடங்கு பலனும் உண்டு. காயத்ரியைச் சொல்லும் பலனின் பாதிபாகம் புராணங்களையும் ஸ்மிருதிக்களையும் சொல்வதால் உண்டாகிறது. பகவத்கீதை விஷ்ணு ஸஹஸ்ரநாமம் இவைகளைச்சொன்னால் புண்யத்திலும் பாபத்தைப்போக்குவதிலும் காயத்ரிக்கு ஸமானமான பலனுண்டு. படனம் செய்வதால் உண்டாகும் பலனைவிட நான்கு மடங்கு பலன் அதன் அர்த்தத்தை அறிவதால் உண்டாகிறது. அந்த அர்த்தத்தை பகவத் பக்தர்களுக்குச் சொல்வதால் பத்து மடங்கு பலனுண்டாகிறது. பூமிதானம்தான் உலகில் மகத்தான தானமென்று சொல்லப்படும். அதைவிட பத்துமடங்கு பலனைக்கொண்டது வித்யாதானம். அதாவது ஒருவனுக்கு அறிவை உண்டாக்குவது.

4. சிக்ஷை, கல்பம், வியாகரணம், நிருக்தம், சந்தஸ், ஜோதிஷம் என்னும் ஆறு சாஸ்திரங்கள் வேதத்தின் அங்கங்கள் வேதத்தின் அர்த்தத்தை அறிய இந்த ஆறு சாஸ்திரங்களை உபயோகிக்கவேண்டும். சிக்ஷை கல்பம் வியாகரணம் நிருக்தம் சந்தஸ் என்பது அர்த்தத்தை அறியத்தான் உபயோகம். தர்க்க சாஸ்திரமும் ஸர்வ வித்தைகளுக்கும் தீபம்போல் ஞானத்தைக்கொடுக்க ஸாதனமாகும், அந்த சாஸ்திர பலத்தால் வேதத்தை தத்வஞானத்தை அறிய உபயோகிக்க வேண்டுமே ஒழிய சபையில் பேசி ஜனங்களை மோஹித்து தன் ஜீவனமாகக்கொண்டால் பாதிபலன் தான் உண்டாகும். அதே மாதிரித்தான் ஜோதிஸ் சாஸ்திரமும் ஜாதகப்ரச்னத்தை அறியமட்டில் ஜ்யோதிஸ் சாஸ்திரத்தை உபயோகித்தால் புண்யமே இல்லை. வேதாத்யயனமில்லாமல் ஜாதக விஷயமான ப்ரச்னத்தை மாத்திரம் அறிந்திருந்து அவைகளைச் சொல்பவனும் கணிதத்தை அறியாமல் பஞ்சாங்காதிகளைச் சொல்பவன் எந்த வைதிக காரியத்திற்கும் உபயோகமில்லாதவன். சிராத்தாதி எந்த தானமும் அவனுக்குக் கொடுக்ககூடாது. தன்சொந்த வேத சாகையை ஸ்வல்பம் கூட அத்யயனம் செய்யாமல் மேற்கண்ட ஆறு வேதாங்கங்களில் மகா பண்டிதனாயிருப்பினும் அவன் எதற்கும் உதவாதவன்.

5. பால்ய வயதுடைய பிராம்மணனும் வயது முதிர்ந்த பிராம்மணனும் இருவர்களும் இருக்கையில் தானம் முதலியவைகளுக்கு ஸத்பாத்திரன் யாரென்றால் படித்தவன் தான். அவன் தான் பகவானுக்கு

பிரியனுனவன். அவனுக்கு கொடுக்கும் அன்னதானம் திரவியதானம் முதலியவைகளால் பகவான் விசேஷ ப்ரீதியடைவார்.

6. புராண கதையையோ பாரத கதையையோ பகவத் பக்தன் ஒருவன் சொந்தமாய் ரசனம் செய்தால் அவனுக்கு இந்திர லோகத்தில் வாஸமே ஏற்படும் அவனுடைய கிரந்தத்திலுள்ள அக்ஷரங்களின் கணக்குப்படி அவ்வளவு வருஷம் அங்கு வசிப்பான். பகவானுடைய பக்தியும் பிரஹஸ்பதி ஆசாரியாரின் ஸஹவாஸமும் ஏற்படும். அவனவன் பேசும் பாஷையில் பகவானையும் பகவத் குணங்களையும் வர்ணித்து நூல்களை எழுதியிருந்தாலும் அந்த நூல்களை கேட்பவனுக்கும் சொல்பவனுக்கும் மகா பாரதத்தின் சிரவண படனத்தின் ஸஹஸ்ராம்ச பலனுண்டு. அந்த நூலின் கர்த்தாவுக்கு நூறு அம்சம் பலனுண்டு.

7. ஆயுர்வேதமாகிய வைத்திய சாஸ்திரம் ரிக் வேதத்திற்கு உபவேதமாகும். பிறர்களின் உபகாரத்திற்காகவும் தன் ஆரோக்கியத்திற்காகவும் தன் பிழைப்பிற்காகவோ பிராம்மணர்கள் இதை அவசியம்படித்தறியவேண்டியது. உபாதியால் கஷ்டப்பட்டு இளைத்துப்போகும் பிராம்மணனுக்கு மருந்து கொடுத்து சொஸ்தம் செய்தால் பிரம்மஹத்யாதி மகா பாபங்கள் உடனே தொலைந்துபோகும். நானூறு கிருச்ரம் செய்த புண்யமுண்டாகும். மருந்துகொடுத்து மகா ப்ரயத்தினம் செய்தும் ஆயுஸ் இல்லாமல் அந்த பிராம்மணன் இறந்துபோனுலும் பாதி பலனுண்டு. பிராம்மணன் அவசியம் சங்கீதத்தை கற்றுக்கொள்ளவேண்டும். பகவத்பரமாய் பக்தியுடன் பிராம்மணன் பாடினுல் கந்தர்வ லோகமே கிடைக்கும். தனுர் வேதத்தையும் சட்டத்தையும் பிராம்மணன் ஜீவத்னதிற்காகவும் வைத்துக்கொள்ளலாம். ஆனுல் அந்த ஞானத்தால் பலனில்லை. க்ஷத்திரியனுக்கோ ஸம்பூர்ணவேதத்தின் அத்யயனம் செய்ததின் பாதிபலனுண்டு.

8. குருவாயிருந்தாலும் பகவத் துவேஷியாயிருந்தால் வாதத்தில் அவனை ஜயிப்பதில் பிராம்மணனுக்கு தோஷமில்லை. அதனுல் அவனுக்கு புண்யமே உண்டாகும். பகவானுடைய குணங்களை உலகத்தாருக்கு பிரசாரம் செய்பவனை, பகவான் தான் பிறப்பற்றவராயினும் தனக்கு பிதாவென்றே, சொல்லிக்கொள்கிருர். அவனுக்கு ஸமானன்

யாருமில்லை என்றும் தனக்கு மிக்கப்ரியனென்றும், தன்னுடன் கூட வைகுண்டத்தில் தன்னைப்போல் சதுர்புஜ யுக்தனுய் சங்க சக்ர கதாதாரியாய் தன் பக்தக்களுடன் புனராவிருத்தியில்லாமல் வைத்துக்கொள்வதாகவும் அவனுக்கு மறுபிறப்பு இல்லை என்றும் சொல்லியுள்ளார்.

9. பகவானுக்கு ஒரு லக்ஷம் ஜாதி புஷ்பத்தையோ, மல்லிகை புஷ்பத்தையோ, கமல புஷ்பத்தையோ இதைப்போன்ற வாசனையுள்ள ஸாத்விகமான புஷ்பங்களையோ அர்ச்சித்தால் நாற்பதினுயிரம் நமஸ்காரம் செய்த பலன். ஒருலக்ஷம் ஸம்பங்கி புஷ்பங்களைக்கொண்டு அர்ச்சித்தால் ஒரு லக்ஷம் நமஸ்காரம் செய்த பலன், ஒரு லக்ஷம் துளசிதளங்களால் அர்ச்சித்தால் நான்கு லக்ஷம் நமஸ்காரம் செய்த பலன். துளசி தளத்தை உபயோகிக்காமல் செய்த பூஜை நிஷ்பலன். துளசி அகப்படவில்லை என்ருல் உலர்ந்துபோன அதன் காஷ்டத்தை ஒடித்து அதைக்கொண்டு அர்ச்சிக்கலாம். குங்குமம் கஸ்தூரி இவைகளைக்கொண்டு அர்ச்சிப்பது பகவத் ப்ரீதிகரம். துளசி கிடைக்காமலிருந்தால் பகவானுக்கு ஒருதரம் ஸமர்ப்பித்த துளசியை ஜலத்தால் அலம்பிவிட்டு மறுமுறை ஸமர்ப்பிக்கலாம். நிர்மால்யத்தின் தோஷம் நீங்கும். துளசி காஷ்டமும் அகப்படாமலிருந்தால் துளசி துளசி என்று நாம ஸங்கீர்த்தனம் செய்தால் போதுமானது. (வாராஹம்)

(தொடரும்)

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

ஸ்ரீ மத்வ விஜயம்.

எட்டாவது ஸர்க்கம்.

(முன் 8-வது வால்யம் 349-ம் பக்கம் தொடர்ச்சி.)

---

33. (i) சாணை பிடித்து கூர்மையான பாண ஸமூகங்களால் வியக்தமான பாக்கிரமமுள்ள ப்ரபுவான ஸ்ரீராமர் பூமிக்கு பாரமாயும் பெரும் சரீரமுள்ள கும்பகர்ணனுகிய கஜசிரேஷ்ட

முள்ளதும் கர்வங்கொண்டதும் அவனுடைய ஸஹோதரனை ராவணனைக் கொண்டதும் தேவேந்திரனின் சத்ருவான இந்திரஜித்தோடு கூடினதுமான ஏராளமான ராக்ஷஸ ஸைனியத்தை ஸம்ஹாரம் செய்தார். (ii) ஸ்ரீக்ருஷ்ணரோவென்றால் தீட்டின அரங்களோடு கூடின ஸுதர்சனமென்னும் சக்ராயுதத்தால் ப்ரஸித்தமான பராக்கிரமமுள்ளவராய் பெரியதான கும்பஸ்தலமும் காதும் கொண்டதான கஜ சிரேஷ்டங்களுள்ளதும், தம்பிமார்களோடு கூடியதும் இந்திர சத்ருக்களான தைத்யர்களோடு கூடியதும் கர்வமுள்ளதும் பூமிக்கு பாரமாயுள்ளதுமான அநேக ஸைனியத்தை ஸம்ஹரித்தார். 34 (i) ராக்ஷஸர்களைக் கொன்றபின் அக்னிப்ரவேசம் செய்த பாரியாளான ஸீதா தேவியுடனும் ஸஹோதரனை லக்ஷ்மணனை முன்னிட்ட ஹனுமார் முதலானவர்களுடனும் சேர்ந்து ஸ்ரீராமர் தன் இருப்பிடமான அயோத்யா பட்டணம் வந்து தர்மமார்க்கமாய் வெகு காலம் ராஜ்ய பாரம் செய்து ஸாது ஜனங்களுக்கு அவர்களின் இஷ்டத்தைத் தந்து தன்னுடைய மூல ரூபத்துடன் நன்றாய் ஐக்யமடைந்தார். (ii) பொது ஜனங்களுக்கு வெகுகாலம் இஷ்டத்தை அளிக்கும் ஸ்ரீ கிருஷ்ணர் பூபாரத்தை தொலைத்தபின் அக்னிப்ரவேசம் செய்து சாமானிய ஜனங்களை மோகிப்பதற்காக தன் சரீரத்தை பரித்யாகம் செய்த பாரியாளான ருக்மணி தேவியுடன் கூடியும் ஸஹோதரனை பலராமனை முன்னிட்ட யாதவர்களுடனும் சேர்ந்து தன்னுடைய மூல ரூபத்துடன் நன்றாய் ஐக்யமடைந்தார். 35. (i) அந்த நாராயணர் விஷ்ணுவின் நற்கீர்த்தியாகிய பகவத் கதைகளை, சிரவணாதிகளைச் செய்து நிர்மலமான மனதுள்ள விசாலர் என்னும் ப்ராம்மணனால் இதாதேவியிடம் மஹிதாஸனென்று பெயருள்ள பூஜ்யமான ஆசாரியாராய் ஆவிர்பவித்தார். இந்த மஹிதாஸர் அநேக தொந்திரவுகளுள்ள இந்த ஜகத்தில் பாபங்கள் தொலைய பலவகையாய் வெகு ஸ்பஷ்டமான வைஷ்ணவ சாஸ்திரங்களை நிர்மாணம் செய்வதாகிய சாஸ்திர பிரதிஷ்டையைச் செய்தார். (ii) எப்போதும் பிரஸித்தராயும், பரிசுத்தமான மனமுள்ளவராயுமுள்ள விஷ்ணு யசஸ் என்ற பிராம்மணரிடமிருந்து இந்த பகவான் கல்கி என்று பெயருள்ளவராய்ச் பிறந்தார்.

இந்த கல்கி எப்போதும் உற்சவமுள்ள தாஸர்களான தேவர்களால் பூஜிக்கப்படுகிறவராய் இவ்வுலகில் பாபிஷ்டர்களும், மிலேச்ச ராஜர்களுமான கள்வர்களை கொல்வதற்காக மிக்க பிரகாசமாயுள்ள வஜ்ஜிராயுதம்போல் நிலையுள்ளதாயுமுள்ள அநேக தேஜஸ்ஸுள்ள கத்தியாகிய ஆயுதத்தை கைப்பிடித்தார். 36. இந்த நாராயணர் பாபமாகிய சேறு இல்லாத நற்குணமுள்ள ருசிப்ரஜாபதியினின்றும் ஸ்வாயம்புமனுவின் குமாரியான ஆகூதி தேவியின் பிள்ளையாய் யக்ஞமூர்த்தி என்று பிறந்தார். அவர் காலாந்தரத்தில் தேவேந்திரனின் ஸ்தானத்தில் இருந்துகொண்டு அதிகமாய் ஸ்வரூபபூதமான தன் பக்தியால் நிறைந்தவர்களான தேவர்களை தக்ஷிணாதேவியாகிய லக்ஷ்மியிடம் உண்டாக்கினார். (ii) இந்த நாராயணர் நல்லதான தபஸ்ஸில் ருசியுள்ளவரான கர்தம ப்ரஜாபதியினின்றும் ஸ்வாயம்புமனுவின் குமாரியான தேவஹூதியின் குமாரராய் கபில ரென்று பெயர்கொண்டு பிறந்தார். அந்த கபில மூர்த்தி பகவான் நல்ல மனதுடையவர்களாயும், சுத்தமான அந்தக்கரணமுள்ளவர்களுமான தேவர்கள், ரிஷிகள் முதலியவர்களை தான் செய்த சாஸ்திரமாகிய ஸாங்கிய சாஸ்திரத்தின் உபதேசத்தால் அதிகமான தன் பக்தி பூர்ணமாயுள்ளவர்களாய்ச் செய்தார். 37. (i) மிகவும் பெரியதான க்ஷீரஸமுத்ரமென்ன மந்தர பர்வதமென்ன, இவை ஒன்றுக்கொன்று சேர்ந்து அதனின்றும் ஆவிர்பவித்த மிக்க யௌவனவயதுடையதும், உத்தமமான மந்தஹாஸமுள்ளதும் அஸுரர்களுக்கு அஹிதம் செய்ததுமான இந்த பகவானுடைய தன்வந்தரி மூர்த்தி தேவ சமூகத்திற்கு அமிர்தகலசத்தைக்கொடுத்தது. (ii) மிக்க பெரியதான ஸ்தனங்கள் ஒன்றுக்கொன்று உறைபடுவதால் பிரகடனமாகும் நல்ல யௌவனமுள்ள இந்த பகவானுடைய ஸ்திரீ ரூபமாகிய மோகினி ரூபம் தன்வந்தரி ரூபத்தால் தன்னாலேயே அஸுரர்களிடம் வைக்கப்பட்டதாயுள்ள அமிர்தத்தை தேவசமூகங்களுக்கு பானம் செய்ய கொடுத்தது. 38. (i) ஸாது ஜனங்களுக்கு தத்வோபதேசம் செய்து மனது சுத்தியைத் தருபவராயும் புராதனராயுமுள்ள இந்த நாராயணன் ரிஷிச்ரேஷ்டரான அத்ரி மகரிஷியால் பாணிக்கிரஹணம் செய்துகொள்ளப்

பட்ட அவருடைய பாரியாளான சுத்தமான புத்தியுள்ள அனஸூயா தேவியால் கர்ப்பத்தில் தரிக்கப்பட்டவராய் கோமளமான சரீரமுள்ளவராய் தத்தாத்ரேயரென்ற நாமமுள்ளவராய் ஆவிர்ப்பவித்தார். (ii) புராதனரான இந்த பகவான் அஞ்ஞானமென்றும் தோஷமில்லாததாயும் முனிச்ரேஷ்டர்கள் கொண்டாடத்தாயுமுள்ள சுத்த ஞானத்தால் மிகுந்த பக்தியுடன் த்யானம் செய்யப்பட்டவராயும் ஸாது ஜனங்களுக்கு ஞானோபதேசம் செய்து மோக்ஷத்தை அளித்தவராயும் பரமின் சக்தியைத் தந்தவராயும், குமாரரென்ற பெயருடன் ஆவிர்ப்பவித்தார். 39. (i) ஸாது ஜனங்களுக்கு பிரியமான இந்த நாராயணர் பரதத்வமாகிய பிரம்மத்தை அறிய ஆவலுள்ள ஸனகாதிகளால் நமஸ்கரிக்கப்பட்டவராய் ரிஷபரெனப் பெயர்கொண்ட ராஜாவாகப்பிறந்து மிக்க நிர்மலமான சித்தாந்தத்தால் பிரகாசிக்கும் பரமஹம்ஸர்களின் லக்ஷணமுள்ள ஆச்ரமத்தை வகித்து விளையாடினார். (ii) ஸாது ஜனங்களின் பிரியராயும் ஸ்வாமியாயும் பூமியைதரிப்பவராயுமுள்ள இந்த நாராயணன் பரதத்வத்தை உபதேசிக்க ஸனகாதிகளால் பிரார்த்திக்கப் பட்டவராய் மிகவும் வெண்மையான சிறகுகளால் சோபிக்கும் உத்தமமான ஹம்ஸ பக்ஷியின் லக்ஷணமுள்ள சரீரத்தை ரக்ஷித்து ஹம்ஸரூபியாய் விளையாடினார். 40 (i) மகத்தான பராக்கிரமமுள்ளவராயும் நருடைய ஸஹோதரருமான இந்த நாராயணர் ஹரி என்று பெயர்கொண்டு யமனுடைய மகனாய் பிறந்தார். இவர் சுயமாகவே ஸாதுஜனங்களின் சந்தோஷத்திற்காக கிருஷ்ணரென்ற பெயருடன் அந்த ஹரிக்கு ஸஹோதரனாய்ப் பிறந்தார். (ii) மகத்தான சக்தியடைந்த இந்த நாராயணர் ஆதிசேஷனின் ஸஹோதரராய் இருந்துகொண்டு நாராயணரெனப் பெயர்கொண்டவராய் யமனுடைய பிள்ளையாய் பிறந்தார். சுயமாகவே கிருஷ்ணரென்று பெயருள்ளவராய் அந்த நாராயணருக்கு ஸஹோதரராய் பிறந்தார். 41. வேதத்தில் ஸ்பஷ்டமாய் சொல்லியிருப்பதும் எப்பொழுதும் இருப்பதுமான மத்ஸ்யம் முதலான பத்து ரூபங்களுடையவரும் நாராயணன் முதலான நூறு ரூபங்களுடையவரும் விச்வன் முதலான ஆயிரம் ரூபங்களுடையவரும் அனந்தமான ரூபங்களுடையவரும் பரிணாமாதி தோஷமில்லாதவரும் ஞானானந்தஸ்வரூபமுள்ள

ஸமஸ்த அவதாரங்களுள்ளவரும் தன் அவதாரங்களில் பேதமில்லாததான மூல ரூபமுள்ளவருமான பரமாத்மாவான பரபிரம்மத்திற்கு நமஸ்காரம் நமஸ்காரம்.

ஸூத்திர பாஷியம் செய்ய ஆக்ஞை.

42. என்றிவ்வாறு தியானம் செய்துகொண்டு பூர்ண அந்தக்கரணமுள்ள ஸ்ரீ மத்வாசாரியார் நாராயணனை நமஸ்கரித்தார். அவரால் ஸ்நேக பூர்வமாய் ஆதரிக்கப்பட்டார். வேதவியாஸரும் நாராயணரும் ஒருவருக்கொருவர் ஆலிங்கனம் செய்துகொண்டு ஸந்தோஷப்பட்டு உட்காரவும் ஸ்ரீ மத்வாசாரியார் அவர்களின் ஸமீபம் உட்கார்ந்தார். 43. ஸமஸ்தலோகங்களுக்கும் அதிபதியான ஸ்ரீ நாராயணர் அந்த ஆசிரமத்தில் பலவகையான சம்பாஷணைகளைச்செய்து ரிஷிச்ரேஷ்டரான பராசரரின் குமாரரான ஸ்ரீ வேதவியாஸரின் அழகான முகத்தைப்பார்த்து பக்தியால் வணங்கியிருக்கும் உத்தமாதிகாரியான ஸ்ரீமத்வாசாரியாரைப்பார்த்து ஏகாந்தத்தில் இம்மாதிரி பேசினார். 44. ஹே மத்வாசாரியாரே! எந்த காரியத்தைச்செய்தால் உம்முடைய நூதனமான இந்த அவதாரம் மகத்தான பலனைக்கொண்டதாகுமோ அப்பேற்பட்டதும் இதரர்களால் செய்யமுடியாததும் ஸ்ரீவேதவியாஸருக்கு பிரியமானதும் நான் நிஷ்கர்ஷம் செய்து சொல்லப்படுவதுமான வேத காரியத்தை ஸாவதானமாய்க் கேளும். 45. ஸாது ஜனங்களுக்கு ஸம்மதமான பிரம்மஸூத்திரத்தின் அபிப்பிராயத்தை மறைத்து தன் இஷ்டப்படி ஜகம் மித்யை என்று சொல்வதாய் ரிக்வேதம் பிரம்ம ஸூத்திரம் உபநிஷத்துகள் இவைகளுக்கு பாஷியம்செய்து சுருதி ஸ்மிருதி இவைகளின் சுபாவமாயுள்ள அர்த்தத்தை கொடுப்பவர்களான ஸாது ஜனங்களிடமிருந்து தனிப்பட்ட பூமியிற்பிறந்த அஸுரர்களால் தத்வஞானம் கெட்டுப்போயிருக்கிறது. 46. நீசர்களால் இச்சைப்படி பாஷியத்தை செய்வதாகிய அநியாயத்தை நீக்கவும் தன்னுடைய பக்தஜனங்களை நற்கதிக்கு கொண்டு போய்விடவும் பிரம்மஸூத்திர பாஷியத்தைச்செய்யும். பண்டிதரான ஸ்ரீவேதவியாஸரின் நல்ல சித்தாந்தத்துடன் சுருதி ஸ்மிருதிகளை சேரும்படி செய்யும். இதற்காக சீக்கிரத்திலேயே பாரத பூமிக்குச் செல்லும்.

(தொடரும்.)

ஆசாரமாலை.

(முன் 8-வது வாலியம் 352ம் பக்கம் தொடர்ச்சி)

நிர்ருதி மூலையில் நிர்ருதி தேவதை அவனுடைய பார்யாள் இவர்களால் உபாஸிக்கப்படுகிறவரான யமனிடம் ஆவிர்பவித்த கிருஷ்ணர் அப்படியே ஹயக்ரீவர் நாராயணர் அநிருத்தர் இவர்களுக்கு நமஸ்காரம். மேற்கு திக்கில் வருணர் பாரதி தேவி இவர்களால் உபாஸிக்கப்படும் நாராயணர் ஹயக்ரீவர் அநிருத்தர் ப்ரதீஹாரரெனப்படும் அநிருத்தர் பவமானரென்ற பெயருள்ள நாராயணர், ப்ரத்யும்னர், ப்ரகாசரெனப் பெருள்ள வாஸுதேவர் ப்ரத்யும்னவ்யூகர் ப்ராணரெனப் பெயர்கொண்ட ஆதிசேஷன் அபானரெனப்பெயர்கொண்ட பாரதிதேவி, வ்யானரென்ற வாயு, உதானரென்ற ரமாதேவி, ஸமானரென்ற நாராயணர் இவர்கள் இருப்பவர்கள். இந்த தேவர்களுக்கு நமஸ்காரம், வாயு மூலையில் ப்ராவஹன், ப்ராவஹிதேவி, இவர்களால் உபாஸிக்கப்படும் நரஸிம்ஹர் ஹயக்ரீவர், நாராயணர், அநிருத்தர், ப்ரதீஹாரரென்ற அநிருத்தர், இவர்கள் இருப்பவர்கள். இவர்களுக்கு நமஸ்காரம். உத்தரதிக்கில் சந்திரன், அவருடைய பாரியாளான ரோஹிணிதேவி, இவர்களால் உபாஸிக்கப்படும் கல்கீமூர்த்தி, ஹயக்ரீவன், நாராயணர், அநிருத்தர், ப்ரதிஹாரரென்ற அநிருத்தர், பவமானரென்ற நாராயணர், ப்ரத்யும்னர், ப்ரகாசரென்ற வாஸுதேவர், ப்ரத்யும்னவ்யூகர், ப்ராணரென்ற சேஷன், அபானரென்ற பாரதீ, வ்யானரென்ற வாயு, உதானரென்ற ரமா, ஸமானரென்ற நாராயணர், இவர்கள் இருக்கின்றனர். இவர்களுக்கு நமஸ்காரம். ஈசான்ய திக்கில் ருத்திரன் பார்வதி இவர்களால் உபாஸிக்கப்படும் ஹயக்ரீவன் நாராயணன் அநிருத்தன் ப்ரதீஹாரனென்னும் அநிருத்தன் பவமானரென்னும் நாராயணர் ப்ரத்யும்னர் ப்ரகாசரென்ற வாஸுதேவன், ப்ரத்யும்ன வ்யூஹன், ப்ராணரென்னும் ஆதிசேஷன், அபானரென்னும் பாரதீ, வ்யானரென்னும் வாயு, உதானரென்னும் ரமா, ஸமானரென்னும் நாராயணர் இவர்கள் இருப்பவர்கள். இவர்களுக்கு நமஸ்காரம். ஊர்த்வதிசையில் அதாவது உயர கருடன், ஸௌபர்ணி தேவி, மன்மதன் ரதிதேவி, இவர்களால் உபாஸிக்கப்படும் நாராயணர், ப்ரத்யும்னர் இவர்கள் இருப்பவர்கள். இவர்களுக்கு நமஸ்காரம். அதோ திசையில் அதாவது கீழே சேஷன் வாருணிதேவி, மித்ரன் மைத்ரி தேவி, இவர்களால் உபாஸிக்கப்படும் சேஷசாயி பகவான் இவர்கள் இருப்பவர்கள். இவர்களுக்கு நமஸ்காரம். அவாந்தர திக்கில் கணபதி,

அவரால் உபாஸிக்கப்படும் சங்கர்ஷணர், நாற்பத்தி ஒன்பது மருத் தேவதைகள், இவர்களால் உபாஸிக்கப்படும் அநிருத்தர், ஸ்வ: என்னும் அநிருத்தர், ஸங்கர்ஷணர், ப்ரதீஹாரரெனப்படும் அநிருத்தர், நிதனரென்னும் ஸங்கர்ஷண ராமர் இவர்கள் இருப்பவர்கள்; இவர்களுக்கு நமஸ்காரம்.

ஓம் ஸந்த்யாயை நம : ஓம் ஸாவித்ர்யை நம :
ஓம் காயத்ர்யை நம : ஓம் ஸரஸ்வத்யை நம :
ஓம் ஸர்வேப்யோ தேவதாப்யோ நம: ஓம் ரிஷிப்யோ நம:
ஓம் குருப்யோ நம: ஆசார்யேப்யோ நம:
ஸர்வேப்யோ ப்ராம்மணேப்யோ நம: மாத்ருப்யோ நம:
பித்ருப்யோ நம: காமோகார்ஷீத் மன்யுரகார்ஷீத் நம:

இதன் தாத்பரியமாவது:—சந்தியாதேவி, ஸாவித்ரீதேவி, காயத்ரீ தேவி ஸரஸ்வதி தேவி, ஸமஸ்தமான தேவதைகள், ரிஷிகள், குருமார்கள், ஆசார்யர்கள், ஸமஸ்தமான பிராம்மணர்கள், மாதா பிதாக்கள் இவர்களுக்கு நமஸ்காரம். காமனும் மனோபிமானி தேவர்களும் நான் செய்யும் காரியங்களுக்கு காரணர்களேயன்றி நானன்று. நான் பரதந்திரன்.

"யாம் ஸதா ஸர்வ பூதானி ஸ்தாவராணி ச ராணி ச] ஸாயம் ப்ராத: நமஸ்யந்தி ஸா மா ஸந்த்யா அபிரக்ஷது]] ஸ்ரீ ஸாமா சந்த்யா அபிரக்ஷது ஓம் நம:"

பஞ்ச பூதங்களும் ஸமஸ்த ஸ்தாவர பதார்த்தங்கள் ஜங்கம பதார்த்தங்களும் காலை மாலை யாரை நமஸ்கரிக்கின்றனவோ அப்பேர்ப்பட்டவரான, நன்கு த்யானம் செய்யப்படும் காயத்ரீ எனப்பெயருள்ள நாராயணர் என்னை அவசியம் ரக்ஷிக்கட்டும். அவருக்கு நமஸ்காரம்.

"ப்ரம்மண்யோ தேவகிபுத்ரோ ப்ரம்மண்யோ விஷ்ணுரச்யுத:]
ப்ரம்மண்ய: புண்டரீகாக்ஷ: ப்ரம்மண்யோ மதுஸூதன:]]
நமோ ப்ரம்மண்ய தேவாய கோப்ராம்மண ஹிதாயச]
ஜகத் ஹிதாய கிருஷ்ணாய கோவிந்தாய நமோ நம:]]"

தேவகிதேவியின் மகனாய்பிறந்தவன் தான் பரபிரம்மம். விஷ்ணுவே பரபிரம்மம். அச்யுதனெனப் பெயர்கொண்டவனே பரப்ரம்மம். கமலம் போல் கண்ணுள்ளவன் தான் பரபிரம்மம். மது என்னும் அஸுரனைக் கொன்றவன் தான் பரப்ரம்மம். பரப்ராம்மணனும் பசுவுக்கும் பிராம்மணர்

சஜ்ஜநருக்கும் ஹிதத்தைச் செய்பவனும் உலகத்துக்கு ஹிதத்தைச்செய்பவனுமுள்ள வேதத்தால் சொல்லப்படுகிறவனுமான ஸ்ரீ கிருஷ்ணனுக்கு நமஸ்காரம்.

"க்ஷீரேணஸ்நாபிதே தேவி சந்தனேனவிலேபிதே|
பில்வபத்ரார்சிதே தேவி துர்க்கேஹம் சரணம் கத:||
ஸ்ரீ துர்கேஹம் சரணம் கத: ஓம் நம:

க்ஷீராபிஷேகம் பெற்றவளாயும், சந்தனம் பூசிக்கொண்டவளாயும், பில்வ இலைகளால் அர்ச்சிக்கப்பட்டவளாயுமுள்ள மாயா என்னும் துர்க்கா தேவியே! உன்னை சரணம் அடைகிறேன். உனக்கு நமஸ்காரம்.

"உத்தமே சிகரே ஜாதே பூம்யாம் பர்வத மூர்த்தனி |
ப்ராம்மணேப்யோ அப்யனுக்ஞாதா கச்சதேவி யதாஸுகம் |
ஸ்ரீகச்சதேவி யதாஸுகம் ஓம் நம:||
ஆகாசாத் பதிதம் தோயம் யதாகச்சதி ஸாகரம் |
ஸர்வ தேவ நமஸ்கார: கேசவம் ப்ரதிகச்சதி ||
ஸ்ரீகேசவம் ப்ரதிகச்சத்யோம் நமோ நம:||
வாஸனாத் வாஸுதேவஸ்ய வாஸிதம் தே ஜகத்ரயம் |
ஸர்வ பூத நிவாஸோஸி வாஸுதேவ நமோஸ்துதே ||
ஸ்ரீவாஸுதேவ நமோஸ்துதே ஓம் நமோ நம:||
நமோஸ்து அனந்தாய ஸஹஸ்ர மூர்த்தயே ஸஹஸ்ர
பாதாக்ஷி சிரோரு பாஹவே|
ஸஹஸ்ர நாம்னே புருஷாய சாச்வதே ஸஹஸ்ர
கோடி யுகதாரிணே நம:||
சதுஸ்ஸாகர பர்யந்தம் கோ ப்ராம்மணேப்ய:
சுபம் பவது ஓம் சாந்தி. சாந்தி: சாந்தி:"

அதிஉத்தமமான சிகரம்போன்ற சுவேதத்வீபம் அநந்தாஸனமாகிய விமானத்திலும் மேருபர்வத பூமியிலும் உத்தமமான வைகுண்டத்திலும் வியக்தமாயுள்ள க்ரீடாதி குணங்களுள்ளவனே! வேதத்தால்வியக்தமானவனே! பிராம்மணர்களிடமிருந்து அனுமதி பெற்று உன் லீலைக்காக நீ போகலாம். ஆகாயத்தினின்றும் விழும்ஜலம் எவ்வாறு ஸமுத்திரம் சேருகிறதோ அவ்வாறு ஸமஸ்தமான தேவர்களுக்கும் செய்த நமஸ்காரம் அவர்களின் அந்தர்யாமியாயுள்ள ஸ்ரீ கேசவனென நாராயணனைப் போய் சேருகிறது. வியாபகனயிருப்பதன் நிமித்தம் ஹே நாராயணா! நீர் வாசுதேவனுய் ஆனீர். மூன்று லோகங்களும் உன்னால் பிழைக்கின்றன.

ஸமஸ்த பிராணிகளிலும் ஸர்வாந்தர்யாமியாய் இருக்கிறுய். அப்பேர்ப்பட்ட வாசுதேவா உனக்கு நமஸ்காரம். அனந்தாநந்த ரூபியாயும் ஆதி அந்தம் இல்லாதவனும் அனந்தாநந்த பாதங்கள், கண்கள், சிரஸ்ஸு, துடை, பாஹுக்கள் இவைகளைக் கொண்டவனும், அநந்தநாமங்களுள்ளவனும் ஜீவர்களின் அந்தர்யாமியாயிருப்பவனும் நாசமில்லாதிருப்பவனும் அநந்தகோடியுகங்களை ப்ரவர்த்திப்பவனுயுமுள்ள உனக்கு நமஸ்காரம். நான்கு ஸமுத்திரத்தின் நடுவிலிருக்கும் பசுக்களுக்கும் பிராம்மணர்களுக்கும் மங்களமுண்டாகட்டும். மனதின் சாந்தி ஜன்மத்தின் சாந்தி பாபத்தின் சாந்தி ஆகட்டும். இப்பேர்ப்பட்ட கோத்திரத்திலுண்டான நான் நமஸ்காரம் செய்கிறேன் என்று தன் கோத்திரத்தைச் சொல்லி நமஸ்கரிக்கவேண்டும். இவ்வாறே சிலஉபாயமான மாறுதல்களுடன் மாலை ஸந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டும்.

(தொடரும்.)

விளம்பரம்.

என் அருமை மகன் ராமசந்திரனுடைய அகால மரணத்தை முன்னிட்டு, இம்மித்திரனின் முன் 8வது வாலியம் 373ம் பக்கத்தின் தொடர்ச்சியாக என் சொந்த லைப்ரெரியிலிருந்து அடியிற்கண்ட ஜாப்தாவிலுள்ள புஸ்தகங்களை இனமாய் கொடுக்கப்படும். அவைகளைப் பெற விரும்புவோர் இன்று முதல் 2 மாதத்திற்குள் நமக்கு தேவையான புஸ்தகங்களை விவரமாய்க்கண்டும் பதிலறிய ஸ்டாம்பு அனுப்புவித்தும் தம் முழுவிலாஸத்துடனும், தம் சொந்த கையெழுத்துடனும் எனக்கு எழுதி அனுப்பவேண்டும். [i] வது ஜாபிதாவிலுள்ள புஸ்தகங்களை பொது லைப்ரரிகளுக்கும், அடியிற்கண்ட [ii] வது ஜாபிதாவிலுள்ளவைகளை பொதுஜனங்களுக்கும் லைப்ரரிகளுக்கும்இனமாகக் கொடுக்கப்படும். 2 மாதம் பூரா கழிந்தபின் முன்னடி அறிவித்து ஆவரவர்கள் சிலவில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். இம்மித்திரனின் வாசகர்கள் தங்களுக்கு தெரிந்த பண்டிதர்கள் வித்யார்த்திகள் லைப்ரெரி அதிகாரிகளுக்கு அறிவித்து புத்தகங்கள் பக்தோபஸ்திலை எப்போதும் உபயோகத்திலிருக்கச் செய்ய பிரார்த்திக்கிறேன்.

பாகவத ரங்கநாதாசாரியார்.

II-வது ஜாபிதா. [இறும்]

காவிய நாடகாதி கிரந்தங்கள். [i]

[அ—அச்சுப்பிரதி; லி—லிகிதப்பிரதி; நா—தேவநாகா எழுத்து கி—கிரந்த எழுத்து]

66	அமரகோசம் வியாக்யானத்துடன்	அ. நா.	1
67	,, மூலம்	அ. கி.	1
68	அமருகம் ஸவ்யாக்யானம்	அ. கி.	1
69	,, மூலம்	லி. நா.	1
70	அலங்கார சந்திரிகை		
	குவலயாநந்தத்துடன்	லி. நா.	1
71	சந்திரா லோகம்	லி. நா.	1
72	விருத்தரத்நாகரம் ஸவ்யாக்யானம்	அ. கி.	1
73	விச்வகுணாதர்சசம்பு மூலம்	லி. நா.	1
74	,,	அ. நா.	2
75	போஜ சம்பு	அ. கி.	1
76	ராமபத்ர விஜய சம்பு	அ. கி.	1
77	பாரத சம்பு ஸவ்யாக்யானம்	அ. கி.	1
78	,, மூலம்	லி. நா.	1
79	மூகபஞ்சாசதி	அ. நா.	1
80	காவ்யப்ரகாசம்	அ. நா.	1
81	ரகுவம்சம் 1 முதல் 6 ஸர்க்கம்		
	ஸவ்யாக்யானம்	அ. கி.	1
82	,, 2, 4, 5, 9, 11 ஸர்க்கம்	அ. நா.	1
83	மாகம் 1, 3 ஸர்க்கங்கள் ஸவ்யாக்யானம்	அ. நா.	1
84	கடகர்பரம்	லி. நா.	1
85	முகுந்தானந்தபாணம்	லி. நா.	1
86	ப்ரதாபருத்ரீயம்	அ. நா.	1
87	புஷ்பபாணவிலாஸம் ஸவ்யாக்யானம்	அ. கி.	1
88	சகுந்தலா நாடகம்	அ. நா.	1
89	விக்ரமோர்வசீயம் நாடகம்	அ. நா.	1
90	மாளவிகாக்னிமித்ரம் நாடகம்	அ. நா.	1
91	அநர்க்கராகவம் நாடகம்	அ. கி.	1
92	தனஞ்ஜய விஜயம் நாடகம்	அ. நா.	1
93	வேணீ ஸம்ஹாரம் நாடகம்	அ. நா.	1
94	ப்ரஸன்னராகவம் நாடகம்	அ. நா.	1

95	பார்வதி பரிணயம் நாடகம்	அ. நா.	1
96	ரதி விஜயம் நாடகம்	அ. நா.	1
97	கம்ஸவதம் நாடகம்	அ. நா.	1
98	சிவகர்ணாமிர்தம்	அ. கி.	1
		ஆக.	34

இதர சாஸ்திர கிரந்தங்கள். [ii]

99	தர்க்க ஸங்கிரஹம் தீபிகாஸஹிதம்	அ. கி.	1
100	,,	லி. நா.	1
101	தினகரிஸவியாக்யானம்	லி. நா.	1
102	முக்தாவளி	லி. நா.	2
103	பதார்த்த தீபிகா	லி. நா.	1
104	பதார்த்தமாலா	லி. நா.	2
105	திதிகாண்டயம்	லி. நா.	1
106	தீதிதி	லி. நா.	1
107	சிந்தாமணி	லி. நா.	1
108	சக்திவாதம்	லி. நா.	1
109	,, டீகை	லி. நா.	1
110	சதுர்தசலக்ஷணி	லி. நா.	1
111	திதிகண்டயம்	லி. நா.	1
112	ராமருத்ரீயம்	லி. நா.	1
113	நியாயரத்தினம்	அ. நா.	1
114	கதாதரீ	லி. நா.	1
115	ஆமோதம்	லி. நா.	1
116	காரிகாவளி	லி. நா.	1
117	பஞ்சஸந்தி	லி. நா.	1
118	பாலபோதினி	லி. நா.	1
119	அஷ்டாத்யாயீ	லி. நா.	1
120	சப்தகாரிகா	லி. நா.	1
121	வ்யக்த்யவதாரம்	அ. நா.	1
122	சித்தாந்த கௌமுதி	அ. கி.	1
123	கிருஹ்யாக்னிசோ[illegible]	அ. கி.	1
		ஆக.	27

தமிழ்நாடு ஆவணக் காப்பக

சங்கரலீலா விலாஸம்.

(முன் 8வது வாலியம் 298ம் பக்கம் தொடர்ச்சி)

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்புராவ் M. A. அவர்கள் எழுதுவதாவது:—

இதைக்கேட்டவுடன் சபையில் வீற்றிருந்த சிலர் மௌனமாய் இருந்தனர். சிலர் சந்தோஷத்துடன் கையைத் தட்டினர். சங்கர பட்டரென்பவரும் த்ரிவிக்ரம பண்டிதாசாரியாரின் மகனான நாராயண பண்டிதாசாரியாரும் ஆனந்த பாஷ்பம் பெருகவிட்டனர் இவர்கள் விஷ்ணு தீக்ஷையை மானஸிகமாய் ஏற்றுக்கொண்டனர். இப்படியிருக்க அச்சபையிலுள்ள குல விருத்தரான ஓர் ஸ்மார்த்த பிராம்மணர் இவ்வாறு கேள்வி கேட்டார். "ஏ குழந்தாய் நீ சொன்னதெல்லாம் சரிதான் நானும் இப்படித்தான் நம்பியிருக்கிறேன். நீயும் ஐக்ய உபாஸனையை செய்யாதே, நாராயணனையே பூஜை செய். உன் தந்தை நாராயண னும் இப்படித்தான் சொல்லிக்கொண்டிருந்தான். அவனுக்கும் இதுவே ஸம்மதமானது. என்னமோ நம்மவர்கள் கந்தபுராணத்தை எழுதிக் கொண்டு ஐக்யோபாஸனை செய்யவேண்டுமென்கிறார்கள். நம்மவர்கள் சொல்வது என் மனதிற்கு வருவதில்லை சீ சீ! நாம் அனுஷ்டிப்பது சரியல்லதான். நீயோ புத்திமான் நன்றாய் எடுத்துச் சொல்லுகிறாய். அதைப்பற்றி இனி பேசுவதில்லை. நான் கேட்பது என்னவென்றால் நீ ஏன் முத்திரையைப் போட்டுக் கொள்கிறாய்? அவ்வாறு போட்டுக் கொள்வதால் உனக்கு என்ன லாபம்? நாமத்தையும் முத்திரையையும் போட்டுக்கொள்ளவேண்டாமே எனக்கு இதில் சந்தேகமிருக்கிறது. இதற்கு நீ சரியாய் என் மனதுக்கு பிடித்தமாய் சொல்லிவிட்டால் போதும். என் வேலை முடிந்தது. உன் இஷ்டப்படி செய்" என்று சொன்னார். அதற்கு த்ரிவிக்ரம பண்டிதாசாரியார் இவ்வாறு பதில் சொன்னார், "தாதாவே! நீங்கள் சொல்வதை நீங்களே யோசனை செய்யுங்கள். உலகில் பிள்ளையாய் இருப்பவன் தந்தையின் ஆசானைகளைச் செய்யாமலும், தந்தை கொடுத்த வஸ்திரத்தை உடுக்காமலும் தந்தையிட்ட அன்னத்தை புசிக்காமலும் அவனுக்கு சம்மதமில்லாமலிருக்கும் நடவடிக்கைகளைக்கொண்டால் தந்தைக்கு சந்தோஷமாய் இருக்குமா? உடனே கோபம் வந்து வீட்டைவிட்டு வெளியே விரட்டமாட்டானோ? சேவகனாயிருப்பவன் அவனுக்கு கொடுத்திருக்கும் உடுப்பைப் போட்டுக்

கொள்ளாமல் கச்சேரிக்குள் நுழைய முடியுமா? அதுபோல் எங்கள் பிதாவான விஷ்ணு தன் பூஜார்த்தமாய் தனக்கு பிரியமான ஊர்த்வ புண்ட்ரங்கள் (நாமங்கள்) தரிப்பது தப்த சக்கரத்தை (சூடான சக்ர முத்திரையை) தரிப்பது, துளஸீ மாலையைத் தரிப்பது முதலான சில அனுஷ்டானங்களை விதித்திருக்கிறார். அபௌருஷேயமான வேதத்திலேயே இவைகளெல்லாம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன [குறிப்பு:—இது சம்பந்தமமன பல பிரமாணங்கள் தனி நிரூபத்தில் பிரசுரிக்கப்படும் பார்] உங்கள் மனதில் சந்தேகம் நீங்க தற்போது ஸ்வல்ப பாகம் எடுத்துக் காட்டுகிறேன். பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்று நான்கு வர்ணங்கள் இருக்கின்றனவேயல்லாது ஐந்தாம் வர்ணமில்லையல்லவா? ஆக நாமெல்லோரும் பிராம்மணர்கள்தானே! இந்த பிராம்மணர்களில் ஊர்த்வ புண்ட்ரத்தை தரித்து முத்திரைகளைப் போட்டுக் கொள்வதால் என் பிராம்மண்யம் தொலைகிறதென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அது சரியல்ல எப்படி என்றால் நாராயணன் உத்தமன் என்பது வைதிகமானது, வேதத்தால் சொல்லப்பட்டது. ஐக்யோபாஸனையாகட்டும் சிவன் உத்தமன் என்பது ஆகட்டும், வைதிகம் அல்ல வேதத்தில் சொல்லப்பட்டதல்ல என்று நீங்கள் ஒப்புக்கொண்டபின் விஷ்ணு ஸர்வோத்தமர் என்று உபாஸிப்பது ஸாத்விகமென்றும் புண்யகரமென்றும் நீங்கள் ஒப்புக்கொண்டதாயிற்று. அதற்கு ஏற்றதான அல்லது அப்பேர்ப்பட்ட உபாஸனைக்கு அங்கபூதமான தப்தமுத்ரா தாரணம் வைதிகம் ஸாத்விகமென்று ஏற்படுகிறது. மேலும் ஊர்த்வ புண்டரம் தப்த சக்கரம் முதலியவை இல்லாதிருப்பவனால் செய்யப்பட்ட ஸேவை வேதவேத்யனான விஷ்ணுவுக்கு போய்ச்சேராது. முத்திரை இல்லாதவனுக்கு பிராம்மண்யம் போய்விடுமென்றும் வேதாந்தாதிகாரம் போய்விடுமென்றும் ஸ்பஷ்டமான அநேக வசனங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்றை இதோ பாருங்கள் (அச்சாயிருக்கும்) விருத்தஹாரீதஸ்மிருதி 20ம் அத்தியாயத்தில் காணப்படுவதாவது:—

அங்கயித்வா ந சக்ரேண யத் கிஞ்சித் கர்ம ஸஞ்சரேத் । தத் ஸர்வம் யாதி வைகல்யம் இஷ்டா பூர்த்தாதிகம் ந்ருப ॥ அசக்ரதாரீ விப்ரஸ்து ஸர்வகர்மஸு கர்ஹித: । அவைஷ்ணவ: ஸமாபன்னோ நரகம் சாதிகச்சாதி ॥ சக்ராதி சின்ஹாரஹிதம் ப்ராகிருதம் கலுஷான்விதம் । அவைஷ்ணவம் து தம் தூராத் ச்வபாகமிவ ஸம்த்யஜேத் । அவைஷ்ணவ: து யோ விப்ர: ச்வபாகாத் அதம: ஸ்ம்ருத:। அச்ராத்சேதயோஹ்யபாங்க்த்தேயோ ரௌரவம் நரகம் வ்ரஜேத் । அவைஷ்ணவஸ்து

யோவிப்ர: ஸர்வதர்மயுதோபிவா । ஸபாஷண்டேதி விக்ஞேய: ஸர்வ கர்ம ஸுபஹிஷ்கார்ஹதி । தஸ்மாச்சக்ரம் விதானேன தப்தம் வைதாரயேத் த்விஜ: । அதாயுதாஸோ அஸுரா அதேவா இதிவைச்ருதி: । பவித்ர மிதி சைவாக்னி: அக்னிர்வை சக்ர முச்யதே । தக்ஷிணேது புஜே விப்ரோ பிப்ருயாத்வை ஸுதர்சனம் । ஸவ்யேது சங்கம் பிப்ருயாத் இதி வேதவிதோ விது: । இத்யாதி ச்ருதிபி: ப்ரோக்தம் விஷ்ணோச் சக்ரஸ்ய தாரணம் । புராணேஷ்விதிஹாஸேஷு ஸாத்விகேஷு ஸ்ம்ருதிஷ்வபி । ருத்ரார்ச்சனம் த்ரிபுண்ட்ரஸ்ய தாரணம் யத்ர த்ருச்யதே । தச் சூத்ராணாம் விதி: ப்ரோக்த: நத்விஜானாம் கதாசன । ஸபஸ்மதாரயேத் விப்ர: பாமாபத்கதோபிவா । மோஹாத்வை பிப்ருயாத் யோ வை ஸ ஸுராபோ பவேத் த்ருவம் । திர்யக் புண்ட்ரதரம் விப்ரம் பட்டாகாரதரம் ததா । ச்வபாகமிவ நேக்ஷேத நஸம்பாஷேத குத்ரசித் ॥

இதன் பொருளாவது:— சக்ர முத்திரையைப் போட்டுக்கொள்ளாமல் ஜபம் தானம் தர்மம் முதலான எந்த வைதிக கர்மாவைச் செய்தாலும் எல்லாம் வீண்தான். சக்ர முத்திரையைத் தரிக்காத பிராம்மணன் எந்த காரியத்திற்கும் உதவாதவனாய் அவைஷ்ணவன் என்றுகி நரகத்தையே அடைவான். சக்ர முத்திரை முதலான அடையாளங்களில்லாதவனும் பிரகிருதி ஸம்பந்தமான தோஷங் கொண்டவனுமான பிராம்மணன் அவைஷ்ணவனாகிறான். அவனைச் சண்டாளன் போல் விலக்கவேண்டும். அவைஷ்ணவன் சண்டாளனைவிட அதமன் என்று பெரியோர்களால் எண்ணப்படுகிறான். சிரார்த்தத்திற்கு அருகனாக மாட்டான். கூட உட்கார்ந்து போஜனம் செய்ய அருகனாகமாட்டான். அவன் ரௌரவ நரகத்தையே அடைவான். அவன் எல்லா தர்மங்களைச் செய்தவனாயிருந்தாலும் அவைஷ்ணவனாயிருந்தால் அவன் பாஷண்டி எனப்படுகிறான். எல்லா வைதிக கர்மாக்களுக்கும் உதவாதவன். ஆகவே விதி பூர்வகமாய் அக்னியில் சுட்டக்ர முத்திரையை பிராமணன் தரிக்கவேண்டியது அவசியம். அனாயுதாஸோ அஸுரா அதேவா என்று சுருதி இருக்கிறது. அக்னி பரிசுத்தமானதல்லவா? சக்ரம்தான் அக்னி என்று வேதத்தால் சொல்லப்படுகிறது. பிராம்மணன் வலது புஜத்தில் சக்ர முத்திரையையும் இடது புஜத்தில் சங்க முத்திரையையும் தரிக்க வேண்டுமென்று, வேதவித்துக்கள் அறிவிக்கின்றனர். என்றிவ்வாறு விஷ்ணுவின் சக்ர முத்திரையை தரிப்பது வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸாத்விகமான புராணங்களிலேயும் இதிஹாஸங்களிலேயும் ஸ்மிருதிகளிலேயும் சக்ரதாரணம் சொல்லப்பட்டிருக்கிறது. பரமசிவனை அர்ச்சிக்கவேண்டுமென்றும் த்ரிபுண்டரத்தை (முப்பட்டை நாமத்தை

தரிக்கவேண்டுமென்றும் எங்கு காணப்படுகிறதோ அது சூத்திரர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறதேயல்லாமல் அது பிராம்மணர்களுக்கு விதிக்கப்பட்டதாய் ஒரு போதுமல்ல. மகா ஆபத்தை அடைந்திருந்தபோதிலும் பிராம்மணன் பஸ்மத்தை அதாவது விபூதியை தரிக்கலாகாது. புத்தி தடுமாறி அதுவே சரியென்று எண்ணி பிராம்மணன் தரித்தானென்றால் அவன் ஸுராபானம் செய்த பாபமுடையவனாவான். திரியக் புண்டரதாரி அதாவது குறுக்கு நாமம் போடும் பிராம்மணர்களையும் பட்டையாக நாமம் போட்டுக்கொள்ளும் பிராம்மணர்களையும் சண்டாளனைப் பார்க்கத் தகாததுபோல் கண்ணெடுத்தும் பார்க்கலாகாது. எந்த இடத்திலேயும் அவர்களுடன் பேசலாகாது.

என்றிவ்வாறு விருத்தஹாரீஸ்மிருதியில் இருக்கிறது. ஸ்மிருதி வசனத்தை அனுஸரிப்பவர்களல்லவோ ஸ்மார்த்தர்கள். மேலும் ஸ்மிருதி என்பது புராணங்களைவிட பிரபலமானது. மேலும் இந்த ஸ்மிருதி சுருதிகளை உதாஹரித்து தப்த முத்திரை தாரணத்தை விதிப்பதால் சாம்ப சாஸ்திரிகள் உதாஹரணம் செய்திருக்கும் துர்பலமான தாமஸ புராணங்களின் வசனங்களை அழித்துப்போடும் சுருதி ஸ்மிருதி விரோதே து சுருதிரேவ கரீயஸீ என்னும் மனு வசனத்தின்படி இந்த ஸ்மிருதியில் காட்டியிருக்கும் பவித்ரமித்யக்னி: அனயுநாஸோ தக்ஷிணேது புஜே விப்ரோ முதலான அநேக சுருதிகளுக்கு விருத்தமாயிருப்பதால் தப்த சக்ர தாரணத்தை நிஷேதிக்கும் அநேக வசனங்களை சாம்ப சாஸ்திரிகள் காட்டினாலும் அவைகள் ஏற்றுக்கொள்ளத்தகுந்ததல்ல.

மேலும் பவித்ர சுருதி சக்ரத்தைச் சொல்வதாய் இந்த ஸ்மிருதியிலேயே சொல்லப்பட்டிருக்கிறது, ஆகையால் சுருதிக்கு விருத்தமாய் இல்லாததும், மேலும் சுருதிகளுக்கு அனுகூலமாயிருப்பதுமான இந்த பிரஸித்த ஸ்மிருதியானது எல்லா வர்ணாசிரமத்தார்களும் தப்த சக்ரத்தை தரிக்கவேண்டுமென்பதாய் சொல்லியிருப்பதைக்கொண்டும தரிக்காமலிருப்பவர்கள் பிராம்மண்யத்தை இழப்பார்கள் என்று சொல்லியிருப்பதைக்கொண்டும் தப்த சக்ர தாரணம் உபநயனம்போல் வேதோக்தமாய் பிராம்மண்யம் சித்திக்க அவசியம் ஆசரிக்கக்கூடியதான ஸத்தர்மம் என்று சித்திக்கிறது.

மேலும் எல்லா சாஸ்திரங்களுக்கும் இந்த தர்மமென்று இந்த ஸ்மிருதியே சொல்லுகிறது. சுருதிகளிலேயும் ஸாத்விகமான புராண இதிஹாஸ ஸ்மிருதிகளிலேயும் தப்த சக்ர தாரணம் சொல்லப்பட்டிருப்பதாயும் இந்த ஸ்மிருதியே உறுதி கூறுகிறது.

(தொடரும்)

LETTERS TO THE EDITOR.

2—8—1936

It is with very great concern that I noticed the irreparable calamity that has befallen to Vedamurthi Adyam Bhagavatha Ranganathachariar of Kumbakonam.

When, about 8 years back, he met me at Coimbatore and requested me to become a subscriber of his journal "Madhwa Mitran" I blurted out that such a venture is bound to have mushroom existence. But the way in which the above gentleman tried to dispel the above idea expressed by me, impressed me strongly and I have been a regular subscriber ever since.

The journal is very ably conducted and has done invaluable service to the Madhwas who are rapidly going down in social scale as compared with the position they held some decades back. The reason for this degradation is because the majority of Madhwas have not appreciated the spirit of the teachings of Srimad Acharya. It is not possible for all to get firsth-and knowledge from Sanskrit works themselves because of lack of adequate knowledge of that language.

The main mission of "Madhwa Mitran" has been to instal in the minds of the readers the purport of Madhwa Sanskrit literature in the leading vernacular of South India in a lucid form. It wil be indeed a catastrophe if by any reason the above privilege of studying "Madhwa Mitran" is withheld from the Madhwa public.

The yearly subscription is only Rs. three and the Editor should be conducting it till now at great personal and financial sacrifice. I am fully convinced that it is the duty of every Madhwa to try his best to become a member of the above journal and thereby enable the Editor to continue the journal for a long time to come

nd thus induce him to change his intention to stop the ournal with the end of the sacred Mahabharatha Tatarya Nirnayam. This is a critical occasion in the life f "Madhwa Mitran" and the remedy lies is the hearty esponse of Madhwas in large numbers.

May the Lord Srinivasa give the Editor peace of nind and accord to him long life and health to fulfil is mission for the Madwa cause.

Yours sincerely,

(Sd) D. S. Raja Rao,

Additional Subordinate Judge,

TINNEVELLY.

கும்பகோணம் வேதமூர்த்தி ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரி பார் அவர்களுக்கு நேர்ந்த அபரிஹார்யமான துக்க சம்பவத்தை மிகவும் அதிகமான கவலையுடன் கவனித்தேன். சுமார் 8 வருஷத்துக்கு முன் என்னை கோயம்புத்தூரில் சந்தித்து அவருடைய பத்திரிகையான மாத்வ மித்திரனுக்கு சந்தாதாரராய்ச் சேரும்படி என்னைக் கேட்டதற்கு இந்த ஸாஹஸமான காரியம் நீடித்து நடைபெறாமல் சீக்கிரம் நசித்துப்போகும் என்று சொல்லி சந்தாதாரனாய்ச் சேர பின் தயங்கினேன். ஆனால் நான் இவ்வாறு சொன்னவுடன் நான் கொண்டிருக்கும் மேற்சொன்ன எண்ணத்தைப் போக்க அவர் எத்தனப்பட்டு சொன்ன பதில் என் மனதில் மிகவும் அழுத்தமாய்ப் பதிந்து நல்ல அபிப்பிராயத்தை உண்டு பண்ணி நான் உடனே சந்தாதாரனாய்ச் சேர்ந்ததுமன்றி அன்று முதல் இன்றுவரையில் இப்பத்திரிகைக்கு தொடர்ந்து சந்தாதாரனாய் இருந்துவருகிறேன்.

மாத்வ மித்திரன் பத்திரிகை மிகவும் சிலாக்யமாய் நடத்தப்பட்டு வருகிறதுமல்லாமல் சில பத்து வருஷங்களுக்குமுன்பு இருந்த நிலைமையைவிட சமூக வாழ்க்கையில் க்ஷீண தசைக்கு வெகு விரைவாய்ப் போய்க்கொண்டிருக்கும் நம் மாத்வ சமூகத்திற்கு அமூல்யமான சேவையை இப்பத்திரிகை செய்திருக்கிறது. மாத்வ சமூகம் இவ்வாறு அதோகதியை அடைந்ததற்கு காரணம் மாத்வர்களில் பெரும்பான்மையோர் ஜகத் குருவான ஸ்ரீமத் ஆசாரியாருடைய உபதேச தத்துவத்தை மதிக்கவில்லை. எல்லோருக்குமே போதுமான ஸம்ஸ்கிருத ஞானம் இல்லாததால் ஸம்ஸ்கிருத நூல்களிலிருந்து அவருடைய சித்தாந்தத்தை அறிந்து கொள்வது எல்லோருக்கும் ஸாத்யமன்று.

மாத்வ மித்திரனின் முக்கிய பிரசார வேலை யாதெனில் மத்வ மதத்து ஸம்ஸ்கிருத நூல்களின் தாத்பரியத்தை தென்னாட்டு முக்கிய பாஷையாகிய தமிழில் தெளிவாய்ச்சொல்லி வாசகர்களின் மனதில் பதியவைப்பதுதான். ஆகையால் மாத்வ மித்திரன் பத்திரிகையும் மகா ஸ்ரீ எக்காரணத்தை முன்னிட்டாவது மாத்வ மகா ஜனங்களுக்கு கொடுபடாமல் நிறுத்திக்கொள்ளப்படுமானால் அது ஓர் துக்க சம்பவமே தான்.

மாத்வ மித்திரனுக்கு வருஷ சந்தா ரூபாய் மூன்றுதான். இருப்பதால் இதுவரையில் இப்பத்திரிகையின் ஆசிரியர் இப்பத்திரிகையை மிக்க கஷ்டத்துடனும் விசேஷ பொருள் நஷ்டத்துடனும் நடத்தியிருக்கவேண்டும். ஆகலால் ஒவ்வொரு மத்வ மதத்தாரும் இப்பத்திரிகைக்கு சந்தாதாரராய் சேர தம்மாலியன்றமட்டு எத்தனப்பட்டு சந்தாதாரராய்ச் சேர்ந்து வெகுகாலம் இப்பத்திரிகையை நடத்த இதன் ஆசிரியருக்கு ஆதரவு அளித்து புண்யகரமான மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தின் முடிவுடன் இப்பத்திரிகையை நிறுத்திவிடும் அவருடைய யோசனையை மாற்றிக்கொள்ள அவருக்கு உத்தேஜனம் செய்வது ஒவ்வொரு மாத்வனுடைய கடமை என்று எனக்கு பூரா நம்பிக்கை உண்டாயிருக்கிறது. மாத்வ மித்திரனின் வாழ்நாளில் இது நெருக்கடியான சந்தர்ப்பம். இதை பரிகாரம் செய்யும் உபாயம் மாத்வர்கள் முழு மனதுடன் ஏற்றுக்கொண்டு ஏராளமாய்ச் சந்தாதாரர்களாய்ச் சேருவதிலிருக்கிறது.

லோககாரகரான ஸ்ரீ வியாஸர் இப்பத்திரிகையின் ஆசிரியருக்கு மனச் சமாதானத்தைக்கொடுத்து மாத்வ உலகத்தின் நன்மைக்காக அவர் கைகொண்டிருக்கும் பிரசார வேலையை பூர்த்தி செய்து கொடுக்க அவருக்கு தீர்க்க ஆயுளையும் திடகாத்திரத்தையும் [illegible]ருள்வாராக.

டி. எஸ். ராஜாராவ்,
ஸப் ஜட்ஜ்
திருநெல்வேலி.

விசேஷ தினங்கள்

அதிக பாத்ரபத மாஸம் (மலமாஸம்)

28—8—36	சுக்ரவாரம்	ஏகாதசி உப.
30—8—36	பாநுவாரம்	சிரவண உப. விஷ்ணுபஞ்ச உப.
1—9—36	மங்களவாரம்	பௌர்ணமி.
11—9—36	சுக்ரவாரம்	ஏகாதசி உப.
15—9—36	மங்களவாரம்	அமாவாசை திலதர்ப்பணம் விஷ்ணு உப. (மலமாஸம் முடி

208166

மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் கண்டோர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற் கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

த்வைதமத விளக்கம்:—ஸ்ரீமத்விமத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ...ஷ்யம் பாகவதாங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. ...தல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது ...யார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் ...போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1—8—0 தபாற்கூலி 0—6—0.

...ரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலி ...யைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். Certificate of Posting பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.